# குடியியற் கல்வி

## தரம் - 7

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2015
இரண்டாம் பதிப்பு - 2016
மூன்றாம் பதிப்பு - 2017
நான்காம் பதிப்பு - 2018
ஐந்தாம் பதிப்பு - 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0109-8

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 439/3/3, ஹோகண்டராசாலை, பன்னிபிட்டி
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



அகில விராஜ் காரியவசம்
கல்வி அமைச்சர்

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தரம் 6 முதல் தரம் 11 வரை சுமார் 91 வகையான பாடநூல்கள் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
(ஆணையாளர் (அபிவிருத்தி
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## இணைப்பாக்கம்

**யூ. எல். உவைஸ்**
உதவி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் பிரேம குமார த சில்வா**
தலைவர், சமூக விஞ்ஞானப் பிரிவு, கொழும்புப் பல்கலைக்கழகம்

**தம்ம திஸாநாயக**
சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்

**வீ. தியாகராஜா**
சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகர், சமூகக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

**ஏ.எல்.எஸ். அபே விக்கிரம**
சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

**யூ. எல். உவைஸ்**
உதவி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

**எம். ஏ. எம். ஹூவைஸ்**
ஆசிரியர், அல்-சபா மகா வித்தியாலயம், வத்தேகெதர, பொல்கொல்ல

**எஸ். அன்ரன் அல்வினஸ்**
ஆசிரியர், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா

**ஐ. எல். ஐ. ரஸீம்**
ஆசிரியர், கமு/ சது/ அஷ்றப் மத்திய கல்லூரி, இறக்காமம்

**சீ.எஸ். ஜயசிங்க**
ஆசிரிய வளநிலைய முகாமையாளர் (ஓய்வு), ஹொரண

**எம்.ஏ.கிங்ஸ்லி பிரியந்த**
விரிவுரையாளர், றுகுணு கல்வியற் கல்லூரி வலஹந்துவ

**கே.ஏ.நிலந்த புஸ்ப குமார**
ஆசிரியர், பொல்கொட மகா வித்தியாலயம்

## மொழிப் பதிப்பாசிரியர்

**நாராயணன் மல்லிகாதேவி**
விரிவுரையாளர், பௌத்த பாளி பல்கலைக்கழகம், ஹோமாகம

## சரவை நோக்கு

**அருட் சகோதரி மேரி டொனேட்டா**
அதிபர் சேவை (ஓய்வு)

**எம். ஏ. நூருல் பரீஹா**
ஆசிரியர், பாத்திமா முஸ்லிம் மகளீர் கல்லூரி, கொழும்பு

## இறுதி மதிப்பீடு

**கலாநிதி எப்.எம். நவாஸ்தீன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

## சித்திரம், அட்டைப் படம்

**சால்ஸ் ரணதுங்க**
பிரதிக் கல்விப் பணிப்பாளர், நுண்கலைப் பிரிவு
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் (ஓய்வு)

## கணினி வடிவமைப்பு

**எஸ். ஐஸ்வரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. எமது குடும்பம் | 1 - 46 |
| 2. எமது சமூகம் | 47 - 78 |
| 3. எமது கலாசாரம் | 79 - 115 |



# 1 எமது குடும்பம்

## அறிமுகம்

மனிதன் பிறந்ததும் முதன்முதலில் உறுப்பினராகும் சமூக அலகு குடும்பமாகும். பல குடும்ப அலகுகள் ஒன்றிணைவதன் மூலம் சமூகம் உருவாகின்றது.

குடும்ப உறுப்பினர் என்ற வகையில் சிறுபராயம் முதல் உங்களின் விருத்தியுற்ற நற்பழக்கவழக்கங்கள், எதிர்காலத்தில் நற்பிரசையாக வாழ்வதற்கு உங்களுக்கு உதவும். வாழ்வின் பல்வேறு சவால்களையும் துணிந்து எதிர்கொள்வதற்கும் பயனுள்ள வாழ்க்கைக் குறிக்கோள்களைக் கட்டியெழுப்பி அவற்றை அடைந்து கொள்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவது உங்களது இலக்காக இருத்தல் வேண்டும்.

இப்பாட அலகைக் கற்பதன் மூலம், குடும்ப உறுப்பினர் என்ற முறையில் சிறப்பான சமூக வாழ்க்கையை வாழவும் திறமைகளை மேலும் விருத்திசெய்து கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் இயலுமானதாக அமையும்.

நாம் வாழும் சமூகம், பல குடும்ப அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் சிறிய அலகு குடும்பமாகும். ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்தது முதல் குடும்பத்தின் ஓர் உறுப்பினனாகக் கருதப்படுகின்றான். எமது வாழ்நாள் முழுதும் குடும்பத்துடனான உறவுத் தொடர்புகள் மூலமே சென்று கொண்டிருக்கின்றது.

சமூகத்தில் காணப்படும் குடும்பங்கள் யாவும் தனிநபர்களின் கூட்டாகும். குடும்ப உறுப்பினர்களின் நெருங்கிய தொடர்புகள் ஒவ்வொருவரிடையேயும் நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. குடும்ப உறுப்பினர்களிடையேயான தமது தேவைகளை எவ்வேளையிலும் நிறைவேற்றவும் உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்ளவும் குடும்பங்கள் உதவுகின்றன. குடும்ப உறுப்பினர்கள் நற்செயல்களைப் புரிவதற்கு குடும்பங்களே ஒத்தாசைகள் புரிகின்றன.

நடைமுறையிலுள்ள குடும்பங்களைக் குடும்ப உறுப்பினர்களின் தன்மைக்கேற்ப இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- கருக் குடும்பம் (தனிக் குடும்பம்)
- விரிந்த குடும்பம் (கூட்டுக் குடும்பம்)

### கருக் குடும்பம் (தனிக் குடும்பம்)


உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றி நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் குடும்பம், அம்மா, அப்பா, பிள்ளைகள் ஆகியோரை மட்டும் கொண்ட குடும்பமாக இருக்கலாம். அவ்வாறு அம்மா, அப்பா, பிள்ளைகள் மட்டும் சேர்ந்து வாழும் குடும்பம் தனிக் குடும்பம் (கருக் குடும்பம்) எனப்படும்.



உரு 1.1
கருக் குடும்பம்

### விரிந்த குடும்பம் (கூட்டுக் குடும்பம்)

அம்மா, அப்பா, பிள்ளைகள், அப்பாவின் குடும்ப உறுப்பினர்களில் சிலர் அல்லது அம்மாவின் குடும்ப உறுப்பினர்களில் சிலர் இணைந்து ஒன்றாக வாழும் குடும்பங்களும் எமது சமூக அமைப்பில் காணப்படுகின்றன. சிலவேளைகளில் உங்கள் குடும்பமும் இதே போன்றதொரு குடும்பமாக இருக்கலாம். இக்குடும்பமே விரிந்த குடும்பம் எனப்படும்.



உரு 1.2
விரிந்த குடும்பம்

மூன்று தலைமுறைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் பலரைக் கொண்ட குடும்ப அலகினை விரிந்த குடும்பம் எனலாம்.

## விரிந்த குடும்பத்தின் சிறப்பம்சங்கள்

- குடும்ப உறுப்பினர்களின் தொகை அதிகமாக இருப்பதனால் குடும்பத்தின் பலமும் சக்தியும் அதிகமாகக் காணப்படும்.

- குடும்பத்தின் அன்றாடத் தேவைகள் மற்றும் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது இலகுவாக இருக்கும்.



உரு 1.3
வீதியைக் கடக்க உதவிசெய்யும் பிள்ளை

- பிள்ளைகளுக்கு பெற்றோர்களினதும் ஏனைய உறுப்பினர்களினதும் அன்பும் அரவணைப்பும் பாது காப்பும் கிடைக்கும்.

- குடும்பத்திலுள்ள முதியவர்களுக்கு மற்றவர்களின் அன்பும் ஆதரவும் பாதுகாப்பும் மற்றும் உதவி, ஒத்தாசைகளும் கிடைக்கும்.

- முதியவர்களைக் கவனித்தல், மதிப்பளித்தல், பாதுகாப்பு வழங்குதல் போன்ற நல்ல பண்புகளுக்கு சிறுபராயத்திலிருந்தே பிள்ளைகள் பழக்கப்படுவார்கள்.



உரு 1.4
குடும்ப உறுப்பினர்கள் இணைந்து வீட்டுத் தோட்டதில் வேலை செய்தல்

- இளைய தலைமுறையினருக்கு தத்தமது கலாசார விழுமியங்கள் குடும்பத்தில் உள்ள முதியவர்கள் மூலம் கடத்தப்படும்.

- பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப் படுவதனால் குடும்பத்தின் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

- பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு குடும்ப உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும்.

- வெளிச் சமூகத்துடனும் குடும்ப உறுப்பினர்களிடையேயும் குடும்பத் தொடர்புகளையும் உறவுகளையும் மேம்படுத்தக் கூடியதாக இருக்கும்.

கூட்டுக்குடும்ப உறுப்பினர்களாக வாழ்வதனால் இத்தகைய பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. பெற்றோர் தூரப் பிரதேசங்களுக்கு வேலைவாய்ப்புக்களுக்காகச் செல்லல், வீடுகளில் இடவசதி போதாமை போன்ற சமூக, பொருளாதாரக் காரணிகளால் தனிக் குடும்பமாக வாழவேண்டிய சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

எனினும், தாத்தா, பாட்டி போன்ற நெருங்கிய குடும்ப உறவினர்களுடன் கூடுமானவரை உறவுகளைப் பேணி நடந்துகொள்ள, அவர்களைக் கூடுமானவரை கவனித்துக் கொள்ளல் போன்ற சிறந்த பண்புகள் தனிக்குடும்ப உறுப்பினர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு நடந்து கொள்வது குடும்ப உறுப்பினர்களினதும் சமூகத்தினதும் நன்னடத்தைக்கு ஏதுவாக அமையும்.


## குடும்பமொன்றில் பொதுவாகக் காணப்படும் சிறப்பம்சங்கள்

குடும்பமாக வாழும்போது பல்வேறு சிறப்பம்சங்கள் ஏற்படுகின்றன. அவற்றுட் சில வருமாறு:-

- குடும்பத் தொடர்புகள் மூலம் உறவுகள் கட்டியெழுப்பப்படும்.
- தனிக் குடும்பமானது குறைந்தளவான குடும்ப உறுப்பினர்களையும் கூட்டுக்குடும்பமானது அதிகளவான உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.
- குடும்ப உறுப்பினர்கள் அனேகமாக ஒரே பிரதேசத்தில் வாழ்வர்.
- குடும்ப அங்கத்தவர்கள், தங்களிடையே மிக நெருங்கிய தொடர்பு களைக் கொண்டிருப்பர்.
- பகிர்ந்தளிக்கும் பண்பு குடும்பத்தில் காணப்படும்.
- குடும்ப அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு மிக்கவர் களாக இருப்பர்.
- குடும்ப உறுப்பினர்கள் தமது அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய விடயங்களுக்கு முதன்மையான இடத்தை வழங்குவர்.
- அன்பு, கருணை, பாசம் போன்ற நற்குணங்களின் அடிப்படையில் குடும்ப உறுப்பினர்கள் இணைந்து காணப்படுவர். அவற்றைப் பேணிக் கொள்ளவும் முற்படுவர்.

எனவே, சமூகத்தில் குடும்பங்கள் பலம் பொருந்தியனவாகவும் நல்ல பண்புகள் கொண்டனவாகவும் இருக்கும்போது, கட்டுக்கோப்பானதும் அமைதியானதுமான சமூக அமைப்பு ஏற்படும்.

## குடும்பமாக வாழும்போது கிடைக்கும் நன்மைகள்




உரு 1.5

**செயற்பாடு 1-1**

- நீங்கள் தனிக் குடும்பமாகவா அல்லது கூட்டுக் குடும்பமாகவா வாழ்வதற்கு விரும்புகின்றீர்கள்? உங்கள் கருத்துக்கு காரணங்கள் தருக.
- குடும்பமாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகள் தொடர்பான அட்டவணையொன்று தயாரிக்குக.

## சரியான வாழ்க்கைக் குறிக்கோள்களினூடாக வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்

எமது வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்காக மேற்கொள்ளப்படும் நிரந்தர மானதும் சரியானதும் தீர்க்கமானதுமான முடிவுகளே வாழ்க்கையின் குறிக்கோள்களாகும். பிரச்சினைகளற்ற, அமைதியான வாழ்க்கை முறையொன்றைக் கட்டியெழுப்பவும் சிறந்த வாழ்க்கை முறை யொன்றை ஏற்படுத்திக் கொள்ளவும் குறிக்கோள் அவசியமாகின்றது. மேலும், குடும்ப அங்கத்தவர்களில் ஒருவராக நீங்கள் வாழும்போது, உங்க ளுடைய வாழ்க்கைக் குறிக்கோளைக் கட்டியெழுப்புகையில், உங்கள் எதிர்பார்ப்பையும் உங்களைப் பற்றிய பெற்றோரின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுவது உங்களது கடமையாகும். மேலும், நீங்கள் வாழும் சமூகத்தின் எதிர்பார்ப்பையும் கருத்திற்கொண்டு உங்களது குறிக்கோளைச் செயற்படுத்தும்போது, சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கான சாத்தியம் உங்களுக்கு ஏற்படும்.

மாணவர்களாகிய உங்களது குறிக்கோள் பரீட்சையில் சித்தியெய்த வேண்டு மென்பதாகவே இருக்கும். இந்தக் குறிக்கோள் உங்களது மனதில் மட்டும் இருந்தால் போதாது. அதனை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடைமுறைகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பதும் மிக அவசியமாகும். அந்தக் குறிக்கோளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடப்பட்ட சில செயன்முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

***குறிக்கோள்:-*** பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைதல்

அதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டமிடப்பட்ட நுட்ப முறைகள் வருமாறு :-

- தினமும் பாடசாலைக்குச் செல்லல்.
- ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்.
- ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்று நடத்தல்.
- கல்வி தொடர்பான விடயங்களில் அதிக ஈடுபாடு காட்டுதல்.
- கால அட்டவணைக்கேற்ப கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- குறைந்த அடைவு மட்டத்தை உடைய பாடங்களை இனங்காணல்.

- அப்பாடங்களில் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுதல்.
- அப்பாடங்களுக்காக ஆசிரியர் மற்றும் சக மாணவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.
- அடிக்கடி அப்பாடங்கள் தொடர்பான பயிற்சிகளில் ஈடுபடுதல்.
- ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் கழித்தல்

நீங்கள் இந்த நடைமுறைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தினால் பரீட்சைகளில் நன்றாகச் சித்தியடைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். இக்குறிக்கோளைப் பாடசாலைக் காலத்தில் நீங்கள் நிறைவேற்று கின்றபோதே உங்களுக்கு உயர்கல்விக்கான வாய்ப்புக் கிடைக்கும். அதனால், நீங்கள் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளும் சந்தர்ப் பத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## பொருத்தமான குறிக்கோளைத் தெரிவு செய்து கொள்ளல்

அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கின்ற பல்வேறு வகையிலான கவர்ச்சிகரமான விடயங்களின்பால் உங்களது கவனம் செல்லக்கூடிய வாய்ப்புகள் உண்டு. நீங்கள் அந்த விடயங்களிலிருந்து உங்களுக்கு மிகப் பொருத்தமான இலக்கைத் தேர்ந்தெடுப்பது, உங்களது வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ள இன்றியமையாததாக அமையும். விளை யாட்டுகள், நாடகங்கள், இசை, சித்திர ஆக்கங்கள், வெவ்வேறு உயர் தொழில்நுட்பங்கள் போன்ற கவர்ச்சிகரமான விடயங்களின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களது விவேகத்திற்கும் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் மிகவும் பொருத்தமான ஓர் இடத்தைப் பெறுவதற்கான குறிக்கோளைத் தெரிவுசெய்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

அது மட்டுமன்றி, அதனை அடைந்து கொள்வதற்குத் தேவையான நுட் பங்களை ஏற்படுத்திக் கொள்வதும் அதற்காக முயற்சிப்பதும் மிகவும் முக்கியமாகும். அன்றாட வாழ்க்கையில் சமூகத்தில் காணப்படுகின்ற பல கவர்ச்சிகரமான விடயங்கள் அனேகமாக எமது வெற்றிகரமான வாழ்க்கைக்குப் பொருத்தமற்றவைகளாகவே காணப்படுகின்றன. அவ்வாறானவற்றை மிகச் சரியாக இனங்கண்டு, அவற்றைத் தவிர்த்தல் முக்கியமாகும். அவற்றைத் தவிர்ந்துக் கொள்வதற்கான காரணங்களை நீங்கள் அறிந்து வைத்திருப்பது இன்றியமையாதது.

**செயற்பாடு 1-2**

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் **I** இல் விரைவாகச் செய்து முடிக்கக் கூடிய குறிக்கோள்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். அந்தக் குறிக்கோள்களை செய்து முடிப்பதற்காக நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகளை நிரல் **II** இல் குறிப்பிடுக.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| குறிக்கோள்கள் | குறிக்கோளை அடைவதற்கான செயற்பாடுகள் |
| பாடசாலையில் மாணவத் தலைவராக தெரிவுசெய்யப்படுதல் | |
| பாடசாலையில் வாத்தியக் குழுவில் இடம்பெறுதல் | |
| பாடசாலை விவாத அணியில் உறுப்பினராதல் | |

**செயற்பாடு 1-3**

- நீங்கள் நீண்டகால அடிப்படையில் செய்துமுடிக்கக் கூடிய வாழ்க்கைக் குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிக்கோளையும் வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கென நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படி தருக.
    - ஆசிரியராதல்
    - உங்களுக்கு விருப்பமான துறையில் தேசிய மட்ட விளையாட்டு வீரராதல்
    - நீங்கள் மிகவும் விரும்பும் கலைத்துறையொன்றில் தேசிய மட்டத்தில் வெற்றி பெறல்

**சுயகௌரவம்**

*பின்வரும் கதையை நன்றாக வாசியுங்கள்*

## குட்டிச் சியாமாவின் தியாகம்

சியாமா தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு சிறுமி. அவளுடைய வீட்டில் அம்மா, அப்பா, தம்பி, பாட்டி ஆகியோர் வசிக்கின்றனர்.

சியாமா பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்ததும் அம்மாவும் அப்பாவும் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் வரையில் காத்திருப்பாள். ஆனால், அன்று அம்மாவும் அப்பாவும் வீட்டுக்கு வரும் வரையில் சியாமா என்றும் இல்லாதவாறு மிகவும் ஆவலுடன் காத்திருந்தாள்.

அம்மா வீட்டுக்கு வந்ததும் சியாமா அம்மாவின் அருகே ஓடிச் சென்றாள்.

''அம்மா! இன்று, அம்மா வீட்டுக்கு வந்ததும் நகரத்துக்கு அழைத்துச் செல்வதாக அப்பா கூறினார். புத்தாண்டுக்கு எனக்கும் தம்பிக்கும் பாட்டிக்கும் புத்தாடை வாங்கித் தருவதாகக் கூறினார். நானும் வரட்டுமா அம்மா?''

சியாமா இவ்வாறு கூறியதும், அம்மா உடனே பதில் ஏதும் கூறவில்லை.

''பாட்டி, மற்றும் தம்பியுடன், நீங்கள் வீட்டில் இருங்கள். நாங்கள் புத்தாடைகள் வாங்கிக் கொண்டு வருகிறோம்'' என அம்மா சியாமாவிடம் கூறினார்.

''அம்மா நீங்கள் தந்த பணத்திலிருந்து கொஞ்சப் பணத்தை சேமித்து வைத்துள்ளேன். அதற்கு வளையல் வாங்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது. அதனால் நானும் வரட்டுமா?'' என்று கேட்டாள்.

சியாமாவின் சேமிப்புப் பழக்கம் அம்மாவுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது.

''மகளே! எவ்வளவு சேமித்து வைத்திருக்கிறாய்?'' அம்மா சியாமாவிடம் வினவினாள். ''நூற்றி இருபது ரூபா இருக்கிறது'' சியாமா மகிழ்ச்சியுடன் பதில் கூறினாள்.

''சரி போவோம்''

சியாமாவின் எதிர்பார்ப்பு நிறைவேறியது. சியாமா, தனது அம்மா, அப்பா ஆகியோருடன் நகருக்குப் பேருந்தில் சென்றாள். அவர்கள் பேரூந்திலிருந்து இறங்கிக் கடைகள் இருக்கும் பக்கமாக சென்றார்கள்.

செல்லும் வழியில் வயோதிபர் ஒருவர் இருப்பதைக் கண்டார்கள். அந்த வயோதிபர் பசியோடிருப்பதை அறிந்த அம்மா ''இவருக்கு எதாவது கொடுப்போமா?'' எனக் கேட்டார். உடனே சியாமா வளையல் வாங்க எடுத்து வந்த பணத்தை வயோதிபருக்குக் கொடுத்தாள். அப்போது அந்த வயோதிபர் இந்தப் பிள்ளைக்கு இறைவன் துணை புரியவேண்டும்; நன்மைகள் கிடைக்கட்டும்; நல்லது நடக்கட்டும் என வாழ்த்தினார்.

சியாமாவின் சிறிய உள்ளத்திற்கு வயோதிபரின் வார்த்தைகள் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தின. சியாமாவின் செயல் அம்மாவையும் அப்பாவையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

அம்மாவும் அப்பாவும் ஆடைகள் வாங்குவதற்கு முன்னர் சியாமாவை வளையல் கடைக்குக் கூட்டிச்சென்று அவளுக்கு விருப்பமான வண்ண வண்ண வளையல்களை வாங்கிக் கொடுத்தனர். சியாமா அளவிலா மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தாள்.

சின்னஞ்சிறு சியாமா ஆதரவற்ற முதியவரின் உணவு வேளைக்காக செய்த அர்ப்பணிப்பு அவளிடத்தில் இருந்த உயர் குணங்கள் பலவற்றை வெளிப்படுத்துகின்றன.

இன்னுமொருவரின் பசி, துன்பம், சோகம், ஆதரவற்ற நிலை என்பன சியாமாவின் மனதை உருக்கின. அதற்காக சியாமா தனது பொறுப்பை மிகச் சரியாக நிறைவேற்றினாள்.

உங்களிடம் காணப்படும் உயர்ந்த நடத்தைகள், உயர் பண்புகள் ஆகியன மற்றவர் உங்கள் பால் தம் கவனத்தைச் செலுத்தத் தூண்டும். உங்களிடமுள்ள பண்புகள் தொடர்பாக நீங்களே சுயமதிப்பீடு செய்துகொள்ள முடியும்.

அந்த உயர் பண்புகள், உயர் நடைமுறைகள், சமயோசிதமான செயற் பாடுகள் போன்றன உங்களிடம் காணப்படுவது, சுயகௌரவம் உங்களை

வந்தடையக் காரணமாக அமையும்.

உங்களிடம் தீய பழக்கவழக்கங்கள் இருப்பின் அவற்றை நீங்கள் கைவிட முயற்சி செய்யுங்கள், முன்கோபம், பொறுமையின்மை, பிறரின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்காமை, தனது கருத்தையே முதன்மைப்படுத்த வேண்டுமென நினைத்தல், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையாமை, சரியான முடிவெடுக்கும் ஆற்றலின்மை என்பன மனிதர்களிடம் காணப் படும் பலவீனமான குணங்களாகும்.

இவ்வாறான தீயகுணங்களிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளும் போது, எமக்குக் கிடைக்கும் பிறரது மதிப்பும் பாராட்டும் சிறப்பான சமூக வாழ்க்கைக்குக் காரணமாக அமையும்.


**செயற்பாடு 1-4**

- சியாமாவிடம் இருந்த தன்னம்பிக்கை தொடர்பான பண்புகள் சிலவற்றைப் பட்டியற்படுத்துக.
- வரலாற்றுக் கதைகளில் உள்ள நாயகர்களிடம் காணப்பட்ட உயரிய பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
- இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறந்த பண்பினை வெளிக் காட்டும் வகையில் ஒரு சிறு நாடகமொன்றினை எழுதி அதனை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

## உங்களின் சுய அடையாளம்

உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஒருவர் மற்றவரிலிருந்து வித்தியா சமானவர். எந்தவொரு மனிதனும் மற்றுமொரு மனிதனைப் போல் இருப்பதில்லை. வெளித்தோற்றம், கைரேகை, விரல் அடையாளம் போன்றவற்றைத் தொடர்புபடுத்தி நோக்கும்போது அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்படும். மூவரின் கைரேகை அடையாளம், பெருவிரல் அடையாளம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றை ஒப்பிட்டுப் பாருங்கள்.

## கைரேகை அடையாளங்கள்



1 2 3

*உரு 1.6*

## பெருவிரல் அடையாளங்கள்



1 2 3

*உரு 1.7*

அதேபோல், **DNA** பரிசோதனை **(Deoxyribo Nucleic Acid)** எனப்படும் சோதனை முடிவும் ஒருவருக்கொருவர் வேறுபட்டதாகும். இன்று **DNA** பரிசோதனை முறைகளே பெரும்பாலும் மேற்கெள்ளப்படுகின்றன. குற்றங்கள் புரிந்தவர்களை அடையாளம் காண்பதற்காக **DNA** பரிசோதனை நடத்தப்படுகின்றது. இது தொடர்பாக ஊடகச் செய்திகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட விஞ்ஞானரீதியான ஆய்வுகள் ஒவ்வொரு தனி நபரும் வித்தியாசமான தோற்றங்களையும் குணவியல்புகளையும் கொண்டவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

பிறந்தது முதல் உங்களில் காணப்படும் குணவியல்புகள், நடத்தை முறைகள், உங்களிடம் உள்ள விசேட திறமைகள், மற்றும் உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் இயல்புகள் போன்றவற்றை இத்தகைய நடத்தைகளுக்கும் குணவியல்புகளுக்கும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். தமது அடையாளத்தை, கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நல்ல குணவியல்புகள், நல்ல நடத்தைகள், நல்ல வாழ்க்கை முறை என்பவற்றை உங்களில் விருத்திசெய்து கொள்ள வேண்டும்.

இதற்காக, நல்லவற்றை ஏற்றுக் கொள்ளவும் தீயவற்றை தவிர்க்கவும் நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். எமது அடையாளத்தை, கௌரவத்தை உறுதிப்படுத்தத் தகுதியான மற்றும் பொருத்தமானவற்றை மட்டுமே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குடும்ப அங்கத்தவராக இருக்கும் உங்களுக்குள் விருத்தியடைய வேண்டிய நற்பண்புகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

- நல்லவற்றை ஏற்றுக் கொள்ளல், தீயவற்றைத் தவிர்த்துக் கொள்ளல்.
- இயலாமையை அறிந்து அதனை விட்டுவிட முயற்சித்தல்.
- பொறுமையுடனும் சுயஒழுக்கத்துடனும் கௌரவத்துடனும் நடந்து குடும்ப முன்னேற்றத்திற்கு உதவுதல்.
- மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்.
- தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல், மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துதல்.
- தமக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற்றுக்கொண்டு தமது கடமை களைச் சரிவரச் செய்தல்.

**செயற்பாடு 1-5**

(1) (அ) உங்களிடம் காணப்படும் பலம் / பலவீனங்களைப் பட்டியற் படுத்தி அவற்றை சுயமதிப்பீடு செய்து எழுதுங்கள்.

(ஆ) அந்தபலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகளைக் குறிப்பிடுங்கள்.

(2) (அ) நீங்கள் மதிப்பளித்துப் பின்பற்றும் பெரியார்களின் பெயர்ப் பட்டியலொன்றைத் தயாரியுங்கள்.

(ஆ) அவர்களுள் நீங்கள் மிகவும் விரும்பக் கூடியவர்கள் இருவரைத் தெரிவு செய்து, அவர்களிடம் உள்ள உயர் பண்புகளை அறிந்து, அவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.

## சமூகத்தில் காணப்படும் நல்லவைகளையும் தீயவைகளையும் இனங்காணல்

குடும்ப அங்கத்தவராகவும் சமூகப் பிரசையாகவும் சமூகத்தில் வாழும் போது நல்ல எண்ணங்கள், ஒழுக்கநெறிகள், நற்பழக்க வழக்கங்கள் போன்றவற்றை எம்முள் விருத்திசெய்து கொள்ள வேண்டும். அதேபோல் கல்வியைப் பெற்றுக்கொள்வதும் எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானதாகும். இத்தகைய சிறப்பான செயற்பாடுகள் வாழ்க்கையில் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் அவசியமானவை எனவும் கண்டறியப்பட்டுள்ளன.

உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமானவையாக குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், நல்ல நண்பர்கள், நல்ல நூல்கள், சிறந்த ஊடகத்துறை ஆகியன விளங்குகின்றன.

**உங்கள் குடும்பம்**



உரு 1.8
வீட்டில் கற்றலில் ஈடுபட்டுள்ள பிள்ளைக்கு பெற்றோர் உதவுதல்

உங்கள் பெற்றோரும், குடும்பத்திலுள்ள பெரியவர்களும் எப்பொழுதும் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தையே எதிர் பார்க்கின்றனர். அவர்களது உச்ச எதிர் பார்ப்பானது உங்களை மிகவும் சிறந்த, பொறுப்புள்ள பிரசையாக சமூகத்திற்கு வழங்குவதாகும். நற்குணங்கள் விருத்திய டைவதற்கும் ஆற்றல்கள் மேலும் வளர்ச்சியடைவதற்கும் சிறந்த கல்வியை வழங்குவதற்குமே உங்கள் தாய், தந்தை உட்பட பெரியவர்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட காரணங்களாலேயே பெற்றோரைச் சில சமயங்கள் தெய்வமாகப் போற்றுகின்றன. அனைத்து மதங்களும் பெற்றோரை மிக உயர்ந்த நிலையில் வைத்தே நோக்குகின்றன. பெற்றோர் மற்றும் பெரியோர்கள் வழங்கும் அன்பையும் அரவணைப்பையும் கண்டிப்பையும் ஏற்றுக்கொண்டு சிறந்த வாழ்க்கை முறையை விருத்தி செய்து கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்.

அன்னை சொற் கேட்க வேண்டும் - தந்தை
ஆணைக்கிணங்க வேண்டும்
தன்னை வணங்க வேண்டும் - பிறர்
தம்மை மதிக்க வேண்டும்
ஆசிரியர்க்கடங்கி - கிளியே
அறிவை வளர்க்க வேண்டும்
தேசம் வாழும் தொழிலில் - மிக்க
திறமை ஓங்க வேண்டும்

-சுத்தானந்த பாரதியார்

**பாடசாலை**

சிறுபராயம் முதலே உங்களது வாழ்க்கையின் முக்கிய அலகாக பாடசாலை விளங்குகிறது. பாடசாலையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளும் உங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வியை வழங்குதல், ஆற்றல்களை மேம்படுத்தல், கல்வி தொடர்பான முன்னேற்றத்தையும் வெற்றிகளையும் ஈட்டச்செய்தல் போன்ற செயற் பாடுகள் மூலம் நாட்டுக்கு பொருத்தமான பிரசைகளை பாடசாலை உருவாக்குகிறது. இதுவே மிகப்பெரும் சேவையாகவும் அமைகிறது.

இந்த மகத்தான சேவையைச் செய்து முடிப்பதற்காகவே தாய், தந்தை, ஆசிரியர்கள் போன்றோர் மிகக் கவனமாகச் செயற்படுகின்றனர். பாடசாலையிலும் வகுப்பறையிலும் மேற்கொள்ளப்படும் வழிகாட் டல்கள் உங்களுள் பல்வேறு ஆற்றல்களை வளர்ப்பதுடன், மறக்க முடியாத அனுபவங்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே, உங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் பாடசாலைகள் பல வழிகளிலும் அவசியமானவையாக உள்ளன. பின்வரும் கவிதை இதனை அழகுற வெளிப்படுத்துகின்றது.



உரு 1.9
மைதானத்தில் உடற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள்



உரு 1.10
வகுப்பறையில் செயற்பாடொன்றில் ஈடுபடும் மாணவர்கள்

அறிவை வளர்த்த ஆசானை
அன்னை என்று மதிப்பேனே
சிறிய வயதில் அரிச்சுவடி
சீராய்ச் சொல்லித் தந்தாரே

நல்வழி பலவும் சொன்னாரே
நலமாய் வாழச் செய்தாரே
அல்வழி தன்னில் போகாமல்
அன்பு வழியைச் சொன்னாரே

நன்றி- சாரணாகையூம்

**செயற்பாடு 1-6**

- நல்ல குணாம்சங்களை விருத்தி செய்வதற்காகப் பாடசாலையில் நடை முறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் இரண்டு தருக.
- அதில் ஒன்றைத் தெரிவுசெய்து அது உங்களது வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி விளக்குக.

## மத வழிபாட்டுத் தலங்கள்

நீங்கள் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, இஸ்லாம் அல்லது வேறொரு மதத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். மத வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் செயற்பாடுகளின் அடிப்படை நோக்கம், மதரீதியான அறிவைப் பெற்றுக் கொடுப்பதாகும். அத்தோடு, மனிதர்களை நல்வாழ்க்கைக்கு இட்டுச் செல்லல், நல்லனவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருதல் போன்ற முயற்சிகளும் மத வழிபாட்டுத் தலங்களால் மேற்கொள்ளப்படும்.



உரு 1.11
பௌத்த விகாரையில் வழிபாடு



உரு 1.12
இந்துக் கோயிலில் வழிபாடு



உரு 1.13
கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாடு



உரு 1.14
இஸ்லாமிய பள்ளிவாசலில் வழிபாடு

சமய நிறுவனங்களின் செயற்பாடுகள் எமது வாழ்க்கையை வெற்றியை நோக்கி இட்டுச் செல்லும் வகையில் மேற்கொள்ளப்படும்.

**செயற்பாடு 1-7**

- உங்கள் வீட்டுக்கு அண்மையிலுள்ள சமய நிறுவனங்களில் நடைபெறும் செயற்பாடுகள் சிலவற்றைப் பெயரிடுக
- அத்தகைய ஒரு செயற்பாட்டில் நீங்கள் கலந்து கொண்டிருப்பின் அதனைப் பெயரிடுக. அதன்மூலம் உங்களுக்குக் கிடைத்த நன்மைகளை விளக்குக.

## நெருங்கிய நண்பர்கள்

நாம் நண்பர்களைத் தேடிக்கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றோம். ஆனால், அவர்களுள் பொருத்தமான சிறந்த நண்பர்களைத் தெரிவுசெய்து கொள்வது மிகவும் அவசியமாகும். நற்குணங்களைக்

கொண்டவர்களையும் நல்லறிவுடன் செயற்படுபவர்களையும், நல்லன தீயனவற்றை சுட்டிக் காட்டுபவர்களையும் எம்முடன் சேர்ந்து பணியாற்றுபவர்களையுமே நாம் நண்பர்களாகத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும். அப்படிப் பட்டவர்களுடன் நெருங்கிப் பழகும்போது நற்பழக்கவழக்கங்களை அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

சமூக விரோதச் செயற்பாடுகளில் அவ்வாறான நல்ல நண்பர்கள் ஈடுபட மாட்டார்கள். உற்ற நண்பர்கள், எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றுவார்கள். ஆகவே, நல்ல நண்பர்களைத் தெரிவுசெய்து கொள்வது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முக்கியமானதாகும்.

**செயற்பாடு 1-8**

- நீங்கள் மிகவும் நெருக்கமாகப் பழகும் நண்பரிடம் காணப்படும் நல்ல குணவியல்புகள் சிலவற்றை எழுதுக.

## சிறந்த நூல்கள்

''வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்'' எனும் வாசகத்தை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஓய்வை பயனுள்ள முறையில் கழிக்க வேண்டுமாயின் புத்தகங்கள் வாசிப்பது மிகவும் சிறந்தது. இதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நாம் நூல்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அதேபோல், உங்கள் வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொள்ளக்கூடியவர்களின் வாழ்க்கை தொடர்பான நூல்களை வாசிப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத முன்மாதிரிகளை அறிந்து கொள்ளவும் முடியும்.

**செயற்பாடு 1-9**

- நீங்கள் அண்மையில் வாசித்த இரு வரலாற்றுப் புத்தகங்களின் பெயர்களைத் தருக
- அந்தப் புத்தகங்களை வாசித்ததன் மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட முன்மாதிரிகள் சிலவற்றைக் கூறுக.

## சிறந்த ஊடகங்கள்

எம்மிடத்தில் நற்பண்புகளை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பன ஊடகங்களாகும். ஓய்வுநேரத்தில் செய்திகள், கதைகள் போன்றவற்றை வாசிப்பதற்கு அச்சு ஊடகங்கள் பெரிதும் துணைபுரிவதைப் போன்று, தொலைக்காட்சி, வானொலி, இணையம் போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் தகவல்களைப் பார்த்தும் கேட்டும் அறிவதற்குத் துணை புரிகின்றன. இவற்றை நீங்கள் பெரிதும் பயன்படுத்தியிருப்பீர்கள்.

இந்த ஊடகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமன்றி, உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் திறமைகளையும் வெளிக் கொணரும் சாதனங்களாகவும் செயற்படுகின்றன.

நாம் ஊடகங்களைப் பயன்படுத்தும்போது பயனுள்ள நிகழ்ச்சிகளையே தெரிவுசெய்து, அவற்றைப் பார்ப்பதற்கும் செவிமடுப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் முயற்சிக்க வேண்டும்.

மேலும், இந்த ஊடகங்கள் முன்மாதிரியான பண்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் நல்ல சிந்தனைகளை உருவாக்குவதற்கும் ஆளுமைகளை விருத்தி செய்து கொள்வதற்கும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன.

**செயற்பாடு 1-10**

- நாளாந்தம் பத்திரிகை மற்றும் வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் நிகழ்சிநிரல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- செய்திகளிலிருந்து, பாடசாலை மாணவர் என்ற அடிப்படையில் உங்களுக்குப் பயனுள்ளவற்றைத் தெரிவு செய்யுங்கள்.
- உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் அந்த நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு / கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

## சமூக நன்மைக்குக் காரணமாக அமையும் பல்வேறு நிறுவனங்கள்

- நூலகங்கள்
- சனசமூக நிலையங்கள்
- போதைப்பொருள் தடுப்பு அமைப்புகள்
- புகைத்தல் தடுப்பு இயக்கங்கள்
- உயிர்களைப் பாதுகாக்கும் அமைப்புக்கள்

போன்ற அமைப்புக்கள், இயக்கங்கள் மற்றும் திணைக்களங்களுடன் நல்ல விடயங்களில் இணைந்து செயற்படுவது உங்களது நன்மைக்கும் சமூக நன்மைக்கும் உகந்ததாக அமையும். சமூகத்தின் தீமைகளுக்குக் காரணமாக அமையக் கூடியவற்றை அறிந்து, அவற்றைத் தவிர்க்க முற்படுவது எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும்.

போதைப்பொருள் பயன்பாடு, புகைத்தல் ஆகியன மனிதனை அழிக்கும் நேரடிக் காரணிகளாகும். இவை உடல், உளரீதியான பாதிப்புகள் ஏற்படவும் புற்றுநோய் போன்ற பயங்கரமான நோய்கள் ஏற்படவும் காரணமாக அமைகின்றன.

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் புகைத்தலுக்கு அடிமையான வர்கள், தாம் வருந்தி உழைக்கும் பணத்தை வீண்விரயம் செய்கின்றனர். அதே போல், இவ்வாறான பழக்கங்களுக்கு அடிமையாகியுள்ள தனிநபர்கள் சமூகத்தால் தனிமைப்படுத்தப்படுவர்.

பொருத்தமற்ற புத்தகங்கள் மற்றும் தகுதியற்ற வீடியோக்கள் (காணொளிகள்) போன்றவற்றை இரசிப்பது போன்ற செயற்பாடுகள் மனிதர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைப்பதற்கான பிரதான காரணிகளாக அமைகின்றன. தவறான நடத்தைகளில் ஈடுபடுதல், தவறான பழக்க வழக்கங்களைப் பழகுதல், அவற்றுக்கு அடிமையாதல் போன்றவை பயங்கரமான விளைவுகளுக்கு இட்டுச்செல்லும். இதனால், இதுபோன்ற செயற்பாடுகளை விட்டு விலகியிருப்பதற்கு எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

தீய நண்பர்களுடனான தொடர்பும் ஒருவரது நடத்தைகளில் பாதிப்புச் செலுத்தும் காரணியாக அமையும். தவறான நடத்தைகளுக்கு உட்படுதல், நல்ல விடயங்களுக்குத் தடையாக இருத்தல் போன்றன பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்களாகக் காணப்படுகின்றன. தீய நண்பர்களின் சேர்க்கை ஒருவரது சிறந்த வாழ்க்கைக்கான குறிக்கோளை சிதறடிப்பதற்கு பிரதான காரணியாக அமையலாம். எனவே, தவறான நடத்தைகளைப் பின்பற்றும் நண்பர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதைத் தவிர்த்துக்கொள்வது எமது வாழ்வின் உயர்ச்சிக்கு காரணமாக அமையும். அதேபோன்று சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து தவறான நடத்தை கொண்ட நண்பர்களை நல்வழிப் படுத்த முயற்சித்தல், அவர்களுக்கு நல்லவற்றை எடுத்துக்கூறல் என்பன எம்மால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்பும் கடமையுமாகும்.

இக்கருத்தினை உணர்த்தும், பின்வரும் பாடலைப் பாடி மகிழ்வோம்

சின்னஞ் சிறுகுயில் போல - இசை
சிந்திச் சிரித்துச் செவ்விதழ் காட்டு
பொன்னொத்த தோழர்களோடு - பள்ளி
போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு
வேளை கடந்து செல்லாதே -பள்ளி
வெளியினில் அங்கிங்குமாக - நில்லாதே
நாளை கடத்தடப் போமே? - சென்ற
நாளும் திரும்பி வருதலும் ஆமோ?

**நன்றி – வாணி தாசன்**

## ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வோம்

உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தைப் பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்துவதற்குரிய பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வது உங்களது சிறப்புக்கு காரணமாகலாம். ஓய்வுநேரத்தில் விளையாட்டுகளில் ஈடுபடுதல், அழகியல் செயற்பாடுகள் மற்றும் ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பன உங்களது திறமை மற்றும் ஆற்றல்களை விருத்தி

செய்து கொள்வதற்கு உதவியாக அமையும். அவ்வாறே உடல்நலம் மற்றும் உளநலம் ஆரோக்கியமாக இருப்பதற்கு இப்பயிற்சிகள் உதவியாக அமையும்.

## விளையாட்டில் ஈடுபடுவதனால் ஒருவரிடத்தில் விருத்தியடைகின்ற பண்புகள்

- வெற்றி தோல்வியை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளல்
- சட்டத்திற்கு மதிப்பளித்தல்
- கட்டளைகளைப் பின்பற்றுதல்
- குழு உணர்வுடன் செயலாற்றுதல்
- முயற்சி / உற்சாகம் / பின்வாங்காதிருத்தல்
- இரசனை மற்றும் மகிழ்ச்சி

ஓய்வு நேரங்களில் அழகியல் செயற்பாடுகளில் ஈடுபடலாம். உங்களுக்கு இலகுவாக ஈடுபட முடியுமான அழகியற் செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.



உரு 1.15
கூடைப்பந்தாட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள்



உரு 1.16
நடனப் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள்

- சித்திரம் வரைதல்
- கவிதை பாடுதல் / கவிதை எழுதுதல்
- பாட்டுப் பாடுதல் / பாட்டு இயற்றுதல்
- நாடகப் பிரதிகளை எழுதுதல்

- இசைக் கருவிகள் இசைத்தல்
- நடனம்
- சுற்றாடலை அழகுபடுத்தும் வேலைகள்


## அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் கிடைக்கும் பயன்கள்

- ஆக்கத்திறன் ஏற்படுதல்
- இரசனையை வளர்த்தல்
- மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தல்
- சிறந்த மனப்பாங்குடன் கருத்துகளை வெளிப்படுத்தும் திறனை விருத்தி செய்தல்
- அனைத்தையும் அழகியல் உணர்வுடன் நோக்கும் ஆற்றலை விருத்தி செய்தல்



உரு 1.17
ஓய்வு வேளையில் புல்லாங்குழல் வாசிப்பில் ஈடுபடும் மாணவர்


எமது வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் அனுபவங்கள், இயற்கைச் சூழலின் அழகு ஆகியவற்றைப் பல்வேறு ஆக்கங்களினூடாக வெளிப்படுத்தலாம்



உரு 1.18
பெரியோருடன் உள்ளக விளை யாட்டில் ஈடுபடும் பிள்ளைகள்

கவிதை, பாட்டு, நாடகம், சிறுகதை, சித்திரம் போன்ற ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அழகை இரசிக்கலாம்.

ஓய்வு நேரங்களில் குடும்ப அங்கத்தவர்களுடன் நேரத்தைக் கழிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். கவிதை மற்றும் பாட்டுப் பாடல், விளையாட்டில் ஈடுபடுதல், மேடை நாடகம் பார்த்தல், சுற்றுலா செல்லல் போன்ற செயற்பாடுகள் இதற்கு உதாரணங்களாகும். அதுபோன்று உங்களை விட மூத்தவர்கள் அல்லது பெற்றோருடன்



உரு 1.19
குடும்ப அங்கத்தவர்களுடன் உல்லாசப் பயணத்தில் ஈடுபட்டுள்ள பிள்ளைகள்

பழைமையான கிராமிய விளையாட்டுகள், உள்ளக விளையாட்டுகளில் ஈடுபட சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதன்மூலம் பழமையான கிராமிய விளையாட்டுகள் தொடர்பாக அறிந்துகொள்ளும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

**செயற்பாடு 1-11**

- பழமையான கிராமிய விளையாட்டுகள் தொடர்பான தகவல்களை மூத்தவர்கள், ஆசிரியர்களிடத்தில் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.
- ஒரு கிராமிய விளையாட்டு தொடர்பான தகவல்களைச் சேகரிக்க.
- கிராமியப் பாடல்கள் சிலவற்றைச் சேகரித்து அவற்றைத் தாளத் திற்கு ஏற்ப பாடுக.

### "சவால்களை வெற்றி கொள்வோம்"

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவருக்கும் பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். வாழ்க்கை என்பது சவால்களுக்கு முகங்கொடுப்பதாகும். இச்சவால்களை வெற்றிகொள்வதற்கு நாம் பல வழிகளைப் பயன்படுத்துவோம். சவால்களை வெற்றி கொள்வதற்காக பின்பற்றும் மிகவும் பயனுடைய வழிமுறைகளினால் கிடைக்கப் பெறும் சிறந்த பெறுபேறுகள் எந்நேரமும் மனிதனை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும்.

குடும்ப அங்கத்தவர்கள் என்றவகையில் நீங்களும் பல்வேறு சவால்க ளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படலாம். நடைமுறையிலுள்ள குடும்ப அலகில் எதிர்கொள்ளப்படும் சவால்களாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

- பெற்றோர் வெளிநாடு செல்லல் / பெற்றோர் தொழிலுக்குச் செல்லல் என்பன காரணமாக அவர்களது அன்பு, பாதுகாப்பு பிள்ளைகளுக்கு கிடைக்காமல் போதல்
- ஓய்வு குறைவாக இருத்தல்
- குடும்ப அங்கத்தவர்களின் குறிக்கோள்கள், எண்ணங்கள் பலவகைப் பட்டதாக இருத்தல்

- குடும்ப அங்கத்தினரிடையேயான பல்வேறு மனப்பாங்குகள்
- அதிக வேலைச் சுமை
- வாழ்க்கைச் செலவுக்கு போதுமான வருமானம் கிடைக்காமை

குடும்ப அங்கத்தவர்கள் என்றவகையில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு மேற்குறிப்பிட்டவற்றை விட வேறு பல விடயங்களும் காணப்படலாம். எவ்வாறாயினும் எந்தவொரு சவாலினையும் வெற்றி கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய பல வழிமுறைகள் உள்ளன. அதனால் இச்சவால்களை வெற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பத்திற்கேற்ப மிகவும் பொருத்தமான வழிமுறைகளைக் கையாள்வது சிறந்ததாகும்.

பாடசாலை மாணவர் என்ற வகையில் நீங்கள் பல சவால்களுக்கு முகங் கொடுக்க நேரிடலாம். அச்சவால்களை வெற்றி கொண்டு கல்வியை சிற ப்பாக முன்னெடுத்துச் செல்வது உங்களது இலக்காக இருக்க வேண்டும். இங்கு ஏற்படக்கூடிய அனைத்துத் தடைகளையும் வெற்றி கொள்வதற்கு உறுதிபூணல் வேண்டும். எமக்கு எதிர்கால சமூகத்தில் கிடைக்கப் பெறும் அந்தஸ்தை தீர்மானிக்கும் பிரதான சாதனமாக இருப்பது கல்வியே. ஆகவே, கல்வியை உரிய முறையில் கற்று வெற்றி பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அயற்கிராமங்களில் பிறந்து பல்வேறு பொருளாதாரச் சிரமங்களுக்கு மத்தியில் வளர்ந்து, தினந்தோறும் நீண்ட தூரம் நடந்து பாடசாலைக்குச் சென்று கல்விகற்று, பின்னர் உயர்கல்வியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து அரசாங்கத்தில் உயர்பதவிகளைப் புரியும் பலர் குறித்து நீங்கள் ஊடகங்களினூடாக அறிந்திருப்பீர்கள்.

பல்வேறு சவால்களை வெற்றி கொண்டு தமது விளையாட்டுத் திறன்களை விருத்தி செய்து சர்வதேச மட்டத்திலே வீர, வீராங்கனைகளாகித் தாய்நாட்டுக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்த விளையாட்டு வீர, வீராங் கனைகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவ்வாறு பல்வேறு சவால்களை வெற்றிகொண்டு பல துறைகளிலும் சிறந்து விளங்கும் நபர்கள் அநேகர் உள்ளனர். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு சவால்களை வெற்றிக்கொண்டு வாழ்க்கையில் உயர்ச்சி அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

செயற்பாடு 1-12

- ''தடைகளை வெற்றிகொண்டு வெற்றிபெற்ற மனிதர்களின் நடத்தை'' பற்றிய கதைகளை வாசியுங்கள்.
- நீங்கள் வாசித்த அவ்வாறான மனிதர்கள் பற்றிய கதைகளிலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நடத்தை முன்மாதிரிகளை எழுதுக.

## ''மனவெழுச்சிப் பண்புகளை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவோம்''

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறுபட்ட அனுபவங்களை எதிர்கொள்ள நேரிடலாம். அவ்வாறு எதிர்கொள்ளும் பொழுது பல விதமான சிந்தனைகள், உணர்வுகள் எம் உள்ளத்தில் ஏற்படலாம். இவ்வாறு உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள், உணர்வுகளைப் பொதுவாக மனவெழுச்சி என்று குறிப்பிடலாம். இவ்வாறான மனவெழுச்சிகளை முறையாக வழிநடாத்தும், கட்டுப் படுத்தும் திறனானது சிறந்த சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாக அமையும்.

அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மனிதர்களில் பலவகையான மனவெழுச்சிகள் உருவாகலாம். மகிழ்ச்சி, கவலை, கருணை, அன்பு, அச்சம், கோபம் என்பன மனவெழுச்சிகளில் சிலவாகும்.



உரு 1.20
மகிழ்ச்சி



உரு 1.21
கவலை



உரு 1.22
பயம்



உரு 1.23
கோபம்

மனத்தில் பல்வேறுபட்ட மனவெழுச்சிகள் ஏற்படுகின்ற பொழுது முகத்திலும் பல மாற்றங்கள் நிகழும். முகத் தோற்றத்தைத்வைத்து அவற்றைப் புரிந்து கொள்ளலாம். மேலே உள்ள படங்களை நன்றாக அவதானித்து ஒவ்வொரு படத்திலும் வெளிக்காட்டப்படுகின்ற மனவெழுச்சிகளை அறிந்துகொள்ள முயற்சியுங்கள்.

அவ்வாறே மனதில் உண்டாகும் மனவெழுச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மனித உடலிலே பல்வேறு மாற்றங்களும் நிகழ்கின்றன. நீங்கள் கவலைக்குட்பட்ட சந்தர்ப்பமொன்றை நினைவுகூருங்கள். அந்த நேரத்தில் பெருமூச்சு விடுதல், அழுதல், முகம் சோர்வடைதல் போன்ற உடலியல் மாற்றங்கள் நம்மை அறியாமலேயே ஏற்படுகின்றன.

நீங்கள் மகிழ்ச்சியடைந்த சந்தர்ப்பங்களை நினைத்துப் பாருங்கள். அந்த நேரத்தில் சிரித்தல், ஆடுதல், துள்ளிப்பாய்தல் போன்ற நடத்தைகள் எம்மில் வெளிப்படுத்தப்படும்.



உரு 1.24
வெற்றிக்களிப்பில் விளையாட்டு வீரர்கள்

ஒருவருக்கு திடீரென கோபம் வந்து விட்டால் கைகள் நடுங்குதல், முகம் சிவந்துபோதல் போன்ற தன்மைகள் ஏற்படும். பொருத்தமற்ற

மனவெழுச்சிகளை வழிப்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்தத் தவறுமிடத்து அது மனிதனின் உடல் மற்றும் உள நலனுக்குத் தீங்கை ஏற்படுத்தும். சில சமயங்களில் ஒருவரது குறிக்கோள்கள், எதிர்பார்ப்புகள் போன்றன நிகழாதவிடத்து மனவேதனை, கவலை போன்ற மனவெழுச்சி நிலைகள் உள்ளத்தில் தோன்றலாம். பரீட்சையில் சித்தியெய்தத் தவறுதல், உயர்பெறுபேற்றைப் பெறாதிருத்தல் போன்றவற்றால் உண்டாகும் மனவெழுச்சி நிலைமைகளை வைத்து வாழ்க்கையில் நாம் வைத்துள்ள நம்பிக்கையை இழந்து விடக்கூடாது. மீண்டும் பரீட்சை எழுதுதல், கல்விச் செயற்பாடுகளை உற்சாகமாக முன்னெடுத்தல் ஆகியன மூலம் வாழ்வின் எதிர்காலக் குறிக்கோள்களை நிறைவு செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருவரிடத்தில் உண் டாகும் முன் கோபம், பழிவாங்கும் எண்ணம் போன்ற மனவெழுச்சிகள் நம்மை மட்டுமன்றி சமூகத்தையும் பாதிக்கும். முன்கோபம் காரணமாக உண்டான பாதிப்புகள், விளைவுகள் தொடர்பான தகவல்களைப் பல்வேறு ஊடகங்கள் மூலமாக அறிகிறோம்.

ஆதலால், வாழ்க்கையில் மனவெழுச்சிப் பண்புகளை ஆக்கபூர்வமானவையாகவும் கட்டுப்பாடு மிக்கனவாகவும் பேணப் பழகிக்கொள்ளல் வேண்டும்.

பரீட்சையில் சித்தியடைதல், போட்டியில் வெற்றிபெறுதல், பிறந்த நாள் என்பன மகிழ்ச்சியை வெளிப்படுத்தத்தக்க சந்தர்ப்பங்கள் ஆகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் அடையும் மகிழ்ச்சி மற்றவரது மகிழ்ச்சிக்கும் காரணமாக அமையும். அதனை நமது வாழ்வில் பயனுள்ளவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உங்களது பிறந்தநாளை முன்னிட்டு விருந்துபசாரங்களை ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக முதியோர் இல்லங்களுக்கு அன்னதானம் வழங்குதல், வறுமையினால் துன்புறும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை தமக்கு இயலுமான முறையில் அன்பளிப்புச் செய்தல் போன்ற செயல்கள் மூலம் தமது மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பயனுள்ள வகையில் பகிர்ந்து கொள்ளலாம்.

பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள்

- சமயச் செயற்பாடுகளில் ஈடுபடல்
- நடத்தல்
- கவிதை, பாட்டுப் பாடல்
- சித்திரம் வரைதல் போன்ற அழகியற் செயற்பாடுகள்
- சிறந்த நூல்களை வாசித்தல்
- சுற்றாடலின் அழகை ரசித்தல்
- வானொலி கேட்டல்
- பயனுள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்த்தல்
- பத்திரிகை வாசித்தல்
- விளையாட்டில் ஈடுபடல்

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும்போது மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கும்

**செயற்பாடு 1-13**

- மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தவிர்ந்த, வேறு செயற்பாடுகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
- பொருத்தமற்ற மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைப் பட்டியற்படுத்துக.

## நுகர்வோர் என்றவகையில் புத்திசாலிகளாவும் பகுத்தறிவுடனும் செயலாற்றுவதன் முக்கியத்துவம்

உணவுகள், பானங்கள், மருந்துகள் போன்ற அன்றாடம் தேவைப்படும் பொருட்களை நாம் வியாபார நிலையங்களிலிருந்து விலைகொடுத்து வாங்குகிறோம். எமது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வ தற்காக இத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்கையில் எமது வருமானத்தின் ஒரு பகுதியை இதற்காகச் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, எம்மிடம் இருக்கும் குறிப்பிட்டளவு பணத்தில்

உச்ச பயனைப் பெறும் வகையில் தரமான பண்டங்களைக் கொள்வனவு செய்கையில் பல விடயங்கள் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நுகர்வோர் என்றவகையில் சந்தை நிலைமைகளை அறிந்திருத்தல் மிகவும் முக்கியமாகும். அரிசி, மரக்கறி போன்ற அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் தொடர்பாக வானொலி, தினசரி செய்திப் பத்திரிகை போன்றவற்றினூடாக நுகர்வோரை அறிவுறுத்தும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நுகர்வோர் என்றவகையில் தாம் கொள்வனவு செய்யும் பொருட்கள் பற்றிய விளக்கம் இருக்குமெனில் விலைகளை ஒப்பிட்டுப் பார்த்து குறைந்த விலையில் கூடிய தரத்தில் சிறந்த பண்டங்களைக் கொள்வனவு செய்யலாம். சில பண்டங்களிற்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற பொழுது அப்பண்டங்களின் விலைகள் உயரும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய பதிலீட்டுப் பொருட்களை, தரத்தில் கூடிய வேறு பண்டங்களை நுகரலாம்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விலைக் கட்டுப்பாடு, விலைக் கொள்கைகள் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். இதனால் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம்.

பண்டங்களின் சில்லறை விலைகள் அடங்கிய நுகர்வோர் விலைப் பட்டியலை வியாபார நிலையங்களில் பார்வைக்கு வைத்தல் கட்டாய மாகும். பண்டங்களைக் கொள்வனவு செய்கையில் விலைகளை அறிந்து கொள்வதற்கு விலைப்பட்டியல் உதவியாக அமையும்.

| காய்கறி | | விலை |
|---|---|---|
| பூசணி | 1 Kg | ரூபா 60.00 |
| கத்தரி | 1 Kg | ரூபா 50.00 |
| புடோல் | 1 Kg | ரூபா 70.00 |
| முள்ளங்கி | 1 Kg | ரூபா 80.00 |
| பீர்க்கு | 1 Kg | ரூபா 70.00 |
| தக்காளி | 1 Kg | ரூபா 65.00 |
| உருளைக்கிழங்கு | 1 Kg | ரூபா 99.00 |
| அவரை | 1 Kg | ரூபா 65.00 |
| வற்றாளை | 1 Kg | ரூபா 80.00 |

உரு 1.25
விலைப்பட்டியல்

அதுபோன்று கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பொருட்களில் பின்வரும் தகவல்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

- தயாரிக்கப்பட்ட திகதி
- காலாவதியாகும் திகதி
- ஆகக்கூடிய சில்லறை விலை
- நிகர எடை
- அடங்கியுள்ள கூறுகள்




உரு 1.26

நுகர்வோர் என்றவகையில் தரமான பொருள்களை நுகர்வதற்கு இத்தகவல் களைப் பரீட்சித்துப் பார்ப்பது, நமக்கு நன்மை பயப்பதாக அமையும். மரக்கறிகள், பழவகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் பொழுது பல விடயங்களில் கவனம்செலுத்த வேண்டும். மரக்கறிகள், பழங்களின் பசுமை, அப்பண்டங்களின் தரத்தை வெளிப்படுத்தும் காரணியாகக் கொள்ளப்படும். மீன் போன்ற உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்கையில் புதிய மீன்களைத் தெரிவுசெய்வதற்குரிய விளக்கம் அவசியமாகின்றது.


விசேடமாக, பழங்களைக் கொள்வனவு செய்கையில் நுகர்வுக்குக் தகுதியாக இருக்கின்றதா என்பதில் கவனம்செலுத்த வேண்டும். பழங்களைப் பழுக்க வைத்தல், அவற்றைப் பழுதடையாது பாதுகாத்தல் போன்றவற்றிற்கு இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுவதாக தெரியவந்துள்ளது. இவ்வாறு இரசாயனங்கள் கலந்த பழங்களை உண்பது உடலுக்குத் தீங்கை ஏற்படுத்தும் பல்வேறு விதமான நோய்கள் உண்டாகும். எனவே, அவற்றைத் தவிர்க்கும் முறைகள் பற்றி நாம் அறிந் திருப்பது அவசியமாகும்.

**செயற்பாடு 1-14**

- உணவுப் பொருள்களைப் பழுதடையாது பாதுகாப்பதற்காக மேற் கொள்ளப்படும் தவறான முறைகள் பற்றி செய்தித் தாள்களில் பிரசு ரமான தகவல்களைச் சேகரிக்க.
- மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போதும் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் போதும் கவனிக்க வேண்டிய விடயங் களை உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி முக்கிய தகவல்களைக் குறித்துக் கொள்க.

## வேலை உலகின் முக்கியத்துவமும் குடும்ப வருமானம் வாழ்க்கைத் தரத்தில் செல்வாக்கு செலுத்தும் விதமும்

சமூகத்தில் வாழ்கின்ற அனைத்துப் பிரசைகளும் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதற்காக பல்வேறு பண்டங்கள் மற்றும் சேவைகளை பயன்படுத்துகின்றனர். தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வியாபாரம் தொடர்பான பல்வேறு தொழில்களில் பெருந்தொகையானோர் ஈடுபடுகின்றனர். விவசாயம், மீன்பிடிக் கைத்தொழில் ஆகிய இரு துறைகளும் எமது உணவுத் தேவையைப் பூர்த்திச்செய்து கொள்வதற்கு பெரும் பங்காற்றுகின்றன.



உரு 1.27

விவசாயிகள் வேலை செய்தல்



உரு 1.28

மீனவர்கள் மீன் பிடித்தல்

இவ்வாறே விவசாயத்துறையுடன் தொடர்புபட்ட ஏனைய தொழில்கள் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். மேலும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம், தொடர்பாடல், பாதுகாப்புச் சேவை போன்ற பல்வேறு சேவைகள் எமது தேவைகளைப் பூர்த்திச்செய்து கொள்ளப் போதுமானதாகும். இச்சேவைகளை எமக்கு வழங்குவதற்குப் பலர் இதில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு கைத்தொழில்கள், நிருமாணிப்புப்பணிகள் போன்ற துறைகளில் அதிகமானோர் சேவை புரிகின்றார்கள். சுயதொழிலில்

ஈடுபட்டுக் கொண்டு சமூகத் தேவைகளை நிறைவு செய்வதற்காக தமது சிரமத்தை அர்ப்பணிப்பவர்களும் உள்ளனர். விலங்கு வளர்ப்பு, வியாபாரம் போன்ற பல்வேறு துறைகளில் சுயதொழில்கள் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறு பிரசைகளின் நலன் கருதி மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகள் மற்றும் அவை தொடர்பான தொழில்கள் அனைத்தையும் வேலை உலகம் என்று குறிப்பிடலாம். வேலை உலகில் எத்தொழிலைப் புரிந்தாலும் அவர்கள் தமது உழைப்பை வழங்குவது சமூகத்திற்கேயாகும். நாம் அவர்களது உழைப்பினை மதிக்க வேண்டும்.



உரு 1.29
நோயாளருக்கு சிகிச்சை அளித்தல்



உரு 1.30
தாய், தந்தை,பிள்ளைகள் கடையில் பொருள்கள் வாங்குதல்

வேலை உலகில் அன்றாடம் அல்லது மாதந் தோறும் சம்பளம் பெறும் சேவையாளர்கள் பலர் உள்ளனர். உங்களது தாய் அல்லது தந்தை சிலவேளை அவ்விதம் வேலை உலகு தொடர்பான தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். அவர்கள் அத்தொழிலை செய்து கிடைக்கும் வருமானத்தின் பெரும் பகுதியை செலவழிப்பது குடும்ப அங்கத்தவர்களின் இருப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் ஆகும். சட்டரீதியான தொழிலொன்றினைப்புரிந்து தேவையான வருமானத்தினைத் தேடிக்கொள்வது அவசிமாகும்.

## தொழிலொன்றின் மூலம் போதியளவு வருமானம் கிடைப்பதன் பயன்கள்

- குடும்பத்தின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திச் செய்யக் கூடுமானதாக இருத்தல்.
- குடும்ப அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவுச்செய்யும் பொருட்டுத் தேவையான பண்டங்கள், சேவைகளை நுகரச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
- வாழ்க்கைத் தரத்தைச் சிறப்பாகப் பேணுவதற்கு முடிகின்றமை.
- அவசரத் தேவைக்காக வருமானத்தின் ஒரு பகுதியை சேகரிக்க முடிகின்றமை.

யாதாயினும் ஒரு சந்தர்ப்பத்தில் பெற்றோரின் தொழில் அற்றுப்போனால் அது முழுக் குடும்பத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். போதுமான வருமானம் கிடைக்காமையினால் உணவு, உடை, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதில் சிக்கலான நிலைக்கு முகங்கொடுக்க நேரிடும். போதுமான வருமானம் கிடைக்காமை குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரம் குறைவடைய காரணமாக அமையும்.

பெற்றோர் தூரப்பிரதேசங்களுக்குச் சென்று தொழில்புரிய நேரிடலாம். அவ்வாறே தற்பொழுது வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக தாய், நாட்டிலிருந்து வெளியே செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களும் அதிகமாக ஏற்பட்டுள்ளன. இந்நிலைமைகளினால் தற்போதைய குடும்ப அலகானது சவால்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. அவ்வாறான சந்தர்ப் பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- குடும்ப அங்கத்தினர்களுக்குப் பெற்றோரின் பாதுகாப்பு, அரவணைப்பு அற்றுப் போதல்.
- பெற்றோரின் அன்பு, கருணை என்பவற்றை அவ்வப்போது பெற்றுக் கொள்ள முடியாமை.
- குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பிற்கு வெளிநபர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள நேரிடுதல்.

குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் இச்சவால்களைச் சரியாக விளங்கி அவற்றுக்குச் சாதகமாக முகங்கொடுக்கும் திறமைகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும். குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எந்நேரமும் கவனம் செலுத்துதல் வேண்டும். பெற்றோர், மூத்தவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது அனுபவங்கள், ஆலோசனை களை ஏற்று அதற்கேற்பச் செயற்படுதல் இச்சவால்களை வெற்றிக்கொள்ள பின்பற்ற வேண்டிய பயனுள்ள நடவடிக்கைகள் ஆகும். அவ்வாறே குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக வெளிநபர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, குடும்ப அங்கத்தினரது பாதுகாப்பு தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இச்சவால்களை சாதகமான முறையில் வெற்றிகொள்வது குடும்ப அங்கத்த வர்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையலாம்.

**செயற்பாடு 1-15**

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் தொடர்பான தொழில்கள் பற்றிய பட்டியலொன்றைத் தயாரிக்குக.
  - நெற்செய்கை தொடர்பான தொழில்கள்
  - மீன்பிடி சார்ந்த தொழில்கள்
  - கல்விச்சேவை தொடர்பான தொழில்கள்
- பெற்றோர் தொழில் புரிவதால் குடும்ப அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றி கடிதம் வரைக

**''உரிமைகளை நுகர்வோம் கடமைகளைச் சரிவரச் செய்வோம்''**

சிறப்பான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு குடும்பத்தின் மூலம் நீங்கள் பல்வேறு உரிமைகளைப் பெற்றுக் கொள்கின்றீர்கள் இவ்வாறு குடும்பத்தின் மூலம் உமக்குக் கிடைக்கும் உரிமைகளை நினைத்துப் பாருங்கள். அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- உணவு மற்றும் போசணை
- சுகாதார வசதி
- ஆடை, அணிகலன்கள்
- வீட்டு வசதி
- பெற்றோரின் அன்பு, கருணை, அரவணைப்பு
- பெற்றோர் மற்றும் மூத்தோரின் பாதுகாப்பு
- கல்வியைப் பெற்றுக் கொள்ளல்

இவ்வுரிமைகளை நுகர்தல் சிறந்த உடல், உள நலமுடைய பிரசையாக இருப்பதற்கு உதவும். அவ்வாறே உங்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்கு பெற்றோர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். அது எதிர்காலத்தில் உங்களுக்கு சிறந்த சமூக வாழ்க்கைக்கான பின்னணியை உருவாக்கும்.

குடும்பத்தின் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் உரிமையை நுகர்ந்து வாழ்வை வளமாக்கிக் கொள்ள முயற்சியுங்கள்.



உரு 1.31
பெற்றோரை வணங்கும் பிள்ளைகள்

நாம் நுகருகின்ற உரிமைகள் தொடர்பாக நம்மால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் நிறைய உள்ளன. அனைத்து உரிமைகளையும் நுகருகின்ற பொழுது அதனுடன் இணைந்த கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நாம் கட்டுப்பட்டுள்ளோம். அவ்வாறு கடமைகளை நிறைவேற்றும் பொழுது அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

பெற்றோரினதும் மூத்தோரினதும் அன்பு கிடைத்தல், மகிழ்ச்சிகரமான குடும்பச் சூழலில் வாழ்தல் என்பன உங்களுக்குரிய உரிமைகளாகும். அவ்வாறே பெற்றோருக்கும் மூத்தவர்களுக்கும் அன்பு காட்டுதல், கீழ்ப் படிதல், மதித்தல் என்பன அவர்களுக்காக நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளாகும்.



உரு 1.32



உரு 1.33

வீட்டில் கற்றலில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள்

நீங்கள் இக்கடமைகளை நிறைவேற்றும் பொழுது பெற்றோரிடத்திலும், மூத்தோரிடத்திலும் உங்கள் மீதான அன்பு அதிகரிக்கும். அவ்வாறே குடும்பத்தில் பேணப்பட்டு வரும் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல், அவற்றை உரியவாறு மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பனவும் உங்களது கடமைகளாகும்.

கல்வியைப் பெறுவது உங்களது உரிமையாகும். ஆர்வத்துடன் இச்செயற்பாட்டில் ஈடுபடல், ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல், அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளல் என்பன உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளாகும். அவ்வாறே சிறந்த முறையில் கல்வி கற்று

சமூகத்திற்குச் சேவைபுரிதல், நற்பிரசையாக வாழ்தல் ஆகியனவும் உங்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளாகும்.

வீட்டில் உள்ளவற்றைப் பாதுகாத்தல், பெற்றோர் வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் குடும்பத்துக்கு தலைமை வகித்தல், இளைய சகோதர, சகோதரிகளைப் பராமரித்துப் பாதுகாத்தல் என்பன பிள்ளைகளுக்குரிய கடமைகளாகும்.

சட்டரீதியான தொழிலொன்றைச் செய்து பணம் சம்பாதித்தல், முன்மாதி ரியாக வாழ்தல், குடும்ப உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல், உணவு மற்றும் போசணைத் தேவைகளை நிறைவுசெய்தல், குடும்பத் தலைமையை ஏற்றல், குடும்ப விடயங்களில் சரியான முடிவுகளை எடு த்தல் என்பன பெற்றோருக்குரிய கடமைகளில் சிலவாகும்.

ஒரு சமூகம் உருவாவதற்குக் காரணம் குடும்ப அலகுகளாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நல்ல குணவியல்புகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்கு அதன் உறுப்பினர்களிடத்திலும் நல்ல குணவியல்புகள் இருத்தல் அவசியம். குடும்ப உறுப்பினர்களாக இருக்கையில் உங்களிடத்தில் விருத்திசெய்து கொள்ள வேண்டிய குணவியல்புகள் பல உள்ளன. அவற்றை விருத்திசெய்து கொள்ளல் எதிர்காலத்தில் சிறந்த நற்பிரசையாக சமூகத்தில் மிளிர்வதற்கும் சிறப்பான சமூக வாழ்க்கையை வாழ்வதற்கும் உதவியாக அமையும். எப்பொழுதும் உங்கள் பெற்றோர், மூத்தவர்களின் எச்சரிக்கை, ஆலோசனைகள், முன்மாதிரி என்பவற்றை ஏற்று நடப்பின் சமூகத்தில் முன்மாதிரியான பிரசையாகத் திகழலாம்.

**நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய குணவியல்புகள்**

- சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்படுதல்
- தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுதல்
- பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல்
- ஒத்துழைப்போடு பணியாற்றுதல்
- கலந்துரையாடித் தீர்மானம் எடுத்தல்
- பிறரிடம் அன்பு காட்டல்
- நேர்மை
- பொறுமை
- பிறர் கருத்தை மதித்தல்
- நட்புறவு
- பொதுநலன் விருப்பு
- எளிமையாக வாழ்தல்
- தலைமை தாங்குதல்

**செயற்பாடு 1-16**

- அன்றாட வாழ்வில் நீங்கள் பெற்றோர், மூத்தவர்களுக்கு புரியும் கடமைகளைக் குறிப்பிடுக.
- தாய், தந்தையின் பண்புகளைக் குறிப்பிடும் கவிதைகள், பாட்டு கள் சிலவற்றை சேகரியுங்கள். அவற்றை தாளத்திற்கேற்பப் பாடிப் பழகுங்கள்.

## ''குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அயலவர்களிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்புவோம்''

நீங்கள் கருக்குடும்ப அல்லது விரிவான குடும்ப உறுப்பினராக இருக் கலாம். எவ்வாறாயினும் தந்தை சார் மற்றும் தாய் சார் உறவினர்களுடன் இடைத் தொடர்புகளைப் பேணுவது உங்களால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்பும் கடமையுமாகும். குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பைப் பேணும் பொழுது அவர்களுக்குரிய உறவு முறைகளை அறிந்து கொள் வதும் உறவினரோடு தொடர்பு கொள்ளும் பொழுது சரியான விளிப்புப் பதங்களைப் பயன்படுத்துவதும் சிறுபராயத்திலிருந்தே பழக்கத்திற்குக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு அறிந்து அவர்களை மரியாதையுடன் விளித்தல், உபசரித்தல் மற்றும் கடமைகளைச் சரிவரச் செய்தல் என்பன உங்களைப் பற்றி உறவினர்களிடத்தில் நல்லெண்ணமும் மதிப்பும் உண் டாவதற்குக் காரணமாக அமையும்.

**தாய்வழி மற்றும் தந்தைவழி உறவினர்களை அழைப்பதற்குப் பிரயோகிக் கப்படுகின்ற உறவுமுறைகள்**

| தந்தை வழி உறவினர் | உறவு முறை | தாய் வழி உறவினர் | உறவு முறை |
|---|---|---|---|
| **உங்கள் தந்தையின் ...** | | **உங்கள் தாயின்....** | |
| தந்தை | பாட்டன்/ தாத்தா | தந்தை | பாட்டன்/ தாத்தா |
| தாய் | பாட்டி | தாய் | பாட்டி |
| அண்ணன் | பெரியப்பா | அண்ணன் | மாமா |
| தம்பி | சிற்றப்பா | தம்பி | மாமா |
| அண்ணனின் மனைவி | பெரியம்மா | அண்ணனின் மனைவி | மாமி |
| தம்பியின் மனைவி | சின்னம்மா | தம்பியின் மனைவி | மாமி |
| அண்ணன் /தம்பியின் மகன் | உறவுச் சகோதரன் | அண்ணன் /தம்பியின் மகன் | மச்சான் |
| அண்ணன் /தம்பியின் மகள் | சகோதரி | அண்ணன் /தம்பியின் மகள் | மதினி/மச்சாள் |
| தங்கை /அக்கா | மாமி | அக்கா | பெரியம்மா |
| அக்காவின் /தங்கையின் கணவன் | மாமா | தங்கை | சின்னம்மா |
| அக்காவின் /தங்கையின் மகன் | மச்சான் | அக்காவின் கணவர் /தங்கையின் கணவர் | பெரியப்பா/ சிற்றப்பா |
| அக்காவின் /தங்கையின் மகள் | மதினி / மச்சாள் | அக்காவின் /தங்கையின் மகள் | சகோதரி |

உறவுமுறைகளை விளிக்கப் பயன்படுத்தப்படும் விளிப்புப் பதங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும். பிரதேசரீதியாகப் பயன்படுத்தப்படும் விளிப்புப் பதங்கள் சில வருமாறு,

| | |
|---|---|
| அப்பா | - வாப்பா |
| தாத்தா | - அப்பப்பா / அப்பச்சி |
| சிறிய தாய் | - சித்தி / சாச்சி / சின்னம்மா |
| சிறிய தந்தை | - சிற்றப்பா / சாச்சா / சின்னப்பா |
| பெரிய தந்தை | - பெரியப்பா |

குடும்ப அலகினுள் உறவுத் தொடர்புகளைப் பேணுவதால் குடும்ப உறுப்பினர்களுக்குப் பல பயன்கள் கிடைக்கின்றன. மூத்த உறவினர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் தொடர்பான அறிவினை வளர்த்து எதிர்கால சமூகத்துக்கு வழங்கும் சந்தர்ப்பம் உண்டாகும். அப்பழக்கவழக்கங்கள் அல்லது சம்பிரதாயங்களைப் பேணுகின்ற பொழுது அவற்றைப் பரம்பரை பரம்பரையாக வழங்குவதற்கு இந்த உறவினர் தொடர்பு பேருதவியாக அமைகின்றது. உறவினருடன் சமாதானமாகச் செயலாற்றுதல், சகிப்புத் தன்மை தொடர்பான பண்புகளை வளர்த்துக் கொள்ளக் காரணமாக அமையும். ஒருவருக்கொருவர் உதவி புரிவதற்கும் அடுத்தவர் தேவைகளின் பொழுது ஒத்துழைப்பு வழங்குவதற்கும் உறவினரது தொடர்பு பயன்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்களின் பல்வேறு விழாக்களில் உறவினர்கள் சமுகமளிப்பார்கள். வீட்டில் நடைபெறும் சமயக் கிரியைகள், திருமண வைபவங்கள், புதுமனை புகுதல் போன்ற விழாக்களை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். அவ்வாறே உறவினர்களைச் சந்திக்கச் செல்லும் சந்தர்ப்பங்களில், அது குடும்ப உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கு காரணமாகவும் அமையும்.

மரணச்சடங்கின்போது அனைத்து உறவினர்களும் சமுகமளித்தலானது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். தமது உறவினர் ஒருவர் இறந்து விட்டால் குடும்பத்தில் நெருங்கிய உறவினர்கள் சமுகமளித்து இறுதி மரியாதை செலுத்துவது சம்பிரதாயபூர்வ நடவடிக்கையாக உள்ளது. ஆரம்ப காலத்திலிருந்தே தாலாட்டுப் பாடல்களில், உறவினர் தொடர்பான அன்பு, மரியாதை, பாசம் என்பவற்றை மனத்தில் பதிய வைப்பதற்கு முயற்சித்து உள்ளார்கள்.

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சு நீயழுதாய் அரிய கண்ணால் நீர் வழிய
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்
தொட்டாரை சொல்லியழு தோல்விலங்கு மாட்டிவைப்போம்
மாமி அடிச்சாளோ மல்லிகைப் பூச் செண்டாலே
பாட்டி அடிச்சாளோ பால் வார்க்கும் சங்காலே
ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டும் கையாலே
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே
ஆண்பனையின் நுங்கே அணில் கோதா மாம்பழமே
பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்

**குடும்பத்தில் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும்**

***பழக்கவழக்கங்கள்***

புது வீட்டிற்கான அடிக்கல் நாட்டுதல், புதுமனை புகுதல், பிள்ளைக்கு ஏடு தொடக்குதல், முதற்தடவையாக குழந்தைக்குச் சோறூட்டல், பால் பருக்குதல், திருமண வைபவங்கள், மரணச் சடங்கு போன்றவற்றின் பொழுது கைக்கொள்ளவேண்டிய பழக்கவழக்கங்களை அறிந்திருத்தல் மிக அவசியமாகும்.

இலங்கை நாடு பல இனங்கள் வாழ்கின்ற, பல மதங்களைப் பின்பற்றுகின்ற, பல மொழிகளைப் பேசுகின்ற மக்கட் தொகுதிகளை உடைய பல்லின கலாசார சமூகத்தைக் கொண்டது. ஆதலால், பல இன மக்களுடைய பழக்க வழக்கங்களும் பல்வேறு வடிவங்களில் காணப்படும். சில வேளைகளில் இப்பழக்கவழக்கங்கள் பிரதேசரீதியாகவும் வேறுபடலாம்.

குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்டு வருகின்ற சடங்கு சம்பிரதாயங்களைப் பழக்கவழக்கம்

என்கின்றோம். இலங்கை பல்லின, பன்மத, பன்மொழி சமூகங்களைக் கொண்ட ஒரு நாடு. இத்தகைய நாட்டில் சமூகத்தில் தனித்துவமான பழக்க வழக்கங்கள் காணப்படும்.

**சம்பிரதாயங்கள்**

நீண்டகாலமாகப் பேணப்பட்டுவரும் பழக்கவழக்கங்கள், சம்பிரதா யங்கள் எனப்படும். சிலவேளைகளில் உங்களது குடும்பத்துக்கென்ற சில விசேடமான சம்பிரதாயங்களும் காணப்படலாம். குடும்பத்தினுள் கடைப்பிடிக்கப்படுகின்ற இவ்வாறான சம்பிரதாயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தினமும் சமய வழிபாடுகளில் ஈடுபடல்.
- வீட்டிலிருந்து வெளியில் செல்லும்பொழுது பெற்றோர், மூத்தவர் களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றாக இருந்து உணவு உட்கொள்ளல்
- புத்தாண்டு பிறப்பதற்கு முன் உறவினர் வீடுகளுக்குச் செல்லல். சில பிரதேசங்களில் புத்தாண்டு பிறந்த பின்னர் உறவினர் வீடுகளுக்கு செல்வார்கள்.
- சமயரீதியான முக்கியமான நாட்களில் குடும்ப உறுப்பினர்களுடன் வணக்கத்தலங்களுக்குச் செல்லல்.

குடும்ப உறுப்பினர்களால் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்கள் தொடர் பாக நீங்கள் நன்றாக அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். அவ்வாறே இச்சம்பிரதாயங்களை நடைமுறைப்படுத்த நீங்கள் முயற்சிக்க வேண்டும். மூத்தவர்களால் பேணப்பட்டு வந்த இவ்வாறான சம்பிரதாயங்களை மேலும் முன்னெடுத்துச் செல்கையில் அது குடும்பத்தினதும் சமூகத் தினதும் மேன்மைக்குக் காரணமாக அமையும்.

## குடும்பம் மற்றும் அயலவர்களுடனான தொடர்பு

ஒருவருக்கு அல்லது ஒரு குடும்பத்துக்கு சமூகத்தில் தனியாக தமது தேவைகளைப் பூர்த்திசெய்து வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வது முடியாததாகும்.

வாழ்க்கையில் எமக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அயலவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அவ்வாறே அயலவர்களுக்கு எமது உதவிகள் தேவைப்படும் சந்தர்ப் பங்களும் ஏற்படலாம்.

அயலவர்களுடன் சிறந்த தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், அவர்க ளுடன் நட்புடன் கருமமாற்றுதல் என்பன ஆரம்ப காலத்திலிருந்தே காணப்படும் கீழைத்தேய கலாசாரத்திற்குரிய பண்புகளாக இருக்கின்றன.

உங்களது அயலவர்கள் உங்கள் குடும்பத்திற்கு உதவிகளைப் புரிந்த சந்தர்ப்பங்களை நினைவுகூருங்கள். வீட்டில் பல்வேறு நிகழ்வுகள், அவசர வேலைகள், வைபவங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களிடமிருந்து கிடைத்த உதவிகள் உங்கள் குடும்பத்திற்கு பயனுள்ளதாக இருந்திருக்கும். இவ்வாறு அயலவர்களுடன் நட்புறவுடன் செயலாற்றுவது சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் எம் அனைவரதும் கடமையாகும்.

**அயலவர்களுடன் நட்புறவைப் பேணும் சந்தர்ப்பங்கள்**

- சிரமதான வேலைகளின் போது
- மத வைபவங்களின் போது
- கூரை வேயும் போது
- வீடு கட்டுவதற்கு அத்திவாரம் வெட்டுகின்ற போது
- மரண நிகழ்வொன்றின் போது (உணவு, பானங்களை விநியோகம் செய்தல் போன்ற)
- வயல் வேலைகளின் போது (நிலத்தை பண்படுத்துதல் / அறுவடை செய்தல் போன்ற)

அயலவர்களுடன் நட்புறவுடன் செயலாற்றும் பொழுது நாம் வாழுகின்ற பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் அது காரணமாக அமையலாம். நாம் வாழு கின்ற பிரதேசங்களில் பல்வேறு பொது விடயங்களைச் சிறப்பாகச் செய்து முடிக்க பிரதேசங்களில் காணப்படுகின்ற ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிக இன்றியமையாததாகும்.

அயலவர்களுடன் நட்புறவை விருத்திசெய்து கொள்ளும்போது அவர் களது சமூக வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாதவாறு குடும்பத்தின் அன்றாடக் கருமங்களை முன்னெடுத்துச்செல்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். பொருத்தமற்ற முறையில் கழிவுப்பொருள்களை அகற்றுதல், குப்பை கூளங்கள் இடல், அதிக ஒலியுடன் வானொலி, தொலைக்காட்சியைப் பயன்படுத்தல், சட்டரீதியற்ற தொழில்களில் ஈடுபடுதல் என்பன அயலவர்களின் சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் காரணிகளாகும். இவ்வாறான செயல்களைத் தவிர்ப்பதில் எப்பொழுதும் நாம் கவனமாக இருக்க வேண்டும். அவ்வாறே சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதனைத் தொடர்ந்து பேணிவருதல் என்பன எம்மால் ஆற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புகளாகும்.

**செயற்பாடு 1-17**

- உங்கள் குடும்பத்தில் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாயங்கள் சிலவற்றை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் நிரல் I இலும், மேற்கொள்வதால் கிடைக்கும் பயன்களை நிரல் II இலும் குறிப்பிடுக.

| உங்கள் குடும்பத்தில் கடைப் பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் | அந்த சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

- எங்களது பிரதேசத்தவர்களிடையே ஒத்துழைப்பு, நட்புறவு ஆகியவற்றை வளர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் சிலவற்றை அப்பியாசப் புத்தகத்தில் எழுதுக.

# 2 எமது சமூகம்

## அறிமுகம்

குடும்பம், மனித சமூகத்தின் ஒரு சிறிய அலகு ஆகும். குடும்பத்திலிருந்தே சமூகம் உருவாகிறது. தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோர் குடும்பத்தின் பிரதான அங்கத்தினர்கள். விரிந்த குடும்பத்தில் இவர்களோடு தாத்தா, பாட்டி போன்ற அங்கத்தினர்களும் இருப்பர். மனிதன் தனிமையை விரும்பித் தனித்து வாழ்ந்திருந்தால் இத்தகைய மனித சமூகமொன்று உருவாகியிருக்காது. மனிதனின் விசேட பண்பு சமத்துவமாக வாழ்வதாகும். மக்கட் சமூகம் என்பது, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. சமத்துவமாகக் கடமையாற்றுவதும் கூட்டாக வாழ விரும்புவதும் மனிதனது இயல்பு. எனவே, மக்கள் சமூகம் தோற்றம் பெறுவதற்கு மனிதனது இவ்வியல்பே காரணமாக அமைந்தது எனலாம்.



உரு 2.1
குடும்பம்

பண்டைக்கால மனித சமூகத்தை நோக்கின், மனிதன் எவ்வாறு ஒரு சமூகமாக வாழ்ந்தான் என்பது எமக்குப் புலப்படும். வேட்டையாடும் யுக மனிதன் தன்னுடைய உணவுத் தேவையை நிறைவுசெய்து கொள்வதற்காகவும் தனது ஏனைய தேவைகளை மேலும் இலகுபடுத்திக்

கொள்வதற்காகவும் ஏனையோருடன் ஒத்துழைப்புடனும் கூட்டாகவும் செயற்பட்டான்.



உரு 2.2
வேட்டையாடும் யுகம்

காலப்போக்கில் கால்நடைகளை மேய்ப்பதற்காகப் புற்றரைகளைத் தேடிச்செல்லல், கால்நடை உற்பத்திப் பொருட்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மூலம் முன்னரை விடப் பரந்த முறையில் தன் தேவைகளைக் கூட்டாகப் பூர்த்திசெய்து கொள்ளத் தொடங்கினான்.



உரு 2.3
நெல் அறுவடை செய்யும் காட்சி

விவசாயத் தொழினுட்ப வளர்ச்சியின் காரணமாக காலப்போக்கில் மனித சமூகத்தின் செயற்பாடுகள் விரிவடையலாயின. நிலத்தைப் பண் படுத்துதல், அறுவடை செய்தல், பொருட்களைப் பண்டமாற்று செய்தல் போன்ற மேலும் பல செயற்பாடுகள் இவற்றுடன் சேர்ந்தன. பிற்காலத்தில் மக்கள் சமூகமானது, சமூகக் குழுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணத் தொடங்கியது. எனவே, இவ்வாறான நடவடிக் கைகள்மூலம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மக்கள் சமூகம் வளர்ச்சி கண்டது. மனிதனது தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி காரணமாக பொருட்களை உற்பத்தி செய்தல், அவற்றைப் பயன்படுத்தும் திறன் ஆகியனவும் வளர்ச்சி காணத் தொடங்கின. இன்றைய மக்கட்

சமூகம் பல்வேறு தேவைகளையுடைய சமூகமாக மாறியுள்ளது. பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வளங்களைப் பெற்றுக் கொள்ளல், பொருட்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், அவற்றை நுகர்தல் போன்ற செயற்பாடுகள் மக்கள் சமூகத்தின் தேவைகளது வளர்ச்சியினைக் காட்டுகிறது. நவீன தொழினுட்ப யுகத்தில் இவ்வளர்ச்சிகளில் மேலும் பல மாற்றங்கள் நிகழலாம்.



உரு 2.4
தொழினுட்ப அறிவு



உரு 2.5
நகரமயமாக்கம்



உரு 2.6
அதிநவீன தொழினுட்ப யுகம்


இவ்வாறாக, ஆரம்பத்தில் எளிமையான முறையில் தோற்றம் பெற்ற மக்கட் சமூகம் பின்னர் சிக்கல் நிறைந்ததான ஒரு நிலையை அடைந்த மையைக் காணலாம். ஒவ்வொரு யுகத்திலும் மக்கட் சமூகத்தின் சிறிய அலகாக குடும்பம் அமைந்தது. குடும்பங்களில் அவ்வப்போது பல்வேறு மாற்றங்களும் ஏற்படலாயின. குடும்பங்களில் காலங்காலமாக ஏற்பட்ட இம்மாற்றங்கள் மக்கள் சமூகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின.

**செயற்பாடு 2-1**

- மக்கள் சமூகம் என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?
- மக்கள் சமூகம் எளிமையான வாழ்க்கை முறையிலிருந்து சிக்கலான நிலைக்கு மாற்றமடைந்த முறை பற்றிய தகவல்களைக் கோவைப் படுத்துக.

## மனித சமுதாயத்தில் காணப்படும் ஆளிடைத் தொடர்புகள்

ஒரு மக்கள் சமூகம் சிறப்பாக இயங்குவதற்கு அல்லது வெற்றி பெறுவதற்கு அவற்றிற்கிடையிலான ஆளிடைத் தொடர்புகள் மிக அவசியமாகும். இந்த ஆளிடைத் தொடர்புகள் குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தையர்க்கிடையேயிருந்து தொடங்குகிறது. இவர்களுக்கிடையே வலுவான ஆளிடைத் தொடர்பு இருத்தல் அவசியம். இது பிள்ளைகள், உறவினர் மத்தியிலும் பேணப்பட வேண்டும். ஒரு குடும்பத்தில் நிலவும் தொடர்புகள் சீராக இருந்தால் ஏனைய குடும்பங்களிலும் இத்தொடர்புகள் வலுவடையும். இவ்வாறு குடும்பங்களுக்கிடையே ஏற்படுகின்ற ஆளிடைத் தொடர்புகள் சிறப்பாக அமையும்போது, இக்குடும்ப உறுப்பினர்களோடும், குடும்பத்தோடும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கையில் முழுச் சமூகமும் ஒருவரோடு ஒருவர் தொடர்புடையோராகக் காணப்படுவர்.




இவ்வகையில் மக்கள் சமூகத்திற்கிடையில் ஏற்படுகின்ற ஆளிடைத் தொடர்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

## பெற்றோர் - பிள்ளைகளுக்கு இடையிலான ஆளிடைத் தொடர்பு

சமூகம் நிலைத்திருப்பதற்கு அவசியமான மனித வளத்தை வழங்குவதில் பிரதான இடம் வகிப்பது குடும்பமாகும். சமூகத்தின் தேவைக்கேற்ப மனிதனை உருவாக்குவதிலும் குடும்பத்துக்கு மிக முக்கிய பங்குண்டு. ஒழுக்கம் மிக்க சமூகத்தில் சட்டரீதியான திருமணத்தின் மூலம் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் முறை காணப்படுகின்றது. இவ்வாறு பெற்றெடுத்த குழந்தைக்ளுக்குத் தேவையான போசணை, பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை வழங்குதல் அவர்களது ஏனைய செயற்பாடுகளுக்கு உதவுதல் நோய்களிலிருந்து பாதுகாத்தல், உரிய வயதில் திருமணம்செய்து வைத்தல் போன்ற கடமைகளைப் பெற்றோர் நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாறு பெற்றோர் தமது பிள்ளைகளுக்குரிய கடமைகளைச் செய்வதன் மூலம் ஆளிடைத் தொடர்புகள் பேணப்படுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளது கடமைகளை நிறைவேற்றுவதுபோல், பிள்ளைகளாகிய நாமும் பெற்றோரது கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். பெற்றோரது உதவிகளைப் பிள்ளைகள் பயனுள்ள வகையில் பயன்படுத்தல் வேண்டும். பல வகைகளிலும் எம்மைப் பேணிய பெற்றோரை அவர்களது வயது முதிர்ந்த காலத்தில் பராமரித்தல், பாதுகாத்தல், அன்பு காட்டுதல், அவர்களுக்குக் கீழ்படிந்து நடத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் பெற்றோருடனான எமது தொடர்பை விருத்தியடையச் செய்யலாம். தற்கால மனித சமூகத்தில் சிலரது பங்களிப்பு இந்த விடயத்தில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தன்மை சமூகத்தின் வளர்ச்சிக் குப் பொருத்தமானதாக அமையாது. நாட்டில் சிறந்த பிரசையாகத் திகழ வேண்டுமாயின் பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையேயான தொடர்புகள் சிறப்பான முறையில் பேணப்படுதல் அவசிமாகும்.



உரு 2.7
பெற்றோருக்குப் பணிவிடை செய்தல்



உரு 2.8
பெற்றோரை வணங்குதல்

**செயற்பாடு 2-2**

- உமக்கும் உமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆகியோருக்கிடையேயுமான ஆளிடைத் தொடர்பின் தன்மை பற்றிக் குறிப்பிடுக.
- பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையேயான ஆளிடைத் தொடர்புகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை முன்வைக்க.

## ஆசிரியர் - மாணவர்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்பு

பிள்ளைகள் குடும்பச் சூழலில் இருந்து, அடுத்த கட்டமாகப் பாடசாலைச் சூழலுக்குச் செல்கின்றனர். பாடசாலைச் சூழலில் வளரும் பிள்ளைகளது திறமைகளை முறையாக இனங்கண்டு அதற்குப் பொருத்தமான வகையில் அவர்களை எதிர்காலத்திற்கு வழிப்படுத்துபவர்கள் பாடசாலை ஆசிரியர்களாவர். கல்வியை வழங்கி நற்பண்புகளை ஊட்டி, நன்மை, தீமைகளை வேறுப்படுத்திக் காட்டி, சம ஆளுமையை வளர்த்து விடுபவர்கள் ஆசிரியர்கள். அவ்வகையில் ஆசிரியர் - மாணவர்களுக்கிடையேயான ஆளிடைத் தொடர்புகள் சிறப்பாகப் பேணப்படுதல் சமூகத்திற்கு மிக அவசியமானதாகும்.



உரு 2.9
ஆசிரியரது வழிகாட்டலில்
கல்வி பயிலும் மாணவர்கள்

## அயலவர்களுடனான ஆளிடைத் தொடர்பு

மக்கட் சமூகத்தில் குடும்பத்தினூடாக ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவதில் மிக அண்மித்து இருப்பவர்கள் அயலவர்களாவர்.


சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம், பரிமாற்றங்கள், ஒத்தாசைகள் போன்ற போற்றத்தக்க மனிதப் பண்புகளை அயலவர்களுடன் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். இவ்வாறு அயலவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்ளலாம். இன, மத பேதங்களை மறந்து சகிப்புத் தன்மையோடு பழகுவதற்கு நற்பண்புகளையும் எண்ணங்களையும் எம்மில் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். அயலவர்களுடன் காணப்படும் தொடர்பில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே சமூகத்தில் மோதல்களும் விரக்தி நிலைகளும் தோன்றுகின்றன.



உரு 2.10
சிரமதானம்

## நிறுவனங்களுடனான ஆளிடைத் தொடர்பு

மக்களது பல்வேறு தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு மனித சமூகத்தில் பல்வேறு அமைப்புகள் காணப்படுகின்றன. சமய நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வேறு பல நிறுவனங்கள் போன்ற அனைத்தும் மனித சமுதாயத்திற்கு சேவையாற்றும் பொருட்டு நிறுவப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களுடன் நட்புறவுடன் ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவதற்கு இந்நிறுவனங்களில் கடமை யாற்றுதல், நேரடியாகப் பங்களிப்பு நல்குதல், பங்கேற்றல் என்பன முக்கிய காரணங்களாக அமைகின்றன. சமூக நிறுவனங்களோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள தொடர்புகளின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்களுக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்புகளின் தன்மை தீர்மானிக்கப்படும். இத்தகைய நிறுவனங்களுக்கும் உங்களுக்கும் இடையே முறையான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் முக்கியமானதாகும்.




**செயற்பாடு 2-3**

- ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான ஆளிடைத் தொடர்பு காரணமாக உங்களுக்கு கிடைக்கும் பயன்களைப் பட்டியற்படுத்துக.
- அயலவர்களுடன் கொண்டுள்ள சிறந்த ஆளிடைத் தொடர்பினால் மனித சமூகத்தினருக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- உங்கள் குடும்ப உறுப்பினர்கள் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பான அட்டவணையொன்றைத் தயாரிக்க.
- மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் குறைவான தொடர்புகளைக் கொண்டுள்ள நிறுவனங்களுடனான தொடர்புகளை எவ்வாறு அதிகரித்துக் கொள்ளலாம் என்பதற்கான வழிமுறைகளை முன்வைக்குக.

## மனித சமூகத்தில் காணப்படும் பல்வேறு தொடர்புகள்

| சமய அமைப்புகள் | கிராம அபிவிருத்திச் சங்கம் | விளையாட்டுக் கழகங்கள் |
|---|---|---|
| பங்களிப்பு | ஒத்துழைப்பு | பங்களிப்பு |
| சமயம் கற்பித்தல் | கிராமிய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு | ஒழுக்கம் மற்றும் போதனைகள் |
| ஒழுக்கம் மற்றும் போதனைகள் | பொதுச்சேவைகளை வழங்குதல் | விளையாட்டு அபிவிருத்திக்கு உதவுதல் |
| விழுமியங்களை ஏற்படுத்துதல் | நலன்புரி விடயங்களை நடைமுறைப்படுத்தல் | வெற்றி தோல்வியை ஏற்கப் பழகுதல் |
| சமயக் கிரியைகளுக்கு உதவுதல் | ஒத்துழைப்போடு இயங்குதல் | தலைவர்களை உருவாக்குதல் |
| பொதுபணிகளுக்காக மக்களைத் தயார்படுத்துதல் | கிராமத்திற்கு தலைமைத்துவத்தை வழங்குதல் | ஒத்துழைப்போடு செயற்படை வழிவகுத்தல் |
| சமூக ஒழுக்கத்துக்கு உதவுதல் | பிரதேசத்தின் பாதுகாப்பினை உறுதி செய்தல் | ஏற்பாடுகள் செய்யும் திறனை உணர்தல் |

நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் இத்தகைய பல அமைப்புகளைக் காணலாம். எல்லா அமைப்புகளுடனும் பிரதேசத்தவர்கள் எப்பொழுதும் தொடர்புகளை பேணுவது நன்று. பிரதேச மக்களின் முன்னேற்றத்திற்காக இயங்கும் பல்வேறு சமூக அமைப்புக்களுடனும் இணைந்து செயலாற்றுவது எமது கடமையாகும். இது எமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பெரிதும் உறுதுணையாகவும் அமையும்.

**செயற்பாடு 2-4**

- நீங்கள் வசிக்கும் பிரதேசத்தில் காணப்படுகின்ற பல்வேறு அமைப்புகளின் பட்டியலொன்றைத் தயாரிக்குக.
- இந்த அமைப்புக்களினால் கிடைக்கப்பெறும் சேவைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
- இந்த அமைப்புக்களோடு உமது குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறான தொடர்புகளைப் பேணுகிறார்கள் என்பதை விளக்குக.

## தரவுகள் மற்றும் தகவல்களை மனித சமுதாய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தல்

யாதாயினும் ஒரு விடயப்பரப்பு தொடர்பான தகவல்களை முன்வைக்கின்ற மூலதாரங்கள், தரவுகள் எனப்படுகின்றன. தரவுகள் மூலம் சரியான தகவல்களை வெளியிட முடியும். ஏதேனும் தேவைக்காகவே தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. தற்கால உலகம் தரவுகள் மற்றும் தகவல்களால் நிரம்பியுள்ளது. தரவுகளையும் தகவல்களையும் தடையின்றி வழங்குகின்ற ஊடகங்கள் பலவும் இன்று காணப்படுகின்றன.

தரவுகளையும் தகவல்களையும் தமது தேவைக்கு அல்லது சமூகத் தேவைக்குப் பயன்படுத்துகையில் அவற்றைப் பிழையற்ற வகையிலும் விவேகத்துடனும் பயன்படுத்துதல் முக்கியமாகும். விசேடமாக இணையப் பாவனை மற்றும் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துகையில் சிந்தித்துச் செயலாற்றுவதுடன் தகவல்களுக்கு அடிமைப்பட்டு வழிதவறி விடாது இருப்பது மிக முக்கியமாகும். தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தாராளமாகக் காணப்படுவதால் அவற்றைக் கல்வி நடவடிக்கைகளுக்காகப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும்.

**செயற்பாடு 2-5**

- உமது பாடசாலைத் தரவுகள் மற்றும் தகவல்களை இலகுவாக அறிந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் எவை?
- கல்விச் செயற்பாடுகளுக்கு மேற்குறிப்பிட்ட மூல ஆவணங்களைப் பயன்படுத்ததுக்கின்ற முறையினை உதாரணம் தந்து விளக்குக.
- வானொலி, தொலைக்காட்சி, இணையம், செய்திப்பத்திரிகை என்பவற்றின் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடிய தரவு வகைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பயன்களை விளக்குக.

### தரவுகளினதும் தகவல்களினதும் அவசியம்

வாணி மற்றும் குமார் ஆகிய இரண்டு பாடசாலை மாணவர்களும் பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில் வாகன விபத்தொன்று ஏற்படுவதைக் கண்டனர். தமது பாடசாலையைச் சேர்ந்த சகோதர மாணவர் ஒருவரை விபத்துக்குள்ளாக்கி விட்டு வாகனத்தையும் நிறுத்தாது செல்வதைக் கண்ட குமார் உடனே மோட்டார் வாகனத்தின் இலக்கத்தை நினைவில் வைத்துக் கொண்டான். விபத்துக்குள்ளான மாணவனை அங்கு குழுமியிருந்தோர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு கடமைக்காகச் சமூகமளித்திருந்த பொலிஸ் அதிகாரியிடம் விபத்துக்குள்ளாகிய மோட்டார் வாகனத்தின் இலக்கத்தை குமார் கூறினான். தனது கடமைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குமாருக்கு பொலிஸ் அதிகாரி நன்றி கூறினார்.

- மேற்குறிப்பிட்ட சம்பவத்தின்போது குமார் மேற்கொண்ட முக்கிய செயற்பாடு யாது?

இவ்வாறு அன்றாட வாழ்க்கையில் நாம் பல்வேறு நிகழ்வுகளை, பல்வேறு சந்தர்ப்பங்களில், எதிர்பாராத நேரங்களில் எதிர்கொள்ள நேரிடும். அத்தகைய சந்தர்ப்பங்களின்போது அங்கு காணப்படும் தரவு களும் தகவல்களும் எம்மிடம் இருக்குமாயின் அது தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் இலகுவாக முன்னெடுத்துச் செல்லமுடியும். மேலும், அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினை, சிக்கல் என்பவற்றையும் மட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

எழுத்துருவில் இருப்பவற்றை மட்டுமே தரவுகளாகவும் தகவல்களாகவும் கொள்ள முடியாது. மக்களது வாழ்க்கை அனுபவங்களும் கூட பயனுள்ள தரவுகளாகவும் தகவல்களாகவும் விளங்குகின்றன.

எம்மிடத்தே காணப்படும் முன்அனுபவங்களும் கூட பயன்தரவல்லன. முன்அனுபவங்கள் எம்மிடம் இருப்பின், எந்தவொரு விடயத்தையும் எந்தவொரு சவாலையும் எச்சந்தர்ப்பத்திலும் எதிர்கொண்டு அதனை இலகுவாக வெற்றிகொள்ள முடியும். ஆகையால், எம்மிடம் இருக்கும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பயன்படுத்தி எமக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் அவற்றை அமைத்துக்கொள்ளல் வேண்டும். இதனை வாழ்வின் முன்மாதிரியாகவும் கொள்ளல் வேண்டும்.

பொதுசன ஊடகங்களினூடாக மக்களுக்குத் தேவையான பல சமூக, பொருளாதாரத் தகவல்கள் அன்றாடம் முன்வைக்கப்படுவதை அவதானிக்கலாம்.

**எமக்கு அன்றாடம் தேவைப்படும் முக்கிய தகவல்கள்**

- வானிலை எதிர்வுகூறல்
- நாணய மாற்று வீதம்
- சந்தை விலைகள்
- அவசர தொலைபேசி இலக்கங்கள்

  உதாரணம் - 1919 அரச தகவல் நிலையம்

  - 119 அவசரகால அழைப்புப் பிரிவு
- வியாபார விளம்பரங்கள்
- சிறு விளம்பரங்கள்
- அரச அறிவித்தல்கள்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்

மக்களுக்கு அவசியமான பல்வேறு தகவல்கள், ஊடகங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் தகவல்கள் மிகைத் தன்மையானவையாகவும் போலியானவையாகவும் இருக்கலாம். சில சமயங்களில் இவை சந்தேகத்துக்குரிய தகவல்களாகவும் இருக்கலாம்.

விசேடமாக இன்றைய ஊடகங்கள் பலவும் வியாபாரத்தை நோக்காகக் கொண்டுள்ளன. அவற்றில் விளம்பரம் செய்யப்படுகின்ற விடயங்களில் பிரபலமான நபர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால், விளம்பரப்

பொருட்களுக்கு நாம் முழுமையாக அடிமையாகி விடாது, அவற்றைப் பயன்படுத்துகையில் அதுகுறித்துச் சிந்தித்துத் தீர்மானங்களை எடுப்பது அவசியம். குறிப்பாக உணவு, பானவகைகள், அலங்காரப் பொருட்கள், தொழில்நுட்பக் கருவிகள் விடயத்தில் நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

### சவால்களை எதிர்கொள்ளல்

நாம் எமது அன்றாட வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு நிகழ்வுகளை எதிர்கொள்கின்றோம். அவ்வாறு எதிர்கொள்ளும் நிகழ்வுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- பரீட்சைகளுக்கு முகங்கொடுத்தல், பரீட்சையில் சித்தியடையாமை
- குடும்ப உறுப்பினர்களது மரணம்
- பணப்பற்றாக்குறை
- நல்ல நண்பர்களின் பிரிவு
- பொருத்தமற்ற நண்பர்களின் நட்பு
- தொழில் விடயமாகத் தீர்மானம் எடுத்தல்
- பாடசாலையைத் தெரிவுசெய்தல்
- திறமைகளைச் சரியாக இனங்காணல்
- சமூக அநீதிகளுக்கு உட்படல்
- மனவிரக்தி
- திடீர் அனர்த்தம் ஏற்படல்

இத்தகைய நிகழ்வுகளை நீங்கள் எவ்வாறு எதிர்கொள்வீர்கள்? அதற்கான மனஉறுதி உங்களிடம் உண்டா? அவ்வாறில்லையெனில் அதற்காக நீங்கள் என்ன செய்வீர்கள்? போன்ற வினாக்களுக்கான விடைகளை நீங்கள் சிந்தித்துப்பாருங்கள். அப்போது அதற்கான விடை கிடைக்கும். எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள். பிரச்சினைகளின் போதும் சவால்மிக்க சந்தர்ப்பங்களின் போதும் துவண்டு போகாதீர்கள். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளுங்கள். எந்தவொரு பிரச்சினையின் போதும் அதற்குத் தீர்வாக பல மாற்று வழிகள் உள்ளன. உதாரணமாக, சிலர் பரீட்சையில் சித்தியெதத் தவறி விட்டால் என்ன செய்வது? இத்தோடு எல்லாம் முடிவடைந்து விட்டது என நம்பிக்கை இழந்து விடுவார்கள். எனினும், இச்சவாலை சாதகமாக எதிர்கொள்ளும் மாற்று வழிகள் பலவும் உங்கள் முன்னிலையில் உண்டு.

உதாரணமாக -

- பரீட்சைக்கு மீண்டும் தயாராகுதல்
- தொழிற் பயிற்சிப் பாடநெறியைத் தொடர்தல்
- தனக்கு இயலுமான துறையை மேலும் விருத்தி செய்து கொள்ளல்
- சுயதொழிலில் ஈடுபடுதல்
- பயிற்சிகள் பெறுதல்

போன்ற பல்வேறு மாற்று வழிமுறைகள் உள்ளன. ஆகவே பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது வாழ்வில் விரக்தியடைந்து தற்கொலைக்கு துணிதல், மனம் சஞ்சலப்படல்(பதகளிப்பு), தோல்வியை ஏற்காமை போன்ற எதிர்மறையான எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அவற்றை வெற்றிகரமாக எதிர் கொண்டு வெற்றிப் பாதையில் செல்லக்கூடிய உளத்துணிவை எம்மில் வளர்த்துக் கொள்வது அவசியம்.

**செயற்பாடு 2-6**

- நீங்கள் எதிர்நோக்கிய சவால் மிகுந்த ஒரு விடயம் தொடர்பாக நினைவு கூருங்கள்.
- அவ்வாறான சந்தர்ப்பத்தின்போது நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை ?
- அவ்வாறான பிரச்சினையொன்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டபோது உங்களிடம் காணப்பட்ட பலவீனங்கள் யாவை ?
- அத்தகைய பலவீனங்கள் தற்போதும் உம்மிடத்தில் உள்ளனவா ?
- அவ்வாறாயின் அப்பலவீனங்களை நிவர்த்திசெய்து கொள்ளக் கூடிய வழிமுறைகளை நீங்களாகவே முன்வைத்துச் செயற்படுத்துங்கள்.

## வாழ்க்கையில் சவால்மிக்க சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாகச் செயற்படுதல்

மனிதனிடம் காணப்படும் சிறப்பானதோர் திறமையே ஆக்கத்திறன் ஆகும். மனிதனுள் காணப்படும் இந்தத் திறமையே அவன் அனைத்து விலங்கினங் களையும் விட வேகமாக முன்னேற வழிவகுத்தது. உலகில் மனிதன் பிறக்கும்போதே அவனுடன் ஆக்கத்திறனும் பிறக்கிறது. இது மனித எண்ணங்களில் இருந்து வெளிப்படுகின்றது. ஆகவே, நாம் எதிர்நோக்கும் அனைத்து சவால்மிக்க சந்தர்ப்பங்களின் போதும் ஆக்கத்திறன்மிக்க முறையில் செயற்படுவது மிக அவசியமாகும். நீங்கள் ஆக்கத்திறன் மிக்கவர்களாக இருப்பின் கீழ் குறிப்பிடப்படுகின்ற பண்புகள் உங்களுள் காணப்படுகின்றனவா எனப் பரீட்சித்துப் பாருங்கள்.

- எதிர்காலம் சிறப்பாக உள்ளதா?
- நடைமுறைச் செயற்பாடுகளில் திருப்தி கொள்கிறீரா?
- மகிழ்வுடன் இருக்கிறீரா?
- ஆக்கத்திறன் கொண்டவரா?
- மாற்று வழிமுறைகள் பற்றி அறிந்து வைத்துள்ளீரா?
- எதிர்காலம் பற்றி பகற்கனவு காண்கிறீரா?
- எப்பொழுதும் உற்சாகத்துடன் காணப்படுகின்றீரா?
- தீய செயற்பாடுகளை இனங்கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளீரா?
- சுதந்திரமாகச் சிந்திக்கிறீரா?
- நடைமுறை சார்ந்த பிரச்சனைகளுக்குப் புதிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கிறீரா?


இத்தகைய பண்புகள் உங்களிடம் காணப்படுமாயின், உண்மையிலேயே நீங்கள் ஆக்கத்திறனுடைய ஒருவராக இருக்கிறீர்கள் என்று பொருள்படும். அவ்வாறாயின் நீங்கள் எத்தகைய சவாலையும் இலகுவில் வெற்றி கொள்வீர்கள்.

**செயற்பாடு 2-7**

- உங்களைச் சூழவுள்ள வளங்களை அவதானியுங்கள் இவ்வளங்களைக் காணும்போது உள்ளத்தில் எத்தகைய எண்ணங்கள் தோன்றுகின்றன?
- தோன்றும் எண்ணங்கள் பற்றிய உமது கருத்தை வெளிப்படுத்துக.
- யாதாயினுமொரு சந்தர்ப்பத்தில் பிறர் காணாத, பிறர் அறியாத நிலையில் சுற்றாடலிலுள்ள வளமொன்றினை நீங்கள் கண்ணுற்ற பொழுது எத்தகைய சிந்தனை உண்டானது?
- செய்திப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள், அறிக்கைகள், புகைப்படங்கள் தொடர்பாக மேலெழுந்தவாரியாக அல்லது வேறு கண்ணோட்டத்தில் அதன் உள்ளார்ந்த கருத்தினை அல்லது விடயத்தைப் பற்றிக் கவனம் செலுத்துங்கள்
- உங்கள் பாடசாலையில் அல்லது குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கலான விடயமொன்றிற்கு அல்லது பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வொன்றினை முன்வைக்குக.

### மக்கள் சமூகத்தில் நடைமுறையில் உள்ள உரிமைகள்

உரிமைகள் மக்கள் சமூகத்தில் இருந்து எமக்கு கிடைக்கும் வரப்பிரசாதமாகும். அதனூடாக ஒருவர் தமது வாழ்வில் திருப்தி கொள்ளலாம். உரிமைகளின் மூலம் தன்னுடைய வாழ்க்கையை சிறந்ததாகவும் மதிப்பிற்குரியதாகவும் ஆக்கிக்கொள்வதற்கு சமுதாயத்தின் மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.




## எமக்குள்ள உரிமைகள்

### சிவில் உரிமைகள்

- வாழும் உரிமை
- கல்வி கற்கும் உரிமை
- விரும்பிய சமயத்தினைப் பின்பற்றும் உரிமை
- கருத்து வெளியிடும் சுதந்திரம்
- விரும்பும் தொழிலைச் செய்தல்
- சமத்துவம் பேணுதல்
- விரும்பும் இடத்தில் வாழும் உரிமை

### அரசியல் உரிமைகள்

- வாக்களிக்கும் உரிமை
- தேர்தலில்பங்குபற்றும் உரிமை
- விரும்பும் அரசியல் கட்சியில் இணையும் உரிமை
- விரும்பும் அரசாங்கத்தைத் தெரிவுச்செய்யும் உரிமை
- அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை
- அரச பதவி வகிக்கும் உரிமை

## உரிமைகளும் கடமைகளும்

சமூக அங்கத்தவர் என்ற வகையில் எமக்கும் பல உரிமைகள் உள்ளன. சமூகநலனை நோக்காகக் கொண்டே உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, உரிமைகளை அனுபவிப்பதற்கு முன்னதாக சமுதாயம் தொடர்பான எமது கடமைகளை நிறைவேற்றுவது முக்கியமாகும். பொதுவாக சமூகத்தின் இருப்புக்காக பிரசைகள் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குள்ள கடப்பாட்டை கடமை என்று குறிப்பிடலாம். இவ்வகையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு நீங்கள் கட்டுப்பட்டுள்ளீர்கள்.

**உரிமைகள்**

உ+ம் -

- கல்வி கற்றல்
- விரும்பும் சமயத்தினை பின்பற்றல்
- கருத்து வெளியிடும் உரிமை
- வாழும் உரிமை

**கடமைகள்**

உ+ம் -

- நன்றாக கற்றல்
- பிற சமயத்தவர்களுக்கு இடையூறு செய்யாதிருத்தல்
- பிறர் மனம் புண்படும் வண்ணம் கதைக்காதிருத்தல்
- பிறருக்கு இடையூறு செய்யாதிருத்தல்

**செயற்பாடு 2-8**

- உங்களுக்குள்ள உரிமைகளின் பட்டியலொன்றைத் தயாரிக்க.
- அந்தப்பட்டியலின் அடிப்படையில் உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் பட்டியலொன்றைத் தயாரிக்க.


## உரிமைகளைச் சட்ட வரம்பிற்குள் அனுபவிப்பதன் முக்கியத்துவம்

எந்தவொரு சமுதாயத்திலும் ஒருவர் தனது உரிமைகளை அனுபவிக்கின்ற பொழுது தனக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும். இவ்வுரிமைகளை சகல நபர்களுக்கும் சிறப்பான முறையில் வழங்குவதன் மூலம் ஒரு சிறந்த சமூகமொன்றை உருவாக்கலாம்.

இவ்வகையில் ஒவ்வொரு பிரஜையினதும் தனியுரிமை மற்றும் சுதந் திரம் பாதுகாக்கப்படல், மக்கள் தேவைகள் நிறைவேற்றப்படல் சிறந்த ஆளிடைத் தொடர்புகளின் விருத்தி, தரமான வாழ்க்கை வசதி களை ஏற்படுத்திக் கொள்ளல் போன்றவற்றின் காரணமாக நாகரிகமான சமூகமொன்று உருவாகும். தமக்குரிய உரிமைகளை அனுபவிக்கையில் சமூகத்தினுள் காணப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் அவற்றை அனுபவித்தல் வேண்டும். அது, மனித சமூகத்தின் நலனுக்கு அத்தியாவசியமானதாகும்.

## நற்பிரசையொருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய நற்பண்புகள்

மனிதன் சிறந்த வளமாகக் கருதப்படுகிறான். மனிதன் மேன்மைமிக்க ஒரு வளமாக வளர்ச்சிகாண வேண்டுமெனில் உயர்ந்த மானிடப் பண்புகள் நிரம்பியனவாக இருத்தல் வேண்டும். மனிதன் மனிதர் மீது அன்பு செலுத் துவதுடன் பிற விலங்கினங்களுக்கும் சுற்றாடலுக்கும் அன்பு செலுத்துதல் வேண்டும். அப்பொழுது பண்புமிக்க மனித சமூகமொன்று உருவாகும். மனிதனால் விருத்தி செய்து கொள்ளப்பட வேண்டிய மானிடப் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.



**செயற்பாடு 2-9**

- மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பண்புகள் தவிர உம்மிடம் காணப்படுகின்ற பிற பண்புகளை அட்டவணைப்படுத்துக.
- இவ்வாறான பண்புகளை விருத்தி செய்துகொள்ள மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை முன்வைக்குக.
- சமூக உறுப்பினர்கள் நற்பண்புகளை கொண்டிருக்கும்போது சமூகத் திற்குக் கிடைக்கும் நன்மைகளை விளக்குக.
- சமூகத்தில் காணப்படும் நற்பண்புகளை வெளிப்படுத்தும் வகையி லான சுவரொட்டி (போஸ்டர்) ஒன்றைத் தயாரிக்குக.

## தொழிலாளர்களின் உரிமைகள்

மனித உரிமை தொடர்பான சர்வதேச வெளியீட்டின் 23 வது பிரிவின் படி தொழில்புரிவதற்கும் தனது தொழிலைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கும், தொழில்புரியும்போது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும், தொழில்ரீதியான பாதுகாப்புப் பெறுவதற்கும் அனைத்துப் பிரசைகளுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் அரச அல்லது தனியார் துறை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டதிட்டங்கள் நடைமுறையிலுள்ளன.

- அரசியல் யாப்பிற்கமைய ஊழியர்களைப் பாதுகாக்கவும் மற்றும் அவர்களது உரிமைகளைப் பேணவும் சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தொழிலாளர் சட்டம், ஊழியர் சேமலாப நிதி, விதவைகள் அநாதைகள் நிதியம், ஓய்வூதியம், காப்புறுதி, மனித உரிமை அமைப்பு, நிறுவன அறிக்கை போன்றனவற்றின் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மேற்குறிப்பிடப்பட்டவாறு எந்தவொரு தொழிலாளருக்கும் தாம் தொழி புரியும் இடத்தில் அநீதி இழைக்கப்படுமேயானால் அவர்களது தொழிற் பாதுகாப்பிற்கு இவ்வாறான பல சட்ட திட்டங்கள் அவசிய மாகின்றன.

## தொழிலாளர் சட்டங்கள் முறையாகப் பின்பற்றப்படாமையால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்

- உழைப்பு சுரண்டப்படுதல்
- தொழிலாளரின் அதிருப்தி
- உழைப்புக்குரிய வேதனம் கிடைக்காமை
- தொழில் பாதுகாப்பு இன்மை
- இளைப்பாறிய பின்னர் அனாதராவாதல்
- தொழில்ரீதியான அநீதிகள் இடம்பெறல்
- தொழில் வழங்குநரின் தொல்லைகளுக்கு உட்படல்
- பாதுகாப்பு முன்னேற்பாடுகளைப் பேணாது தொழில் புரிவதால் நோய்களுக்கு உள்ளாதல், விபத்துகள் ஏற்படல்

## சிறுவர் உழைப்புச் சுரண்டலைத் தவிர்த்தல்

சிறுவர்களது உழைப்புச் சுரண்டலுக்கு எதிரான வகையில் வியாபார நிலையங்கள் மற்றும் காரியாலய சட்டப் பிரிவின் பிரகாரம் 14 வயதிற்கு குறைந்த சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் கூடாது. அவ்வாறு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தால் அது தொடர்பான தகவல்களை தொழில் ஆணையாளருக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அத்தகைய சந்தர்ப்பங்கள் இடம்பெறாது தவிர்த்துக் கொள்ளலாம்.

இலங்கையில் கட்டாயக்கல்வி அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் 14 வயதிற்குக் குறைந்த எந்தவொரு சிறுவரும் பாடசாலைக்கு செல்லாதிருக்க முடியாது. குடும்பங்களில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினை, கவனிப்பாரற்ற சிறுவர்கள், பெற்றோரின் அறியாமை, சில நபர்களின் அழுத்தம், பரம்பரைத் தொழில் போன்ற காரணங்களால் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படலாம்.

## சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள்

- உடல், உள பலவீனம் ஏற்பட்டு நோய்வாய்ப்படல்
- உழைப்புச் சுரண்டலுக்கு உட்படல்
- துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாதல்

- கற்பதற்கான வாய்ப்புகள் இழக்கப்படல்
- மகிழ்ச்சிகரமான சிறுவர் பருவத்தைத் தவறவிடல்
- சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடல், போதைப்பொருள் பாவனைக்கு ஆளாதல்
- தொல்லைகளுக்கு உட்படுதல்
- உடற் குறைபாடுகளுக்கு உட்படுதல்

**சிறுவர் தொழில் தொடர்பான சமூகப் பொறுப்புகள்**

- சகல சிறுவர்களையும் தமது பிள்ளைகளாக எண்ணுதல்
- கட்டாயக் கல்விக்காகப் பாடசாலையில் சேர்த்தல்
- குறுகிய இலாப நோக்கில் சிறுவர்களை வேலைக்கமர்த்தாதிருத்தல், பால்ய தொழிலாளர் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தல்
- வயதில் மூத்தவர்கள் சிறுவர் உழைப்பில் தங்கி வாழாதிருத்தல்

**செயற்பாடு 2-10**

- தொழில் உரிமைகளை வெளிப்படுத்தும் சுவரொட்டி ஒன்றை தயாரிக்குக
- சிறுவர்களை வேலைக்கமர்த்துவதன் காரணமாக "சிறுவர் உலகம் நழுவிப் போகிறது". இது தொடர்பான கவிதையொன்றினை ஆக்குக.

**ஊழியர்கள் சேவையிலிருந்து இளைப்பாறல்**

அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்புரியும் ஊழியர்கள் தாம் புரியும் தொழிலிருந்து ஒய்வுப்பெற்றுச் செல்வதற்கான சட்ட நடைமுறைகள் உள்ளன. அரச ஊழியர்கள் தாம் விரும்பினால் 57 வயதில் தம் தொழி லிருந்து இளைப்பாறலாம். இல்லையேல், தமது விருப்பத்திற்கேற்ப 60 வயது வரை சேவை புரியலாம். தனியார்துறை ஊழியர்கள் 55 வயது பூர்த்தியானதன் பின்னர் ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக் கொள்ளலாம். பெண் ஊழியர்கள் திருமணத்தின்பொழுது தனக்குரிய ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஊழியர் ஒருவர் ஓய்வுபெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முன்னரேயே தான் தொழில் புரியும் நிறுவனத் தலைவரின் ஊடாக ஓய்வூதியத் திணைக் களத்துக்கு அறிவிக்க வேண்டும். ஓய்வுபெறுவதற்கு முன்பு தனக்குரிய சுய விபரக்கோவையையும் பூரணப்படுத்த வேண்டும்.

## இளைப்பாற்றுக் காலத்தை பயன்மிக்கதாக ஆக்கிக் கொள்ளல்

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தமது நேரம், உழைப்பு என்பவற்றை அர்ப்பணித்துள்ளார்கள். நெடுங்காலமாகத் தொழிலோடு இணைந்த சூழலில் கடமையாற்றிவிட்டுப் பின்னர் அந்நிலைமை மாற்றமடைகின்றபோது ஓய்வுபெற்றவர்கள் உடல், உள பலவீனங்களுக்கு உட்படலாம். ஆதலால் தனது ஓய்வு காலத்தை மிகவும் பயன்மிக்கதாக அமைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்வதும் முக்கியமாகும். பொழுது போக்குகளில் ஈடுபடுதல், குடும்ப நடவடிகைகளுக்கு உதவுதல், ஆக்கங்களில் ஈடுபடுதல், தமது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடலாம்.

## தமது உழைப்புக்கான ஊதியத்தைப் பெறும் உரிமை

சகல உழியர்களும் தமது நேரம் மற்றும் உடலுழைப்பு ஆகியவற்றை அர்ப்பணிப்புச் செய்வதால் சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை, கடமை நேரத்திற்கு மேலதிகமாக ஆற்றப்படும் பணிக்காக மேலதிகக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை ஆகியவற்றுக்கு சட்டரீதியான அனுமதி உண்டு. யாதேனும் ஒரு நிறுவனத்தில் சேவைபுரிவதற்கு உங்களுக்கு நாளாந்தம் அல்லது மாதாந்தச் சம்பளம் கிடைக்கப் பெறுவதாயின், அதற்குரிய சேவையை மனச்சாட்சியின் படி வழங்குவதும் நமது கடமையாகும்.

## சமுதாயத்தின் மூலம் சிறுவர்கள், இளைஞர்கள், வயது முதிர்ந்தோர் ஆகியோரைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

சகல நாடுகளும் தமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வாக பேணும்வகையில் செயற்படுகின்றன. சமூகத்திலுள்ள சிறுவர்கள், இளைஞர், யுவதிகள், வயது முதிர்ந்தோர் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர். எல்லா குழுவினருக்கெனவும் சேவை நிலையங்கள் மற்றும் நலன்புரிச் செய்றபாடுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன.

உ+ம் -

| | | | | |
|---|---|---|---|---|
| சிறுவர்களுக்காக | ⇨ | பாட சாலை | இலவசக் கல்வி | போசணையும் பாதுகாப்பும் |
| இளைஞர் யுவதிகளுக்காக | ⇨ | தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் | தொழில் நிறுவனங்கள் | தொழிற் சங்கம் |
| வயது முதிர்ந் தோர்களுக்காக | ⇨ | ஓய்வூதியம் | நலன்புரி நிதிகள் | சுகாதாரம் பேணல் |

இக்குழுவினரைப் பாதுகாக்கும் பொருட்டு பல சமூக நிறுவனங்கள் பல் வேறு சேவைகளை வழங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### சிறுவர், முதியோரைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் சட்டங்கள்

உலகில் அனைத்துச் சமூகங்களிலும் சிறுவர்கள் மற்றும் முதியோரைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. பல நாடுகள் தமது நாட்டுக்குப் பொருத்தமான வகையில் இதற்கென சட்டங்களை வகுத்துள்ளன. அந்த வகையில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் கல்வி வசதிகளை இலவசமாக அல்லது சகாய கொடுப்பனவு முறையில் வழங்குதல், புலமைப்பரிசில் வழங்குதல் என்பன செயற்படுத்தப்படுகின்றன. வயது முதிர்ந்தோருக்கு இளைப்பாற்றுச் சம்பளம் மற்றும் காப்புறுதிக் கொடுப்பனவு, சுகாதாரக் காப்புறுதித் திட்டம், முதியோர் இல்லங்கள் போன்றன ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சிறுவர்கள் மற்றும் முதியோரை சமமாக பேணிப் பாதுகாப்பதற்கு சமூகங்கள் பலவற்றிலும் செயற்றிட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### சமூக நபரொருவர் எதிர்நோக்கும் சவால்கள்

சமூகத்தில் நாம் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறோம். சவால் என்பது உடனடியாகத் தீர்வுகள் கிடைக்காத சிக்கல் அல்லது தடை மிகுந்த ஒன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் சவால் மிக்க சந்தர்ப்பங்களை தனது வாழ்க்கையில் எதிர்நோக்கலாம். சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குக் கீழே குறிப்பிடப்படும் பண்புகளை விருத்தி செய்து

கொள்வது அவசியம்.

- பொறுமை
- சகிப்புத் தன்மை
- உறுதியான எதிர்காலத் திட்டம்
- தன்னம்பிக்கை
- துணிவு
- சமயோசிதம்
- சமயோசிதம்
- ஆக்கத்திறன்
- தாமாக முன்வருதல்
- சுயமாக உறுதி
- தந்திரோபாயம்
- உடலியல் மற்றும் உளவியல் பலம்

பாடசாலை மாணவர்களாகிய நாம் எதிர்நோக்கும் சவால்மிகு சந்தர்ப் பங்களில் ஒன்றாகப் பரீட்சைக்கு முகங்கொடுத்தலைச் சுட்டிக் காட்ட லாம். அவ்வாறான சந்தர்ப்பத்தின்போது நன்றாகத் திட்டமிட்ட முறை யில் கற்றல் நடவடிக்கைகளை நிறைவுசெய்வதன் மூலம் அதனை வெற்றி கொள்ளலாம். மேலும், கடந்தகால வினாப்பத்திரங்களின் விடைகளை கண்டறிந்து பயிற்சிகளில் ஈடுபட்டுத் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு பரீட்சைக்குச் சிறப்பாக முகங்கொடுப்பதன் மூலமும் இவ்வாறான சவாலை மேலும் சிறப்பாக எதிர்கொள்ளலாம்.

### இன்றைய நவீன உலகின் நபரொருவர் எதிர்நோக்கும் சவால்கள்

- போட்டித்தன்மைக்கு முகங்கொடுத்தல்
- சிக்கல் நிறைந்த சமூகம்
- ஊடகத் தலையீடு
- நவீன அலங்காரங்கள்
- கலாசார சீர்கேடு
- விழுமியங்களின் குறைபாடு
- துஷ்பிரயோகங்களின் அதிகரிப்பு
- சிறுவர்களுக்கான பாதுகாப்பின்மை
- தொழிலின்மை

- கல்வி, தொழில் உலகோடு பொருந்தாமை
- ஆங்கிலமொழித் தேர்ச்சியிலுள்ள குறைபாடுகள்
- நவீன தொழில்நுட்ப உபகரணப் பயன்பாடு
- அதிகரித்த வாழ்க்கைச் செலவு
- சுற்றாடல் பிரச்சினைகள்

**சவால்களை வெற்றிகொள்ள பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்**

யாதாயினும் ஒரு சவாலில் வெற்றியடைய வேண்டுமாயின், பூரண தயார்நிலையில் இருப்பதுடன், அதற்கான முறையான வேலைத் திட்டமொன்றும் இருத்தல் அவசியம். சவால்களை எதிர்கொள்ளாது ஒதுங்குவதை விட, அவற்றுக்கு முகங்கொடுப்பதே சிறந்தது. அதன் மூலம் மனஉறுதி, அனுபவம், முதிர்ச்சித் தன்மை என்பன ஏற்படும். ஏதாவது ஒன்றினைப் பற்றி நினைத்து கவனக்குறைவாக இருத்தல், காலந்தாழ்த்துதல், புறக்கணித்தல் என்பவற்றிற்குப் பதிலாக தன்னம்பிக் கையுடன் அவற்றுக்கு முகங்கொடுப்பதன் மூலம் சவால்களில் வெற்றி பெறலாம்.

## ஒலிம்பிக் வீராங்கனை - வில்மா ரெடொல்ப்

அமெரிக்காவின் நெஷ்வில் வைத்தியசாலையில் பிறந்த வில்மா, பல உடல் உபாதைகளுக்கு உட்பட்டிருந்தார். இரட்டை நியுமோனியா வினாலும் சிவப்புநிறத் தழும்புகளுடன்கூடிய காய்ச்சலாலும் அவர் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது கீழ்ப்பாதம் மேல்நோக்கியதாக அமைந்திருந்தது. அதனால், ஊன்றுகோலைப் பயன்படுத்தி பாதத்துக்கு உயிரூட்டவேண்டி இருந்தது. அது அவருக்குத் துன்பம் மிக்கதாக இருந்தது. ஆனால், தனது 11வது வயதில் தனது பாதத்துக்கு பயன்படுத்தும் ஊன்றுகோலினை முற்றாக அகற்றி விடலாம் என்ற நம்பிக்கை கொண்டார். தன்னம்பிக்கையுடன் அதிக உடற்பயிற்சியில் ஈடுபட்டார். பாதத்துக்கு உதவியாகப் பயன்படுத்தியவற்றையும் அவரே அகற்றி விட்டார். 12 வயதாகும்போது சாதாரண சிறுவர்கள் போன்று ஓடுவதற்கும் பாய்வதற்கும் விளையாடுவதற்கும் தன்னால் முடியும் என்பதை உணர்ந்து கொண்டார். பின்னர் பெரும் அர்ப்பணிப்புடன் விளையாட்டில் ஈடுபாடு கொண்டார்.

1956இல் மெல்பன் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றதுடன், 1960இல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் நிச்சயமாக முதலாம் இடத்தை வெற்றிகொள்வேன் என்று உள்ளத்தில் உறுதிகொண்டிருந்தார். கல்விச் செயற்பாடுகளில் பின்தங்கி இருந்தமையால் வெளிவேலை களுக்கும் குடும்பத்தில் அனுமதி கிடைக்கவில்லை. அதனால், வீட்டின் புகைபோக்கியின் துளையி வழியே திருட்டுத்தனமாக வீட்டிலிருந்து வெளியேறி இரவு 8.00 மணி முதல் 10.00 மணி வரை விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டார்.

1960ஆம் ஆண்டு உரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இவர் பார்வையாளர்களின் வெற்றிக் கரகோஷங்களுக்கு மத்தியில் பங்குபற்றினார். போட்டியில் பங்குபற்றுவதற்கு முன்னரேயே தான் தங்கப் பதக்கம் பெறப்போவதாக உள்ளத்தில் கற்பனை செய்தார். அந்த நினைவோடு மின்வேகத்தில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் ஓடிமுடித்து சாதனை படைத்துத் தங்கப் பதக்கம் வென்றார்.

இவ்வாறு சிறு பராயத்திலே ஊனமுற்றிருந்த சிறுமியான வில்மா பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர் சிலரின் உதவியுடன் நன்னிலைக்கு வந்தார். தன்னம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படின் எந்தவொரு சவாலையும் எம்மால் முறியடிக்க முடியும் என்பதை வில்மாவின் கதையில் இருந்து நாம் கற்றுக் கொள்ள முடிகிறது.

**சவால்களை வெற்றிகொள்ள மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்**

- வாழ்க்கையின் நோக்கம் அல்லது இலக்கைக் கட்டியெழுப்புதல்
- தகுந்த வாழ்க்கை முறையொன்றினைக் கட்டியெழுப்ப முன்வருதல்
- சரியாகத் தீர்மானம் எடுத்தல்
- ஆக்கத்திறன் சிந்தனையை வளர்த்தல்
- சமூகத்துக்கு நன்மை பயக்கக்கூடிய சக்திகளை இணைத்துக் கொள்ளல்
- மாற்றுவழிகளைத் தெரிவுசெய்தல்
- மூத்தவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ளல்
- சகல தோல்விகளையும் வாழ்க்கையின் அனுபவமாகக் கொள்ளல்
- தவறான எண்ணக்கருக்களை விட்டு நீங்கியிருத்தல்
- தனது செயற்பாடு குறித்து தன்னம்பிக்கையுடன் இருத்தல்
- திட்டமிட்டுச் செயலாற்றுதல்

எனவே, யாதாயினும் ஒரு சவாலைச் சிறப்பாக வெற்றி கொள்ளவதற்கு மேலே காணப்படும் திறன்களை எம்மில் வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

**செயற்பாடு 2-11**

- நீங்கள் எதிர்கொண்ட சவால்மிகு சந்தர்ப்பங்களை நினைவுகூருங்கள்.
- அதில் நீங்கள் வெற்றிபெற்ற, தோல்வி கண்ட சந்தர்ப்பங்களை நினைவுபடுத்துக
- அந்த சவால்களை வெற்றிக்கொள்ள அடிப்படையாக அமைந்த காரணிகளையும் தோல்விக்கு ஏதுவாய் இருந்த காரணிகளையும் வெவ்வேறாக எண்ணிப் பார்க்குக.
- சிறப்பான முறையில் சவால்களை வெற்றி கொள்வதற்கு உங்களால் விருத்தி செய்ய வேண்டிய பண்புகளைக் குறிப்பிடுக.
- சவால்களை வெற்றி கொண்டவர்களின் சுயசரிதைகளை வாசித்து அவற்றிலுள்ள முன்மாதிரிகளை வாழ்க்கைக்குப் பயன்படுத்துக.

## சமூக மேம்பாட்டுக்கான நமது கடமைகளும் பொறுப்புகளும்

கடமை என்பதன் மூலம் கருதப்படுவது யாதெனில் சமூகத்தின் இருப்புக்காக பிரசைகள் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்று வதற்குள்ள பிணைப்பாகும். இந்தப் பிணைப்பைச் சட்டம், நல்லொழுக்கம் என இருவகையாக வகைப்படுத்தலாம்.

| சட்டம் சார்ந்த கடமைகள் | நல்லொழுக்கம் சார்ந்த கடமைகள் |
|---|---|
| • அரசாங்கத்துக்குக் கட்டுப் படல்<br>• அரசாங்கச் சட்டங்களை மதித்தல்<br>• வரி செலுத்துதல்<br>• கடமைகளை முறையாக நிறைவேற்றல்<br>• சட்டத்தையும் சமாதானத் தையும் பேணுதல் | • பெற்றோரைப் பராமரித்தல்<br>• மூத்தோரை மதித்தல், கவனித்தல்<br>• சுயமரியாதை<br>• சம்பிரதாயங்களைப் பேணுதல்<br>• பிற சமயத்திற்கும் இனங்களுக்கும் மதிப்பளித்தல்<br>• தேசிய சின்னம், தேசிய வீரர்க ளுக்கு மதிப்பளித்தல் |

சட்டம்சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு சட்டத்திற்குக் கட்டுப் பட்டுள்ளோம். அதனைத் தட்டிக்கழித்தால் அதற்கெதிராக தண்டனை பெறுவோம். ஆகவே, சமூகநலன் கருதி, சட்டம் சார்ந்த கடமைகளைப் புறக்கணிக்காது நிறைவேற்றுவது ஒவ்வொரு பிரசையினதும் கடமை யாகும்.

நல்லொழுக்கம் சார்ந்த கடமைகள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவை அல்லவெனினும் இவை, மனசாட்சிக்கமைய நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும். இவற்றைப் புறக்கணிக்கின்றவர்கள் உடனடியாகத் தண்டனைக்கு உட்படாவிட்டாலும், சமூகம் அவர்களைப் புறக் கணிக்கும். கடமைகளைப் புறக்கணித்தல், காலங்கடத்துதல் போன்ற வற்றால் மனக்கவலை, மனக்குழப்பம், விரக்தி போன்றன ஏற்பட்டு மனித நடத்தையிலே பிறழ்வு ஏற்படும். உதாரணமாகத் தன்னைப் பெற்று வளர்த்து கல்வி வழங்கி, எதிர்காலம் வளமாக தமது சொத்துகளை வழங்கிய எமது பெற்றோரைக் கவனிக்காது விடல், நல்லொழுக்கம் சார்ந்த கடமையினைப் புறக்கணிப்பதாக அமையும். இதனால், இத்தகைய பிரசைகள் சமூகத்தின் புறக்கணிப்புக்கு ஆளாவர். ஆதலால் சட்டம் சார்ந்த கடமைகளுடன் நல்லொழுக்கம் சார்ந்த கடமைகளும் சமூகத்தின் வளர்ச் சிக்கு அவசியமாகின்றன.

**செயற்பாடு 2-12**

- உங்களால் மேற்கொள்ளப்படும் சட்டம் சார்ந்த கடமைகள் மற்றும் நல்லொழுக்கம் சார்ந்த கடமைகள் தொடர்பாக அட்டவணை ஒன்றைத் தயாரிக்குக.
- அவ்வாறான சந்தர்ப்பங்களை வரைந்து காட்டுக.

## பொறுப்புகள்

கடமையை நிறைவேற்றுவதற்கான பிணைப்பாக, பொறுப்பைக் குறிப்பி டலாம். சமூகத்தின் பிரசை என்ற வகையில் எமக்குப் பல பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

உ+ம் -

- பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவதுடன் அவற்றைப் பாதுகாக் கவும் வேண்டும்.
- சமூகத்தில் காணப்படும் சட்டதிட்டங்களை மதிக்க வேண்டும்.
- சமுதாயத்தின் நல்லாட்சிக்கு உதவ வேண்டும்.

இவ்வகையில் கடமைகளும் பொறுப்புகளும் எம்முடன் பின்னிப் பிணைந்துள்ளது. சமூகவளர்ச்சி உறுதிப்படுத்தப்படுவது இவ்வாறான பொறுப்புகள், கடமைகள் என்பவற்றின் அடிப்படையிலாகும்.

**கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் சமூகத்தில் பின்வரும் நன்மைகள் உண்டாகின்றன**

- சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல்
- சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்கும் பிரசைகள் உருவாகுதல்
- தவறு செய்வதற்குத் தூண்டப்படாமை
- சட்டத்தை மதிக்கும் பிரசைகள் உருவாக்குதல்
- தனதும் பிறரினதும் உரிமைகளை மதித்தல்

## சிறப்பானதும் கௌரவமானதுமான சமூகமொன்று உருவாகுதல்

ஒருவர் தனது பணியை அர்ப்பணிப்புடன் செய்யும்போது அது இலகுவாக அமைவதுடன் மனநிறைவையும் தரும். அது அவர்களுக்கு கௌரவத்தைப் பெற்றுத் தரும். இதன்மூலம் சமூகத்தின் செயற்பாடுகளும் சிறப்பாக அமையும்.

- பண்புமிக்க வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்ப முடிதல் காரணமாக சமூகத்தில் நல்லன நிகழ்கின்ற பொழுது பிரசைகளிடத்தில் சமூகம் பற்றி மிகுந்த நம்பிக்கை உண்டாகும். ஆகவே, சகலருக்கும் நல்வாழ்வுக்கான சந்தர்ப்பம் உண்டாகும்.
- அனைவருடனும் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேண முடியும்.

சமூகத்தில் கடமைகளும் பொறுப்புகளும் முறையாக நிறைவேற்றப் படுவதால் ஒவ்வொருவருக்கும் இடையிலான தொடர்புகள் அதிக ரிக்கின்றன. ஆதலால், ஆளிடைத் தொடர்புகளை சிறந்த முறையிலே இலகுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு இதன்மூலம் வாய்ப்புக்கள் உண்டாகின்றன.

**செயற்பாடு 2-13**

- உமது குடும்பத்தில் உமக்கு எத்தகைய பொறுப்புகள் தரப்பட்டுள்ளன ?
- உமக்குப் பாடசாலையில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் யாவை ?
- உமக்குக் குடும்பத்திலும் பாடசாலையிலும் வழங்கப்பட்டுள்ள பொறுப் புகளை நீர் எவ்வாறு நிறைவேற்றுவீர் என்று விளக்குக.

# 3 எமது கலாசாரம்



### அறிமுகம்

இலங்கை நாடு, பல இனங்களையும் மதங்களையும் சேர்ந்த பல்வேறு மொழிகளையும் பேசும் சமூகக் குழுக்களை உள்ளடக்கியதாகும். இந்த ஒவ்வொரு சமூகக் குழுவுக்குமென விசேட பண்புகளும் உள்ளன. அவ்வாறே சகல இனத்தவருக்கும் சகல மதத்தவருக்கும் பொதுவான கலாசாரப் பண்புகளும் உள்ளன. இத்தகைய இயல்புகளைக் கொண்ட இலங்கை மக்கட் சமூகத்தின் பிரசை என்ற வகையில் சமாதானம், சகவாழ்வு, சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கான திறமைகள், தேர்ச்சிகளை விருத்தி செய்வது இப்பாட அலகின் எதிர்பார்ப்பாகும்.

## பண்பாட்டை இனங்காணுதல்

ஒவ்வொரு சமூக முறைமையிலும் அதற்கென்று தனித்துவமான பண்பாடு உள்ளது. சமுதாயத்தில் உள்ள நபர்களின் நடத்தை மாதிரி, பழக்க வழக்கம் போன்ற அனைத்தையும் பொதுவாகப் பண்பாடு என்று குறிப்பிடலாம்.

சமூகத்தில் வாழும் பிரசைகளின் வாழ்க்கைமுறை அவர்கள் வாழும் காலப்பகுதியின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக ஒரு சமூக முறைமையொன்றில் காணப்படும் உணவு உட்கொள்ளும் முறைகள், மங்கல அமங்கல நிகழ்வுகளின்போது பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள், விதிகள், சமயக்கிரியைகள், வணக்க வழிபாட்டு முறைகள் ஆகியன அனைத்து கலாசாரங்களிலும் பின்பற்றப்படுகின்ற போதிலும் இதன் விசேட அம்சம் யாதெனில், இவை சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டுக் காணப்படுவதாகும். ஆகையால், ஒரு கலசாரத்திலிருந்து பிறிதொரு கலாசாரத்தையும் அதன் பண்பாட்டையும் இலகுவில் இனங்கண்டு கொள்ளலாம்.

## கலாசாரம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம்

கலாசாரம் தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. மானிடவியலாளர்களும் சமூகவியலாளர்களும் பல்வேறு பட்ட வகையில் அதனை விளக்கியுள்ளனர். அத்தகைய வரைவிலக்க ணங்களுள் ஒன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவு, வணக்க வழிபாடுகள், ஒழுக்கவியல், பழக்கவழக்கம், நீதி, கலைகள், சமூக உறுப்பினன் என்ற வகையில் மனிதன் அடைந்த அனுபவங்கள், திறமைகள், ஆற்றல்கள் ஆகியவற்றினதும் முழுமையே கலாசாரமாகும்.

E.B. டெய்லர்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை நோக்கும்போது மனிதனின் அனைத்துச் செயற்பாடுகளும் கலாசாரம் ஆகும் எனக் கொள்ளலாம். சமூகத்தில் மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான நடத்தைக் கோலங்களுக்கு ஏற்ப வாழப் பழகிக்கொள்வது கலாசாரத்தின் மூலமே யாகும். வேறு வகையில் கூறின் மனிதனை வழிநடத்துகின்ற, கட்டுப்ப டுத்துகின்ற சாதனம் கலாசாரமாகும். கலாசாரத்தின் மூலம் மனிதன் செய்யக் கூடியன, செய்யக் கூடாதன பற்றி சொல்லப்படுகின்றது. அதற்கான வழிகாட்டல் மேற்கொள்ளப்படுகின்றது. கலாசாரம் தொடர்பாக மேலும் தெளிவைப் பெற்றுக் கொள்வதற்காக கீழ்வரும் உரையாடலை வாசித்துப் பாருங்கள்.

விவேகானந்தாக் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களை அழைத்துக் கொண்டு கல்விச் சுற்றுலா செல்வதற்கு வகுப்புப் பொறுப்பா சிரியர்களும் பாட ஆசிரியர்களும் தீர்மானித்தனர். இக்கல்விச் சுற்றுலா அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களை மையமாகக் கொண்டு இரண்டு நாள் சுற்றுலாவாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட தினத்தில் சுற்றுலா செல்லத் தயாரானார்கள். சுற்றுலாவின் போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற உரையாடலின் ஒரு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

**ஆசிரியர் :** பிள்ளைகளே நான் உங்கள் அனைவருக்கும் சுற்றுலாவின் முக்கியத்துவம், பார்வையிடுகின்ற இடங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சொல்லித் தருவேன். அவற்றை குறித்துக் கொள்வதற்கு அப்பியாசப் புத்தகமும் பேனையும் கொண்டு வாருங்கள்.

**அன்சார்:** ரீச்சர், அங்கு ஒவ்வொரு கலாசாரத்திற்கும் உரிய பண் பாட்டுக் கூறுகளை கண்டு களிக்கலாம் அல்லவா?

**ஆசிரியை:** ஆம்...ஆம் அனுராதபுரத்திலும், பொலன்னறுவையிலும் பல கலைப் படைப்புக்களும் குளங்களும் காணப்படுகின்றன. அவை கலாசாரத்தின் கொடைகள். அவை பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிமையானவையல்ல. அவற்றுள் இந்து சமயத் தவர்களால் நிருமாணிக்கப்பட்டவையும் உள்ளன.

**பிரசன்னா:** ரீச்சர், பொலன்னறுவையில் உள்ள சில ஆலயங்கள் இந்து சமயத்தவர்களின் நிருமாணிப்பு என நான் கேள்விப்பட் டுள்ளேன்.

**ஆசிரியர்:** ஆமாம்...ஆமாம்... அவை இந்து சமயத்தவர்களின் நிருமாணிப்புகள் தான்.

**தயாபரன்:** ரீச்சர், கலாசாரத்துக்கு சொந்தமானவை வரலாற்று முக் கியத்துவம்வாய்ந்த இடங்களும் குளங்களும் வாவிகளும் விகாரைகளும் மட்டுமா?

**ஆசிரியை :** அதுவும் நல்ல கேள்வி தான்.... கலாசாரம் என்பது இவை மட்டுமல்ல. மனிதர்களது பழக்கவழக்கங்கள் கூட கலாசா ரத்தில் அடங்கும் நம்பிக்கைகள், உணவு உட்கொள்ளும் முறை, ஆடை அணிகலன்கள், பேச்சு, நடத்தை போன்ற அனைத்தும் கலாசாரத்தின் கூறுகளாகும்.

**பாத்திமா :** ரீச்சர்.... இவை அனைத்து மக்களுக்கும் அனைத்து சமயத் தவர்களுக்கும் பொதுவானதா?

**ஆசிரியை:** இல்லை... இல்லை.... நீங்கள் எல்லோரும் நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள். எல்லா மக்களுக்கும், எல்லா சமயத்தினருக்கும் கலாசாரம் உள்ளது. எனினும், அக் கலாசா ரங்கள் பல்வேறு அடிப்படையில் வேறுபடுகின்றன. எனினும், சில கலாசார அம்சங்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவை என்னவென்று தெரியுமா?

**துளசி** : எனக்குத் தெரியும் ரீச்சர்....

**ஆசிரியை** : சரி... நல்லது... என்னவென்று கூறுங்கள் பார்ப்போம்.

**துளசி** : மொழி, சமயம், கலைகள், ஆடை அணிகலன்கள், பழக்க வழக்கங்கள்.

**தேவகி** : ரீச்சர், அவை பொதுவானவையாயினும் இனத்துக்கு இனம் சமயத்துக்கு சமயம் வேறுபாடுகள் உண்டல்லவா?

**ஆசிரியை:** ஆமாம் மிகவும் சரி. தேவகி உங்களது கருத்தை மற்ற நண்பர்களுக்கும் விளங்கும் வகையில் தெளிவாகக் கூறுங்கள்.

**தேவகி** : இப்பொழுது பாருங்கள்.... எம் எல்லோருக்கும் ஆடை அணிகலன் பொதுவானவை. எனினும், சிங்கள மக்கள் ஒசரி, சேலை இரண்டினையும் அணிவார்கள். தமிழ் மக்கள் சேலையை அணிவார்கள். முஸ்லிம் மக்கள் பர்தாவை அணிவார்கள். அதைத்தான் நான் கூறினேன். பொதுத் தன்மைகள் இருப்பினும் அவற்றிடையே சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

**ஆசிரியை** : மிகவும் நல்லது... தேவகி உங்களுக்கு மிகவும் தெளிவாக விளக்கம் தந்தார். இன்னும் அது பற்றிய விளக்கம் இல்லா தவர்கள் இருப்பீர்கள் அல்லவா? அதை நான் சொல்லித் தருகிறேன்.

கலாசாரம் இனம், சமயம், பிரதேசம், சமூகம் என்ற அடிப் படையில் வேறுபடுகின்றது. தங்களுக்கே உரித்தான கலாசா ரத்தைக் **கலாசாரத் தனித்துவம்** என்று குறிப்பிடுவோம். இப்பொழுது அனைவருக்கும் கலாசாரம் என்றால் என்ன என்பது பற்றி விளங்கியிருக்கும் என நினைக்கிறேன். கலா சாரத் தனித்துவத்தை பாதுகாக்க அனைவரும் செயற்படு கிறார்கள். அது சிறந்ததாகும். கலாசாரத்தின் கூறுகள் என்றால் என்ன என்பது பற்றியும் விளங்கியிருக்கும். இப்பொழுது நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கின்றேன்

**பாத்திமா :** சரி ரீச்சர்.

**ஆசிரியை :** கலாசாரம் என்றால் என்ன? எளிய வரைவிலக்கணம் ஒன்றைக் கூறுங்கள் பார்ப்போம்.


**தயாபரன் :** ரீச்சர் ...கலாசாரம் என்பது நாம் உண்பன, அருந்துவன, அணிகின்றவை, பேசுகின்றவை ஆகியன மட்டுமல்ல. கலைகள், மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தும் கூடக்கலாசாரமாகும்.

**ஆசிரியை :** மிகவும் நல்லது. நான் நினைத்ததை விட சிறந்த பதிலை தயாபரன் கூறினார். மற்றவர்களும் தத்தமது வரைவிலக் கணங்களை அப்பியாசப் புத்தகங்களில் எழுதிக் கொள்ளுங்கள்.

## கலாசாரத்தின் அம்சங்கள்

எந்தவொரு சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கும் கலாசாரத்தின் பங்களிப்பு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. இவ்வாறே காலத்திற்கேற்ப கலாசாரம் பல மாற்றங்களுக்கு உட்படுவதையும் காண முடிகின்றது. சமூகத்திற்கு சமூகம் கலாசார வேறுபாடுகள் உண்டு என்பதை விசே டமாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு கலாசாரத்திற்கும் சிறப்பான பண்புகள் உள்ளன.

ஒவ்வொரு கலாசாரத்திலும் காணப்படுகின்ற கலாசார அம்சங்கள் பல வாகும். அவ்வப்போது அவை வேறுபடலாம். மொழி, சமயம், இலக் கியம், ஆடை அணிகலன் போன்றன கலாசார அம்சங்கள் சிலவற்றுக்கு உதாரணங்களாகும் .
கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தினை அவதானிப்பதன் மூலம் கலாசார அம்சங்கள் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளலாம்.




**செயற்பாடு 3-1**

- கலாசாரம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன என்பதை எளிய வரைவிலக்கணம் மூலம் குறிப்பிடுக.
- உமது பிரதேசத்தில் காணப்படும் மக்கள் பிரிவொன்றின் கலாசாரப் பண்புக் கூறுகளை அட்டவணைப்படுத்துக.

## அனைத்து கலாசாரங்களிலும் காணப்படும் பொதுவான பண்புகள்

சமூகத்துக்கு சமூகம் கலாசாரம் வேறுபடும். அவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவற்றுக்குரிய பொதுவான பண்புகள் பல உள்ளன. விசேடமாக பல் கலாசாரத்தையுடைய மனித சமுதாயத்தில் உறுப்பினராக வாழும் நாம் ஒவ்வொரு கலாசாரத்துக்கும் உரிய சிறப்பான கலாசாரப் பண்புகளை அறிந்து கொள்வது அவசியம்.

உ+ம் -

| | |
|---|---|
| கல்வி → | கலாசாரத்தைக் கையளித்தல் |
| பழக்க வழக்கங்கள் → | பெரியவர்களுக்கு மரியாதை செய்தல் |
| உணவும் பானமும் → | சோறு, மரக்கறி, பழவகை |

## ஒவ்வொரு கலாசாரத்துக்கும் உரிய தனித்துவமான பண்புகள்

ஒவ்வொரு கலாசாரத்துக்கும் பொதுப்பண்புகள் காணப்படுவது போன்று ஒவ்வொரு கலாசாரத்துக்கும் உரிய தனித்துவமான பண்புகளும் உள்ளன. கலாசாரங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற அம்சங்களாக இனம், மதம், மொழி, வாழ்க்கை முறை ஆகியன காணப்படுகின்றன.

உதாரணமாக, இலங்கை மக்கள் சமுதாயத்தில் சிங்களவர், தமிழர், முஸ் லிம்கள், பறங்கியர் மற்றும், மலாயர் ஆகிய பல இனத்தவர் வாழ்கின் றனர். இவ்ஒவ்வொரு இனத்தவருக்குமான சிறப்பான கலாசாரப் பண்புகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

## கலாசாரப் பல்வகைமைக்கான காரணிகள்

- இனம்
- சமயம்
- மொழி
- வாழ்க்கை முறைகள்

கலாசார பல்வகைமைக்கு ஏதுவான காரணிகள் பல உள்ளன. விசேட மாக இனம், சமயம், மொழி ஆகியவற்றுடன் வாழ்க்கைப் பாங்குகளும் இவற்றில் உள்ளடங்கும். இக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு

ஒரு கலாசாரத்திலிருந்து பிறிதொரு கலாசாரத்தை வேறுபடுத்தி அறிந்து கொள்ளலாம். இதனை கலாசாரத் தனித்துவம் என்றும் குறிப்பிடலாம்.

விசேடமாக, பல்கலாசார சமுதாயத்தில் வாழ்கின்ற பொழுது இக்கலா சார தனித்துவங்களை அறிந்து கொள்வது மிகவும் முக்கியம். இத்தகைய கலாசாரப் பண்புகளை இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பதும் அவசியம். அப்பொழுது தான் கலாசாரங்களுக்கு இடையிலான ஆளிடைத் தொடர்புகள் கட்டியெழுப்பப்படும். அவற்றின் மூலம் சமுதாய சக வாழ்வு ஏற்படுவதுடன் சமூக இணக்கப்பாடும் ஏற்படும்.

## இலங்கை வாழ் சமூகத்தின் கலாசாரப் பல்வகைமை


பல்வகைக் கலாசாரத்தைக் கொண்ட சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக இலங்கையைக் குறிப்பிடலாம். எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பிரதான மூன்று இனத்தவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு பறங்கியர் மற்றும் மலாயர் போன்ற இனத்தவர்களும் சகோதரத்துவத்துடன் இலங்கை சமூகத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோ, லிக்கம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களைப் பின்பற்றும் மதத்தவர்கள் இங்கே வாழ்கின்றனர். எனவே, சமயசகவாழ்வும் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலான வணக்கத்தலங்கள் எல்லா சமயத்தவர்களுக்கும் பொதுவான இடங்களாகக் காணப்படுவதும் விசேட அம்சமாகும். கதிர்காம ஆலயம், முன்னேஸ்வரம், மடு தேவாலயம், தலவில புனித அன்னம்மாள் ஆலயம், சிவனொளி பாதமலை என்பன இவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இந்த இடங்களைத் தரிசிப்பதற்காக யாத்திரிகர்கள் சமய வேறுபாடின்றி வருகை தருகின்றார்கள்.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் எமது நாட்டின் பிரதான மொழிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியையும் தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியையும் கற்பதை தற்பொழுது எமது பாடசாலைச் சூழலில் காணலாம். இத்தன்மை மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவை தவிர இலங்கையில் அனைத்து மக்களும் சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் பயன்படுத்துகின்றனர். நாம் ஒவ்வொருவரும் தாய் மொழியை மட்டுமன்றி நாட்டில் இருக்கின்ற பிற மொழிகளையும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பழகிக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

இவ்வாறு எமது நாட்டில் பல இனங்கள், சமயங்கள் மற்றும் மொழிகள் காணப்படுவதால் இலங்கையைப் பல்கலாசார சமூகம் கொண்ட ஒரு நாடு எனக் குறிப்பிடலாம். அவ்வாறான பல்கலாசார சமூகத்தில் சமாதான மாகவும், ஒத்துழைப்புடனும் செயலாற்றுவது அவசியமாகும். அதற்காக நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவது மிக முக்கியம்.

**எமது சமூகத்தில் காணப்படும் பல்கலாசார பண்புக்கூறுகள்**




**பல இனத்தவருக்கும் பல சமயத்தவருக்குமுரிய தனித்துவமான பண்புகள்**

பல இனத்தவருக்கும் பல சமயத்தவருக்கும் என தனித்துவமான சில கலாசாரப் பண்புக் கூறுகள் உண்டு. மொழி, மதம், ஆடை அணிகள், கலைகள், கல்வி ஆகிய அனைத்தும் கலாசாரத்துக்குரிய பொதுவான பண்புகளாக இருப்பினும், ஒவ்வொரு இனத்தவருக்கும் சமய ரீதியிலான கலாசாரப் பண்புகள் வேறுபடும்.



உரு 3.1
தமிழ் சிங்களப் புத்தாண்டு விழா



உரு 3.2
தைப்பொங்கல்



உரு 3.3
வெசாக் பொசொன் தின விழாக்கள்




உரு 3.4
நோன்புப் பெருநாள்



உரு 3.5
ஹஜ்ஜுப் பெருநாள்

உரு 3.6
*நத்தார்ப் பண்டிகை*

இவைதவிர மேலும் பல கலாசாரப் பண்புகளும் சமூகங்களில் உள்ளன. உதாரணமாக திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள், முதன் முதலில் குழந்தைக்கு அன்னம் ஊட்டும் நிகழ்வு, தலைமுடி சிரைக்கும் சம்பிர தாயம், புதுமனை புகுதல் ஆகிய கலாசார அம்சங்கள் போன்றன ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான பண்புகளாகும்.

## கலாசாரத்தின் பண்புகள்

ஒவ்வொரு கலாசாரத்திற்கும் உரிய கலாசாரப் பண்புகள் உள்ளன. இக் கலாசாரப் பண்புகளைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குதல் வேண்டும். சமூகத்தில் காணப்படும் பழக்கவழக்கங்கள், கலைகள், ஆகியன கலாசாரத்தின் அம்சங்களாகும். இவற்றைப் பாதுகாத்துப் பேணி வருவதோடு எதிர்காலச் சந்ததியினரிடம் ஒப்படைப்பது வரவேற்கத் தக்கதாகும்.

பன்மைத்துவக் கலாசார சமூகத்தின் பிரசை எனும் வகையில் செயற்படுகையில் பிற கலாசாரங்களுக்கும் கலாசாரப் பண்புகளுக்கும் மதிப்பளிப்பதன் வாயிலாக சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

**செயற்பாடு 3-2**

- இலங்கை சமூகத்தின் கலாசாரத் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் தகவல்கள் சிலவற்றைச் சேகரிக்குக.
- அவற்றை இனம், சமயம், மொழி என்ற அடிப்படையில் வேறுபடுத்தி, கலாசாரத்தின் கொடைகளை ஏன் பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிடுக.
- நீங்கள் எழுதிய வாக்கியங்களை வகுப்பறையில் முன்வைக்குக

**கலாசாரப் பண்புகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்**

அனைத்துக் கலாசாரங்களினது கலாசாரப் பண்புகளையும் அவற்றின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது அனைத்து பிரசைகளின் கடமையும் பொறுப்புமாகும். கலாசாரத்தின் கொடைகளைப், பாதுகாப்பதன் மூலம் அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்குரிய வாய்ப்பு உருவாகும். இதன்மூலம் எமது கலாசார தனித்துவம் தொடர்பான அபிமானம் உண்டாகும். எடுத்துக்காட்டாக, அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் அமைந்துள்ள விகாரைகள், தாதுகோபங்கள், குளக்கட்டுகள் போன்ற கலாசார அம்சங்களினூடாக இலங்கையின் கலாசாரத்தின் அபிமானத்தை உலகிற்கு வெளிப்படுத்தலாம். கலாசாரப் பொக்கிசங்களைப் பாதுகாத்தல் தொடர்பாக ஒரு நாட்டினது பிரசை என்ற வகையில் நாம் கைக்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பல உண்டு. அவற்றுள் சில வருமாறு,

- கலாசாரத்தின் கொடைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பிறருக்கு அறிவூட்டுதல்
- கலாசாரத்தின் கொடைகளாகக் கருதப்படுபவற்றுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலிருந்து விலகியிருத்தலும் அவற்றுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துபவர்களை அச்செயற்பாடுகளிலிருந்து விலகியிருக்கச் செய்தலும்
- கலாசாரத்தின் கொடைகள் பாதிப்படைவதைக் கண்டால் அது தொடர்பான தகவல்களை அதற்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு அறியத் தருதல்

உ+ம் :- பொலிஸ் நிலையம், கலாசாரத் திணைக்களம், தொல் பொருளியல் திணைக்களம் போன்றன.

**செயற்பாடு 3-3**

- கலாசாரத்தின் கொடைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக சுவர்ப்பத்திரிகைக்குக் கட்டுரையொன்று எழுதுக.



உரு 3.7
பொலன்னறுவைக் கல்விகாரை



உரு 3.8
அனுராதபுர சந்திரவட்டக் கல்



உரு 3.9
தாமரைப் பொய்கை




உரு 3.10
பராக்கிரம சமுத்திரம்



உரு 3.11
அனுராதபுர சமாதி  புத்தர் சிலை



உரு 3.12
சிகிரியா



உரு 3.13
கதிர்காம கோயில்




உரு 3.14
மடு தேவாலயம்



உரு 3.15
முதலாவது முஸ்லிம் பள்ளிவாசல்



உரு 3.16
நல்லூரார் கந்தசுவாமி கோயில்

கலாசார சின்னங்களைப் பாதுகாத்தல் தொடர்பான சட்ட திட்டங்களுக்கு அமைய நடத்தல் நம் அனைவரதும் கடமை. அது இயல்பாகவே எம்மில் ஏற்பட வேண்டியதொன்று. தொல்பொருளியல் மட்டுமன்றி சமய ரீதியில்

பெறுமதிமிக்க கலாசாரச் சின்னங்களைத் தமது சுய இலாபம், பயன்பாடு என்பவற்றுக்காக அழித்துவிடாது, அவற்றைப் பாதுகாப்பது தொடர்பாக நாம் திடமாக உறுதிபூணல் வேண்டும். அவற்றின் பெறுமதியினைக் கணிப்பிட்டே இதற்கான சட்ட விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. விசேடமாக, ஒரு சிலரால் இலாப நோக்கம் கருதி பெறுமதிமிக்க கலாசாரச் சின்னங்கள் நாசம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பான செய்திகளை பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான நபர்களுக்கு எதிராகக் குரலெழுப்புவது எம் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும். இவற்றுக்கு எதிராக சட்டரீதியாகவும் செயற்படலாம்.

நாம் அனைவரும் கலாசாரச் சின்னங்களைப் பாதுகாத்தற் பொருட்டு அது தொடர்பான ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கின்றோம் என்பதை மறந்துவிடலாகாது. சட்டத்திற்குக் கட்டுபடுவது மட்டுமல்லாமல் அது தொடர்பான ஒழுக்கப் பண்புகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

### குடும்பத்தின் மூலமாகக் கலாசாரத்தைக் கையளித்தல்

ஒரு பரம்பரையிலிருந்து இன்னொரு பரம்பரைக்கு கலாசாரத்தைக் கையளிப்பதில் முதன்மை அலகாகக் காணப்படுவது குடும்பமாகும். தாய், தந்தை, மூத்தவர்கள், சகோதர சகோதரிகள், தாத்தா, பாட்டி, போன்ற உறவினர்கள் மூலம் இக்கலாசார பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. அவர்கள் கலாசாரத்தைக் கையளிப்போராகக் கருதப்படுகின்றனர்.

எடுத்துக்காட்டாக சிங்கள, தமிழ் புத்தாண்டு வைபவங்களின்போது மருத்துநீர் தேய்த்தல், பால்பொங்க வைத்தல், சுபநேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்தல் போன்ற கலாசார அம்சங்களை மூத்தோர் மூலம் தம் பிள்ளைகளுக்கும் அவ்வாறு செய்வதன் மூலம் பிள்ளைகளும் அப்பழக்கத்தை அவ்வாறே தொடருவார்கள். இவ்வாறு கலாசாரத்தைக் கையளித்தல் தொடர்பில் நேரடியாக குடும்பங்கள் பங்களிப்புச் செய்கின்றன. அவை பெற்றோர்களாலும் மூத்தோர்களாலும் அயலவராலும் ஆற்றப்படவேண்டிய கடமைகளாகும். பாடசாலை, வணக்கத்தலங்கள், கலாசாரத்தைக் கையளித்தல் தொடர்பாகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களாகக் செயற்படுகின்றன.



உரு 3.17
புத்தரிசிப் பொங்கல்



உரு 3.18
ஏர்பூட்டு விழா



உரு 3.19
உணவு பரிமாறல்



உரு 3.20
தலைக்கு எண்ணெய் தேய்த்தல்

**செயற்பாடு 3-4**

- கலாசாரத்தை ஒப்படைத்தல் குடும்பத்தின் பிரதான பணியாகும். உங்களுக்கு குடும்பத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கலாசார அம்சங்கள் சிலவற்றை நினைவுகூருங்கள்.
- அருகிலுள்ள உங்களது நண்பருடன் இது பற்றிக் கலந்துரையடுங்கள்.
- அவற்றுள் சிலவற்றை அப்பியாசப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு 3-5**

- தமது கலாசாரத்திற்குரிய கலாசார மரபுரிமை சிலவற்றை பெயரிடுக.
- அவற்றுள் நீங்கள் மிகவும் விரும்புகின்ற இரண்டு கலாசார மரபுரிமைகள் தொடர்பாகத் தகவல் சேகரிக்குக.

## கலாசாரத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

கலாசாரத்தைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதற்காக சகல இனக் குழுக்களும், மொழி மற்றும் மதக்குழுக்களும் முயற்சிசெய்து கொண்டிருக்கின்றன. அதன்மூலம் கலாசார தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது. அதனூடாக நாட்டின் தேசிய தனித்துவம், தேசிய அபிமானம் ஆகியனவும் பாதுகாக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ''இலங்கையர் '' என்ற தனித்துவத்தை உலகிற்குப் பறைசாற்றுவதற்கு இந்நாட்டுக் கலாசாரம் பங்களிப்புச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக இலங்கையின் பண்டைக்கால கட்டட அமைப்புகள், கோட்டைகள், அரண்கள், குளங்கள், வாவிகள், எம்நாட்டு பயிர்கள் மற்றும் அதனுடன் இணைந்த மக்கள் வாழ்க்கை, சமய பழக்கவழக்கங்கள் என்பன இலங்கையின் தனித்துவத்தை வெளிக்காட்டும் முக்கிய அம்சங்களாகும்.




உரு 3.21
நீர்ப்பாசனக் குளம்



உரு 3.22
காலிக்கோட்டை



உரு 3.23
துறைமுகம்



உரு 3.24
சிகிரியா

அவ்வாறே தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது தொடர்பாக தமது கலாசார தனித்துவத்தைப் பாதுகாப்பதுடன் பிற கலாசாரங்களுக்கும் மதிப்பளித்து அவற்றை பாதுகாப்பது தொடர்பாகச் செயற்படுதல் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகுக்கும். அது அனைத்து கலாசாரக்குழுக்களிடையேயும் நட்பு, நம்பிக்கை ஆகியன விருத்தியடையவும் வழிகோலும், சிறப்பாக ''இலங்கையர்'' என்ற உணர்வு ஏற்படுவதற்கு இது பேருதவியாக அமையும்.

பல்கலாசார சமூகத்தின் பண்புகள், உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதும் சகவாழ்வுடன் செயலாற்றுவதும் தேசிய அபிமானத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும்.

## தேசிய தனித்துவத்தை வெளிப்படுத்தும் சின்னங்கள்

இன்று பல நாடுகளிலும் பல்கலாசார சமூக முறைமை காணப்படுகின்றது. கலாசார சமூகம் என்பதனால் கருதப்படுவது யாதெனில், ஒரு நாட்டி னுள் பல்வேறு சமயம்சார்ந்த, மொழிசார்ந்த, இனம்சார்ந்த மக்கள் வாழ்கின்றமையைக் குறிக்கும். அவ்வாறான சமூக முறைமையினுள் ஒவ்வொரு பிரிவினர்க்கும் விசேடமான தனித்துவம்மிக்க அம்சங் கள் காணப்படுவதுடன் அவற்றைப் பாதுகாப்பதும் அவசியமானதாக உள்ளது. அவ்வாறு பாதுகாக்கப்படாவிடில், இக்குழுக்கள் அல்லது பிரிவினரிடையே மோதல்கள் உருவாகலாம்.


பல்கலாசார சமூகத்தினுள் சகல பிரசைகளும் தேசியம் என்ற வகையில் ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயலாற்றுவது தேசிய தனித்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகுக்கும்.

எமது நாட்டில் வாழும் பல்லின, சமய மொழி பேசுவோர் அனைவரும் ஒன்றிணைந்து ''இலங்கையர்'' என்ற உணர்வுடன் செயலாற்றுவது தேசிய தனித்துவத்தைக் காப்பதற்கு ஏதுவாக அமையும்.

இலங்கையின் தேசிய தனித்துவத்தை எடுத்துக்காட்டும் சின்னங்களாகச் தேசியக் கொடி, தேசிய கீதம், அரச இலச்சினை, தேசிய மரம், தேசிய மலர், தேசிய பறவை, தேசிய விளையாட்டு என்பன விளங்குகின்றன.

## தேசியக் கொடி

எமது நாட்டின் தேசியத் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவதாக தேசியக் கொடி விளங்குகின்றது. இலங்கையின் தற்போதைய தேசியக்கொடி ஸ்ரீவிக்கிரம இராஜசிங்க மன்னனால் பயன்படுத்தப்பட்ட புரதான அரச கொடியினைத் தழுவி நிருமாணிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது எமது நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற தேசியக்கொடி, சிங்கக்கொடி எனவும் அழைக்கப்படுகின்றது.



உரு 3.25
தேசியக் கொடி

1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி அப்போதைய இலங்கையின் முதல் பிரதமமந்திரியாகக் கடமையாற்றிய டீ.எஸ்.சேனாநாயக்க அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவினரின் சிபாரிசுக்கு இணங்க தற்போதைய தேசியக் கொடி நிருமாணிக்கப்பட்டது. தேசியக் கொடியின் நிருமாணக் குழுவின் அங்கத்தவர்களாக பின்வருவோர் இடம்பெற்றனர்.

- எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் (குழுத்தலைவர்)
- சேர். ஜோன் கொத்தலாவல அவர்கள்
- ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள்
- டீ.பீ. ஜாயா அவர்கள்
- எல்.ஏ. ராஜபக்ஷ அவர்கள்
- ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள்
- எஸ். நடேசன் அவர்கள்
- பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்கள் (செயலாளர்)



தேசியக்கொடியின் நிருமாணிப்புக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க நிருமாணிக்கப்பட்ட தேசியக் கொடி 1951 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1951ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பழைய பாராளுமன்றத்தின் முன்னால் பிரதான கொடிக் கம்பத்தில் இந்தத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. 1972இல் தேசியக் கொடியின் நான்கு மூலைகளிலும் காணப்பட்ட சம்பிரதாய பூர்வமான பழைய அரச இலைகள் நீக்கப்பட்டு தற்பொழுது காணப்படும் அரச இலைகள் நான்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

## தேசியகொடியிலுள்ளஅடையாளங்கள்மூலம்புலப்படுத்தப்படும் கருத்துக்கள்

**சிங்கம்** - சிங்கள இனம், சிங்கள இனத்தவரின் ஒழுக்க சீலம், துணிவு, அபிமானம் மற்றும் தலைமைத்துவம், நியாயத் தன்மை

**வாள்** - தார்மீகம், நீதி, நியாயமாக நாட்டை ஆட்சி செய்வதுடன் தாய்நாட்டைப் பாதுகாத்தல்

**வெள்ளரசு இலைகள் நான்கு** - காருண்யம், கருணை, மகிழ்ச்சி, சாந்தம் ஆகிய நான்கு பிரதான பண்புகளுக்குட்பட்ட சகல சமயத்தினையும் மதிக்கின்ற மேலான பண்பு

**கடும் சிவப்பு நிறம் -** இலங்கையின் சகல இன மக்களினதும் வாழ்வின் உயிர்நாடி மற்றும் பண்டைய சிங்கள இராசதானியைப் பிரதிநிதித்துவம் செய்தல்

**கொடியின் இடப்பக்கத்தில் பச்சை மற்றும் செம்மஞ்சள் நிறக் கோடுகள்** - செம்மஞ்சள் நிறக் கோட்டின் மூலம் தமிழ் இனத்தவரையும் பச்சை நிறக்கோட்டின் மூலம் முஸ்லிம் இனத்தவரையும் (Moor) பிரதிநிதித்துவப்படுத்தல்.

**கொடியைச் சுற்றி ஒரே சமமான அளவில் காணப்படும் மஞ்சள் நிறம்** - சகல இனத்தவரிடத்திலும் ஒற்றுமை, சமாதானம், ஞானம், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளல்

**சிங்கத்தின் சிரசிலுள்ள கேசரம் மற்றும் சிங்கத்தின் வாலின் வளைந்த மேல் பகுதி** - ஆட்சியாளருக்கும் நாட்டு மக்களுக்கும் இடையே காணப்படும் சமத்துவம்

தற்போதைய ஆறாவது அரசியல் யாப்பின் 06ஆவது பிரிவில் தேசியக் கொடி தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக 2 ஆவது உபபிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> ‘‘ இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தேசியக்கொடி, 2 ஆம் உபபிரிவில் குறிப்பிட்டுள்ள சிங்கக் கொடியாகும்’’

எமது நாட்டின் தற்போதைய தேசியக்கொடியின் தரம் இலங்கைத்தர நிருணய சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டதாகும். தேசியக் கொடியின் சரியான அமைப்பு, அளவு மற்றும் வர்ணங்கள் இதற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எஸ்.எல்.எஸ் (SLS) 693 : 1985 என்ற இலக்கத்தில் இலங்கை தேசியக் கொடி தொடர்பான இத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## தேசிய கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள்


- அரசாங்க வைபவங்களின்போது
- தேசிய வைபவங்களின்போது
- தேசிய தலைவர்களின் மாநாடுகளின்போது
- பாடசாலைகள் அல்லது நிறுவனங்களின் முக்கிய விழாக்களின்போது

**தேசியக் கொடியை காட்சிப்படுத்தும் பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

- தெளிவாகத் தெரியக்கூடிய இடத்தில் கொடியை ஏற்றுதல்
- நெடுக்கான வர்ணக் கோடுகள் இரண்டும் கொடிக்கம்பத்தின் பக்கம் இருக்கும் வண்ணம் கொடியை ஏற்றுதல்
- சகல வைபவங்களின் பொழுதும் தேசியக் கொடிக்கு முக்கியத்துவமளித்தல்
- வேறு எந்தக் கொடியையும் இக்கொடிக்கு மேலால் உயர்த்தாதிருத்தல்
- பிறநாட்டு தேசிய கொடிகளை ஏற்றும்பொழுது சமமான உயரத்தில் வைத்தல்/ இலங்கை தேசிய கொடியை இடப்புறமாக வைத்தல்/சகல தேசிய கொடிகளும் சம அளவில் இருத்தல்
- இரவு நேரங்களில் ஏற்றி வைப்பதாயின் மின்சார ஒளி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- சமயம் தொடர்பான கொடிகளுடன் ஏற்றும் பொழுது சம உயரத்தில் வைத்தல்
- பிரதேசக் கொடிகள், சங்கங்கள், பாடசாலைகள்,மற்றும் வேறு நிறுவனங்களினதும் கொடிகளை ஏற்றும்பொழுது அவற்றிற்கு மத்தியில், அவற்றை விட உயரத்தில் தேசியகொடி இருக்க வேண்டும்.
- அடுத்தடுத்துக் காணப்படும் கொடிக்கம்பங்கள் பலவற்றில் கொடிகள் ஏற்றியுள்ள பொழுது முதலாவது கம்பத்தில் ஏற்றுதல் மற்றும் இறுதிக் கம்பத்தில் இறக்குதல்.
- கட்டடமொன்றின் யன்னலினூடாக அல்லது அவ்வாறான வேறு ஓர் இடத்தில் கொடியை ஏற்றி வைக்கும் பொழுது கொடிக் கம்பம் புவிக்கு 45 பாகை சாய்வில் அமையும் வண்ணம் ஏற்ற வேண்டும்.
- தெருவின் மத்தியில் காட்சிப்படுத்துகின்றபொழுது சிங்கம் புவிக்கு சமாந்தரமாக இருக்குமாறு கொடி கிடையாக, நீள்பக்கமாக தொங்க விடப்பட வேண்டும்.

- பேச்சு மேடையொன்றில் ஏற்றி வைக்கும் பொழுது பேச்சாளர் சபைக்கு சமுகமளித்ததன் பின்னர் அவருடைய வலப்பக்கம் இருக்குமாறு கொடிக்கம்பத்தின் உச்சியில் ஏற்றி வைத்தல்/ பேச்சாளருக்கு பின்னால் சுவருடன் சேர்த்து இருந்தால் அவரை விட கொடியினை உயரத்தில் ஏற்றி வைத்தல்.

- பெரகராவின் போது கொண்டு செல்வதாயின் ஊர்வலத்தின் வலப் பக்கமாகக் கொண்டு செல்லல். வேறு கொடிகளுடன் கொண்டு செல்வதாயின் கொடி வரிசைகளின் மத்தியில் முன்னால் கொண்டு செல்லப்பட வேண்டும்.



தேசியக் கொடியை ஏற்றுதல் | வீதியின் நடுவே காணப்படும் தேசியக்கொடி | 45⁰ சாய்வில் ஏற்றப்பட்டுள்ள தேசியக்கொடி

மூலம் : தேசிய கொடியை பயன்படுத்தும் ஒழுங்குவிதி நூல் (1987) பக்கம் 29,34,35

உரு 3.26

## விழாவொன்றில் தேசியக்கொடியை ஏற்றும்பொழுது பின்பற்ற வேண்டிய விதிகள்

- ஏற்றுவதற்கு முன்னர் கயிற்றில் இணைத்து மடித்து உயரமான இடத்தில் வைத்தல்

- கொடியை ஏற்றுபவர் தயார்நிலையில் நின்று ஏற்றுதல்

- ஏனைய அனைவரும் எழுந்து, கொடி இருக்கும் பக்கம் முன்நோக்கி தயார்நிலையில் நிற்றல்

- ஏற்றுதல் மற்றும் கீழே இறக்குதல் என்பவற்றை அமைதியுடனும் கௌரவத்துடனும் செய்தல்

- கொடியை ஏற்றுகின்றபொழுது இயலுமான சந்தர்ப்பங்களில் மங்கள வாத்தியம் இசைத்தல் மற்றும் சங்கீத நாதம் இசைத்தல்
- கொடியை ஏற்றி முடித்த பின்னர் அனைவரும் நிமிர்ந்த நிலையில் நின்று தேசிய கீதம் பாட வேண்டும்.

### தேசியகொடி அரைக்கம்பத்தில் ஏற்றப்படுகின்ற பொழுது பின்பற்ற வேண்டிய விதிகள்

- அரசாங்கத்தினால் பிரகடனஞ் செய்யப்பட்ட தேசிய துக்க தினங்களில் மாத்திரம் அரைக்கம்பத்தில் ஏற்றுதல்.
- முதலில் கொடியைக் கொடிக்கம்பத்தின் உச்சிவரை ஏற்றிவிட்டு பின்னர் அரைக்கம்பத்தின் உரிய இடம் வரையில் தாழ்த்த வேண்டும்.
- கொடிமரத்தின் உச்சியிலிருந்து கொடிமரத்தின் உயரத்தின் 1/3 பகுதி அளவு தாழ்த்த வேண்டும்.
- குறிப்பிட்ட நாளின் இறுதியில் கொடியை கீழிறக்குவதற்கு முன்னர் அதனை மீண்டும் உச்சி வரை ஏற்றி விட்டு பின்னர் கீழிறக்க வேண்டும்.

### கல்வி நிறுவனங்களில் தேசியக் கொடியை ஏற்றும் பொழுது பின்பற்ற வேண்டிய விதிகள்

- சகல பாடசாலைத் தவணைகளின் ஆரம்பத்திலும் மற்றும் தவணையில் வருகின்ற ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் ஏற்றுதல்
- அரசாங்கத்தினால் பணிக்கப்படுகின்ற விசேட தினங்களில் ஏற்றுதல்
- பரிசளிப்பு வைபவங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் ஏற்றுதல்

### தேசியக்கொடியைப் பயன்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை

- பழுதடைந்த அலங்கோலமான கொடியைக் காட்சிப்படுத்தாதிருத்தல்
- அலங்காரப் பொருளாகப் பயன்படுத்தாதிருத்தல்

- சிங்கத்தை தலைகீழாகக் காட்சிப்படுத்தாதிருத்தல்
- நிலத்தைத் தொடாதவாறு கவனித்துக் கொள்ளல்
- ஆடையாக, விரிப்பாகப் பயன்படுத்தாதிருத்தல்
- எந்தவொரு இலச்சினையையும் படங்களையும் வர்ணங்களையும், சித்திரங்களையும் கொடியின் மேல் வைக்காதிருத்தல்
- விளையாட்டுச் சீருடையாகப் பயன்படுத்தாதிருத்தல் (இராணுவம், தீயணைக்கும் படை, மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் சீருடையில் கொடியின் இலச்சினையொன்றை வைத்துத் தைத்துக் கொள்ளலாம்)

**செயற்பாடு 3-6**

- ஆசிரியரின் அறிவுரைக்கமைய சரியான நிலையைப் பின்பற்றி தேசியக் கொடியை ஏற்றுக.
- ஆசிரியரின் அறிவுரைக்கமைய சரியான நிலையைப் பின்பற்றி தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றும் முறையை செய்து பார்க்க.

## தேசியக் கீதம்

தேசியக் கொடியைப் போன்றே தேசியகீதமும் நாட்டின் தேசியத் தனித்து வத்தை எடுத்துக் காட்டும் அடையாளமாகும். எமது நாட்டு தேசிய கீதம் ''ஸ்ரீ லங்கா தாயே'' என்பதாகும். இத்தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரகோன் அவர்களாவார்.

நாட்டுப் பிரசைகளுக்கு தமது தாய்நாட்டைப் பற்றிய அபிமானம், அன்பு, கௌரவம், பக்தி ஏற்படுவதற்குத் தேசிய கீதம் முக்கியமானதாகும். அனைத்து இன, சமய, மொழி, மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சகலரும் சமம் என்ற உணர்வை ஏற்படுத்தவும் தேசிய கீதம் உதவுகிறது.

## தேசிய கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்கள்

- தேசிய விழாக்கள்
- அரச வைபவங்கள்

- இலங்கையில் நடைபெறும் அரச தலைவர்களது கூட்டங்கள்/மாநாடுகள்
- பாடசாலை மற்றும் வேறு பொதுவான முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள்
- இலங்கையர் பங்குகொள்ளும் சர்வதேசப் போட்டிகள்
- ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள்

### எமது நாட்டுத் தேசியகீதம் இயற்றப்பட்டதன் பின்னணி

எமது நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர், ஆரம்பத்தில் எமது நாட்டுக்கு தேசிய கீதமொன்று இருக்கவில்லை. அதனால் தேசிய கீதம் இயற்றும் போட்டியொன்று நடத்தப்பட்டு தேசிய கீதமொன்றினைத் தெரிவு செய்யும் பொறுப்பு இலங்கை சங்கீத சபைக்கு வழங்கப்பட்டது. இயற்றப்படும் தேசிய கீதங்களில் மொழி மற்றும் கருத்துகள் தொடர்பாக சீர்தூக்கிப்பார்ப்பதற்கு சிங்கள மற்றும் தமிழ் நடுவர் குழுவொன்றும் நியமிக்கப்ப்பட்டது.

அந்த நடுவர் குழுவின் அங்கத்தவர்கள் வருமாறு,

திரு. எஸ். எல். கபுகொட்டுவ

திரு. எல்.எல்.கே. குணதுங்க

திரு. லயனல் எதிரிசிங்க

திரு. பீ. டீ. இலங்கசிங்க

கலாநிதி ஓ. எச். பீ.ஏ. விஜயசேகர

திரு. ஈ. ஏ. அபேசேகர

கலாநிதி ரீ.பீ. ஜாயா

சேர் பொன்னம்பலம் இராமநாதன்

எஸ். நடேசன்

இந்தப் போட்டி 1948 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி நடத்தப்பட்டது. இதில் ஆனந்த சமரகோன் அவர்களால் இயற்றப்பட்ட ‘‘நமோ நமோ தாயே’’ என்ற கீதமும் முன்வைக்கப்பட்டது. இப்போட்டியில் பீ.டி இலங்கசிங்க அவர்களால் இசையமைக்கப்பட்ட ‘‘இலங்கைத் தாயின்

புகழ்மிகு மகிமையே'' என்ற பாடலே வெற்றி பெற்றது. அதற்கமைய 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் முதலாவது சுதந்திரதின விழாவின் பொழுது இப்பாடல் இசைக்கப் பட்டது. எனினும், நடுவர் குழாத்திலிருந்த இருவரால் இப்பாடல் இயற்றப்பட்டிருப்பதை அறிந்த பொதுமக்கள் இதனை எதிர்த்தனர். அதன் காரணமாக இப்பாடலை நீக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பின்னர், இரண்டாவது சுதந்திரதின விழாவின் பொழுது ஆனந்த சமர கோன் என்பவரால் இயற்றப்பட்ட ''நமோ நமோ தாயே''என்ற பாடல் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 1951 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இப்பாடல் எமது நாட்டின் தேசிய கீதமாக அமைய வேண்டும் என பாராளுமன்ற அமைச்சரவைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ''நமோ நமோ தாயே'' என்ற முதல் அடிகளைக் கொண்ட வரி ''ஸ்ரீ லங்கா தாயே'' என மாற்றி இயற்றப்பட்டது.

1978 ஆம் ஆண்டு அரசியல் திட்ட யாப்பின் 7 ஆவது உபபிரிவில் எமது நாட்டு தேசிய கீதம் ''ஸ்ரீ லங்கா தாயே'' என்ற பாடலாகும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலுள்ள சொற்கள் மற்றும் தாளம் என்பன யாப்பின் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய கீதம் ''ஸ்ரீலங்கா தாயே'' என்ற கீதமாகும் என தேசிய கீதத்தின் சொற்களும், இசையும் 3 ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய கீதத்தில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்வதாயின் பாராளுமன் றத்தில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு மக்கள் அனுமதியைப் பெற வேண்டும்.

எமது நாட்டின் தேசிய கீதம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து இலவச பாடநூல்களின் ஆரம்பத்திலும் தரப்பட்டுள்ளது. அதனைச் சரியாக உச்சரிப்புடன் தாளத்திற்கேற்ப இசைப்பது உங்கள் கடமையும் பொறுப்பும் ஆகும். அவ்வாறே தேசிய கீதத்தை இசைக்கும் பொழுது நிமிர்ந்த நிலையில் நின்று அதற்கு மரியாதை செலுத்துதல் வேண்டும்.



உரு 3.27
தேசிய கீதம் பாடும் பொழுது நிமிர்ந்து நிற்றல்

## அரச இலச்சினை

அரசாங்கத்தின் உரிமை மட்டுமன்றி தனித்துவத்தை உறுதிப்படுத்துகின்ற அடையாளமே அரச இலச்சினையாகும். தற்பொழுது எமது நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற அரச இலச்சினை 1972 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இலங்கை குடியரசு நாடாக மாற்றப்பட்டதன் ஞாபகார்த்தமாக அரச இலச்சி னை உருவாக்கப் பட்டது. அரசாங்கத்திற்கு உரியது என்பதனை உறுதி செய்வதற்கு அரச இலச்சினை பயன்படுத்தப்படுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

நாணயங்கள், நாணயத்தாள்கள், அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கடிதத் தலைப்புகள், கடவுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை போன்ற வற்றில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அரச இலச்சினையின் உரிமை, அதனை உபயோகிக்கும் அதிகாரம் என்பன நாட்டின் ஜனாதிபதிக்கு உரியன. அதற்கு மதிப்பளித்தலும் அதனைப் பாதுகாத்தலும் அனைவரினதும் கடமையாகும். பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த சமயத்தில் எமது நாட்டில் சிங்க உரு பொறிக்கப்பட்ட பிரித்தானிய இலச்சினையே பயன்படுத்தப்பட்டது. சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பூவிதழ்களுடன் கூடிய வட்டமொன்றினுள் சிங்கம், அதற்கு மேலால் கிரீடம், கீழ் பகுதியில் இலங்கை என்றும் குறிக்கப்பட்ட இலச் சினை பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது நாம் பயன்படுத்துகின்ற அரச இலச்சினையை நிருமாணித்தவர் எஸ்.எம். செனவிரத்ன ஆவார். இவர் ஒரு சித்திரக் கலைஞராவார். இவ்விலச்சினையில் பயன்படுத்தப்பட்டுள்ள

அடையாளங்கள் மூலம் கருத்திற் கொள்ளப்படும் விடயங்களாவன;



உரு 3.28
*அரச இலச்சினை*

| | |
|---|---|
| தருமச் சக்கரம் | - தருமமும் சமத்துவமும் |
| நெற்கதிர் | - செழிப்பு / தன்னிறைவு |
| சிங்கம் | - வீரம் |
| பூவிதழ் | - பரிசு/ தூய்மை |
| கலசம் | - சௌபாக்கியம் |
| சூரியன், சந்திரன் | - நிலையான இருப்பு |

## தேசிய மரம்

இலங்கையின் தேசிய மரம் நாக மரமாகும். நாகமரத்தின் தாவரவியல் பெயர் *Mesua Ferrea* L.M. என்பனதாகும். 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி இலங்கையின் தேசிய விருட்சமாக நாகமரத்தைப் பிரகடனம் செய்தமைக்கான காரணங்கள் பலவாகும். அவையாவன,

இலங்கைக்கே உரித்தான தாவரம்

அதன் பயன்கள்

வரலாற்று மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம்

அலங்காரம் மற்றும் அழகு

இலங்கை எங்கும் பரவிக் காணப்படல்

பிறிதொரு நாட்டின் தேசிய அடையாளமாகப் பயன்படுத்தப்படாமை



உரு 3.29



உரு 3.30

நாகமரம்

பண்டைக் காலந்தொட்டு பூசிக்கப்பட்டு வந்துள்ளது. பௌத்த குருமார் நாகமர நிழலில் ஞானநிலையை அடைந்ததாக பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**பல்வேறு மொழிகளில் நாக மரத்துக்கு வழங்கப்படும் பெயர்கள்**

| | |
|---|---|
| சிங்களம் | - நா |
| ஹிந்தி | - நாகேஸ்வர |
| தமிழ் | - நாகமரம் |
| ஆங்கிலம் | - அயன்வூட்ரீ |

இலங்கையில் தாழ்நில ஈர வலயத்திலும் வரண்ட வலயத்திலும் அதிகமாக வளரும் நாகமரம் பன்சலை மற்றும் தேவாலயங்களின் நிருமாணப் பணிக ளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. பண்டைக் காலத்தில் மரத்தினாலான பாலங்கள் அமைப்பதற்கு நாகமரப் பலகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாகமரம் மருத்துவக் குணங்கள் கொண்டதாகவும் உள்ளது. அதன் வேர், பட்டை, பூ, மகரந்தம், காய், தளிர், இலை ஆகிய அனைத்தும் மருந் துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நாகமரப் பூவின் மகரந்தம் வாச னைத் திரவிய உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன், பண்டைய காலத்தில் சிறு பிள்ளைகளின் தலையணைகளுக்கு இம்மரத்தின் மலர்கள் நிரப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## தேசிய மலர்

இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலமாகும். இதன் தாவரவியற் பெயர் *Nymphaea nouchali* Burm.f. என்பதாகும். சேற்று நிலம் மற்றும் நீர்நிலைகளில் வளரும் நீலோற்பல மலர் இளம் நீலம் - ஊதா நிற முடையதாக இருக்கும். சூரியஒளி கிடைக்கும் பொழுது மலர்ந்து, சூரியன் மறைந்ததும் வாடிவிடும்.



உரு 3.31
நீலோற்பலம்

## தேசியமலரின் பின்னணியும் முக்கியத்துவமும்

தேசியமலராக நீலோற்பலத்தைத் தெரிவுசெய்தமைக்கான காரணங்கள் பல உண்டு. அதன் பயன்பாடு, கலாசார அம்சங்கள், வரலாற்று முக்கியத்துவம், விஞ்ஞானம் மற்றும் அழகியல் சார்ந்த பண்புகளைக் கொண்டு இது தெரிவு செய்யப்பட்டமை முக்கிய அம்சமாகும். மேலும், தேசிய தாவர வகையாக இருத்தல், நாட்டின் எல்லா இடங்களிலும் வளரக் கூடியதாயிருத்தல், இம்மலரை தேசிய மலராக வேறு நாடுகள் பயன்படுத்தாதிருத்தல் ஆகிய காரணங்களும் இதில் அடங்குகின்றன.

தேசிய மலராக தாமரை மலர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது அக்காலத்தில் பலரது கருத்தாக இருந்தது. எனினும், இந்தியாவின் தேசியமலர் தாமரை என்பதால் அந்த ஆலோசனை கைவிடப்பட்டது. பின்னர் 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இலங்கையின் தேசிய மலராக நீலோற்பலம் தெரிவு செய்யப்பட்டது.

நீலோற்பலம் சித்திரக்கலையிலும் காவியங்களிலும் தேசிய வைத்தியத் துறையிலும் கூட முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. சிவனொளிபாத மலையில் புத்தருடைய பாதச்சுவடு பதிக்கப்பட்டுள்ள இடத்தில் காணப்படும் மங்கள அடையாளங்கள் 108இல் இரு நீலோற்பல மலர்களும் அடையாளமிடப்பட்டிருப்பதாக பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆகவே, நீலோற்பல மலர் ஒரு மங்கள சின்ன மாகவும் கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். அத்துடன் சீகிரிய ஓவியங்களிலுள்ள அழகிய நங்கைகளின் கரங்களில் நீலோற்பல மற்றும் தாமரை மலர் காணப்படுவதாக சீகிரியச் சுவரோவியக் கவிதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய வைத்தியத்தில் நீலோற்பலமலர் மிக முக்கிய பொருளாகக் கொள்ளப்படுகிறது. அதன் கிழங்கு, தண்டு, மகரந்தம், வித்து ஆகிய அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணம் உடையனவாகும்.

**நீலோற்பல மலருக்கு பல்வேறு மொழிகளில் வழங்கப்பட்டுள்ள பெயர்கள்**

| | |
|---|---|
| சிங்களம் | - மானெல் / நிலுபுல் |
| ஹிந்தி | - நீலோற்பல |
| தமிழ் | - நீலோற்பலம் |
| ஆங்கிலம் | - புளு வோட்டர் லில்லி (Blue Water Lilly) |

ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரமாக நீலோற்பலம் காணப்படுகின்றது. தாழ்நாட்டுப் பிரதேசங்களில் ஆழம் குறைந்த நதிகள், அருவிகள், குளங்கள் ஆகியவற்றில் செழிப்பாக வளரும் நிம்பியா குடும்பத்துக்குரிய ஒரு தாவரமாக இது கொள்ளப்படுகிறது. அத்துடன் பல்வேறு புதிய இயல்புகளையுடைய பூக்களை உருவாக்குகின்ற விசேட ஆற்றல் நீலோற்பல மலருக்கு இருப்பதன் காரணமாக பூ அலங்காரத்திற்கு பிரசி த்தமான தாவரமாகவும் இது காணப்படுகின்றது.

## தேசியப் பறவை

எமது நாட்டின் தேசியப் பறவை காட்டுக் கோழி (Jungle Fowl) ஆகும். இலங்கையில் காட்டுக்கோழிகளை நாடெங்கிலுமுள்ள வனங்களை அண்டிய பகுதிகளில் காணலாம். இவை கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை. ஆபத்துகளை அறிந்ததும் உடனே கலவரமடைவதும், பாதுகாப்பிற்காக உயரமான இடங்களை நோக்கிச் செல்வதும் இதன் பழக்கமாகும். தமது உறுப்பினர்களுக்கு ஆபத்துகுறித்த செய்தியை ஒலி எழுப்பி அறிவிக்கும். தானியம், காய், இலை வகைகள், சிறு பூச்சிகள், பூ, மொட்டு ஆகியவற்றை உணவாகக் கொள்ளும். இதன் சேவல் இனம் சூரியன் உதிக்கும் பொழுது கூவும். ஆபத்தின்றி வனாந்தரங்களுக்கு அண்மையிலுள்ள வீடுகளுக்குச் சென்று இவை இரை தேடுவதை நீங்கள் சில வேளைகளில் அவதானிப்பீர்கள்.



உரு 3.32
காட்டுக்கோழி

இன்று அருகிவரும் உயிரினங்களில் காட்டுக் கோழியும் ஒன்று. அதனால் காட்டுக் கோழிகளைப் பிடித்தல், அவற்றை வைத்திருத்தல், அவற்றைக் கொல்லுதல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆகவே, தேசிய வளமாகக் கருதி இவற்றைப் பாதுகாப்பது பிரசை என்ற வகையில் நம் அனைவரினதும் கடமையாகும்.

## தேசிய விளையாட்டு

எமது நாட்டின் தேசிய விளையாட்டு வொலிபோல் (Volleyball) ஆகும். எல்லே விளையாட்டை தேசிய விளையாட்டாகக் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டாலும் சர்வதேசரீதியில் எல்லே

விளையாட்டை விளையாடுவதிலுள்ள இடர்பாடுகளைக் கவனத்திற் கொண்டு இவ்வாலோசனை நடைமுறைப்படுத்தப்படவில்லை. சமா தானம், ஒற்றுமை, பங்கேற்றல், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு ஆகிய உயர் பண்புகளை மெருகேற்றும் வகையில் இவ்விளையாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தமிழ், சிங்கள புத்தாண்டு விழா, பாடசாலை விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றில் பரவலாக இவ்விளையாட்டு விளையாடப்படுகின்றது.

வொலிபோல் விளையாட்டு உலகில் முதன்முதலாக 1885 ஆம் ஆண்டில் அமெரிக்கா ஐக்கிய குடியரசின் ஹோலியோக் நகரத்தில் ஆரம்பிக் கப்பட்டது. இவ்விளையாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை வில்லியம் ஜீ மோகனையே சாரும்.

எமது நாட்டுக்கு வொலிபோல் விளையாட்டு 1916 ஆம் ஆண்டு அமெரிக்க இனத்தவரான ரொபர்ட் வோல்டர் என்ற விளையாட்டு அதிகாரியினால் அறிமுகம் செய்யப்பட்டது. இதனைக் குழு விளை யாட்டாக ஒத்துழைப்புடன் விளையாடுவதன் மூலம் வெற்றி பெறலாம். குழுவிலுள்ள சகல வீரர்களும் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்காது நிறைவேற்றவதன் மூலம் வெற்றிகளை அடையலாம். மேலும், இடவசதி குறைந்த இடத்திலும் இவ்விளையாட்டை விளையாடலாம். நாடு முழுவதும் பரந்தளவில் இவ்விளையாட்டு பிரபல்யமடைந்துள்ளது. இத்தகைய காரணங்களைக் கருத்திற் கொண்டே இலங்கையின் தேசிய விளையாட்டாக வொலிபோல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



உரு 3.33
வொலிபோல் விளையாடப்படும் சந்தர்ப்பம்

## தமது கலாசார தனித்துவத்தினை அடையாளம் காணல்

ஏதேனும் ஒரு இனத்திற்கு, சமயக் குழுவுக்கு அல்லது சமூகத்திற்கு மட்டுமே உரித்துடைய கலாசார, அம்சங்கள் கலாசார தனித்துவம் என்றழைக்கப்படும். மூத்தோருடன் அவர்களுக்கு சமமான முறையில் இருக்கைகளில் அமராமை, மூத்தோரின் உரையாடல்களில் கலந்துகொள்ளாமை போன்ற இத்தகைய கலாசார தனித்துவத்திற்கு எடுத்துக்காட்டாகும். நாம் எமது கலாசார தனித்துவத்தைப் பேணுவதுடன் ஏனைய இனத்தவரது கலாசாரதனித்துவங்களுக்கும் மதிப்பளிக்கப் பழகுதல் வேண்டும். ஏனைய இனத்தவரது கலாசார அம்சங்களை இழிவுபடுத்தல், அவற்றை விமர்சித்தல், அகௌரவப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடலாகாது. எமது கலாசார அம்சங்களுக்கு நாம் எவ்வாறு மதிப்பளிக்கின்றோமோ அவற்றை எவ்வாறு பேணுகின்றோமோ அவ்வாறே ஏனைய இனத்தவரது கலாசார தனித்துவங்களுக்கும் மதிப்பளிக்கப் பழகுதல் வேண்டும். இது ஒரு சிறந்த நற்பிரசையினது கடமையும் பொறுப்புமாகும். அப்பொழுது தான் இனங்களுக்கிடையே அந்நியோன்னியமும், நம்பிக்கையும் மதிப்பும் மரியாதையும் உருவாகும். இது மோதல்கள் அற்ற சமாதானமான அமைதியான சூழல் உருவாக வழிகோலும்.

## சமூக விழுமியம்

சமுதாய உருவாக்கமானது பிரசைகள் பலரினது கூட்டு முயற்சியினால் உண்டாகின்றது. பிரசைகளின் குணப்பண்புகள் மூலம் முழுச் சமுதாயமும் பண்பில் சிறந்த சமுதாயமாக மாறலாம். காலங்காலமாக சமுதாய முறைமையினுள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்புகள் சட்ட ரீதியானதாக அமையாவிட்டாலும் முழுச் சமுதாயத்தையும் கட்டுப்படுத்தக் கூடிய, வழிநடத்தக்கூடிய, நிருவகிக்கக் கூடிய பிரதான அம்சமாக விழுமியங்கள் காணப்படுகின்றன.

### பிரசைகளிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய விழுமியங்களாவன

- ஒழுக்கம்
- பொறுமை
- நேர்மை
- குரோதமற்ற மனப்பாங்கு
- பொது நலன்
- எளிமை

- அர்ப்பணிப்பு
- நட்புடைமை
- கருணை

## சமுதாய நற்பண்புகளுக்கு விழுமியங்களின் அவசியம்

சமுதாய பண்புகளைக் கருத்திற் கொண்டு நாட்டின் சகல பிரசைகளும் விழுமியங்களைப் பின்பற்றுவது அத்தியாவசியமாகும். சமுதாயத்தின் நற்பண்புகளுக்குக் காரணமாக அமைவது அச்சமுதாயத்தில் வாழ்கின்ற பிரசைகளினால் பாதுகாக்கப்படுகின்ற விழுமியங்களாகும்.

அன்றாட வாழ்வில் நாம் விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்வதுடன் அவற்றைக் கடைபிடித்து வாழ்வது முக்கியமாகும். விசேடமாக, எமது வீடு, வணக்கத்தலங்கள், சேவைபுரியும் இடங்கள் போன்ற சகல இடங்களிலும் பொருத்தமானவாறு அந்தந்த இடத்திற்குரிய வகையில் விழுமியங்களைப் பாதுகாத்து அவற்றுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

மனிதனது வெற்றி, அவனிடம் காணப்படும் குணப்பண்புகளிலேயே தங்கியுள்ளது. மனிதனின் முன்னேற்றத்தில் விழுமியங்கள் முக்கிய மாகின்றன. அவற்றை எமது வாழ்க்கைக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மனிதனது அன்றாட செயற்பாடுகளிலும் விழுமியங்கள் இணைத்துக் கொள்ளப்படுதல் மிகவும் அவசியம். அப்பொழுது தான் சிறப்புமிக்க சமூகமொன்றை உருவாக்கலாம்.

நன் மக்களின் பண்புகள் தொடர்பாக நீதி நூலான நாலடியாரில் கூறப்படும் சில பாக்களை நோக்குவோம்.

இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோடு இன்ன - குடிப் பிறந்தார்
குன்றா ஒழுக்கமாகக் கொண்டார் கயவரோடு
ஒன்றா உணரற்பாற்று அன்று

(குடிப்பிறப்பு 143)

பெரியோரைக் கண்டதும் இருக்கையை விட்டு எழுதலும், எதிரே சென்று இன் முகத்துடன் வரவேற்றலும், மற்றும் அவர் பிரியும்போது அவர் பின்னே சென்று வழியனுப்புதலும் ஆகிய இவை போன்ற செயல்கள் நல்ல குடியில் பிறந்தவர்கள் சிறந்த ஒழுக்கமாகக் கொள்வார்கள். இத்தகைய தகுதிகள் கீழ்மக்களிடம் காணப்படா.

*(எதிர் செலவு - எதிரே சென்று வரவேற்றல்).*

**கள்ளார்; கள்உண்ணார்; கடிவ கடிந்துஒரீஇ**
**எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் - தள்ளியும்**
**வாயின்பொய் கூறார்; வடுஅறு காட்சியார்**
**சாயின் பரிவது இலர்.**

**(மேன் மக்கள் - 157)**

குற்றமில்லாத அறிவுடையவர், பிறருக்கு உரிமையான பொருளை திருடமாட்டார்; கள் அருந்த மாட்டார்; வீண் செயல்களை வெறுத்து, விலகி நிற்பார்; மற்றவரைத் தாழ்வாக எண்ணி இழிவாகப் பேச மாட்டார்; தவறியும் பொய் உரைக்க மாட்டார்; சிறப்பு நிலை குன்றித் தளர்ச்சியும் சோர்வும் அடைந்த போதும், அதற்காக வருத்தமும் அடைய மாட்டார்!

*(கடிவ கடிந்து - நீக்க வேண்டியவைகளை நீக்கி; ஒரீஇ - விலகி நின்று; தள்ளியும் - தவறிப் போயும்; சாயின் - சரிவு ஏற்பட்டால்; பரிவது - வருந்துவது).*

### செயற்பாடு 3-7

- கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கக்கூடிய கவிதைகள், பாடல்கள் என்பவற்றை மனனம் செய்து வகுப்பறையில் முன்வைக்குக.
- கலாசார விழுமியங்களைப் பின்பற்றுவதால் உங்களுக்கும் சமூகத்திற்கும் கிடைக்கக் கூடிய பயன்களைச் சுருக்கமாக வகுப்பறையில் சமர்ப்பிக்குக.